இதழ் 227

# மண்

ஜேர்மனி / 2024

புரட்டாதி - ஐப்பசி / Sep - Oct



**Professor Dr. Father Xavier S. Thaninayagam**

**Founder of the International Association for Tamil Research**

தமிழுக்கு அணிசேர்த்த தனிநாயகம் அடிகளார்

**(02.08.1913 - 01.09.1980)**

மண் சஞ்சிகையின் வாசகர் (Oberhausen) திரு பரமானந்தம் பிரபாகரன் அவர்களின் நிதிப்பங்களிப்பில் அவரின் தாயாரின் 2வது நினைவாண்டையொட்டி மல்லாவி - துணுக்காயிலுள்ள ''ஒளிரும் வாழ்வு'' இல்லத்தினரால் பராமரிக்கப்படும் ஆதரவற்றோர், மாற்றுத்திறனாளிகள், முதியோருக்கு 07.08.2024 அன்று உணவு வழங்கல்..









மண் சஞ்சிகையின் வாசகர் (Selm) செல்வி ஷரீகா சிவநாதன் அவர்களின் நிதிப்பங்களிப்பில் (தாலி, கூறை, பட்டுவேட்டி, பணம்) மல்லாவி - துணுக்காயிலுள்ள ''ஒளிரும் வாழ்வு'' இல்லத்தினரால் பராமரிக்கப்படும் எழைப்பெண் ஒருவருக்கு 22.08.2024 அன்று திருமணம் செய்து வைக்கப்பட்டது.









# உள்ளே

- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி

முகவரி: V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

தொலைபேசி: 0203/8073898

015254799233

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de

வங்கிவிபரம்: Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# ஆசிரியர் பக்கம்...



இவர்களில் யார்?..அடுத்த ஜனாதிபதி?.......

நாட்டின் 9வது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் 21.09.2024 அன்று நடைபெறவுள்ளது. ஜனாதிபதி தேர்தலில் 4 முனைப்போட்டி.... கேள்விக்குறியாகும் 51 வீதம்!

இலங்கையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக 39 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். இருப்பினும் இவர்களில் 20 பேர்வரை காணாமல் போய்விட்டனர். கடந்த காலங்களைவிட இம்முறை தேர்தல் மிகவும் போட்டித்தன்மை வாய்ந்ததாக இருக்கும். எனினும் ஜனாதிபதியாக வருபவர் 50 வீதத்திற்கும் மேற்பட்ட வாக்குகளை பெற வேண்டும். இதற்காக விருப்பு வாக்கு என்ற முறைமையும் வாக்களிப்பில் கொண்டுவரப்படும். 50 வீதத்திற்கு மேல் எவரும் பெறாவிட்டால் தேர்தல் இரத்தாகும்.மறுபடியும் தேர்தல் நடத்த வேண்டிய நிலை ஏற்படும். இருந்தாலும் நாடாளுமன்ற பெரும்பான்மையை பெற்றுக் கொண்டு இருக்கின்ற ஆட்சி தொடரவும் வாய்ப்பு உள்ளது.

இம்முறை விருப்பு வாக்குகளே ஜனாதினதியை தீர்மானிக்கும்இன்றைய நிலையில் 1.ரணில் விக்கிரமசிங்க 2.சஜித் பிரேமதாச 3.நாமல் ராஜபக்ஷ 4.அநுர குமார திஸ்ஸாநாயக்க ஆகிய 4 பேருக்கும் இடையே பாரிய போட்டி நிலவும். இதனால் 51 வீதத்தை பெற்றுக் கொள்வது கடினமான விடயமாக இருக்கும். இதனால் விருப்பு வாக்குகள் எண்ணப்பட்டு அதில் 51 வீதத்தை எட்டுபவர் ஜனாதியதியாகும் வாய்ப்பு உள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட 9வது ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் இத்தேர்தலில் ரணில் 19 வருடங்களின் பின்பு போட்டியிடுகின்றார். 1999, 2025 ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர். சஜித்தும் 2019 கோத்தபாயாவுடன் போட்டியிட்டுத் தோல்வி. அனுரகுமாரவும் 2019 தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வி. நாமல் ராஜபக்ஸ முதல்தடவையாகப் போட்டி.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி வேட்பாளருக்கு 50.000 ரூபாவும் சுயேட்சையாகப் போட்டியிடுபவர்களுக்கு 75.000 ரூபாவும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். தேர்தல் கடமைகளில் சுமார் 54.000 பொலிசாரும் 2 லட்சம் அரச உத்தியோகத்தர்களும் கடமைபுரிவார்கள். 13.000 வாக்களிப்பு நிலையங்களில் வாக்குப்பதிவு இடம்பெறும்.மொத்தமாக வாக்களிக்கத் தகுதி பெற்றோர் 1.71.40.354 இவர்களில் தபால் மூலம் தகுதிபெற்றோர் 7.12.321 பேராவர்.மொத்தச் செலவு 10 மில்லியன் ரூபா என தேர்தல் திணைக்களம் கணிப்பிட்டுள்ளது.

இலங்கை வரலாற்றிலேயே அதிக வேட்பாளர்கள் போட்டியிடும் ஜனாதிபதி தேர்தலாக 2024ஆம் ஆண்டுக்கான தேர்தல் பதிவாகியுள்ளது.மிகுந்த பரபரப்புக்கு மத்தியில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட அதிகளவான வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்கள்.

ஜனாதிபதி வேட்பாளர்கள் கடந்த 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 35 பேர் கட்டுப்பணம் செலுத்தியிருந்தனர்.1982ஆம் ஆண்டு இலங்கையில் முதன்முறையாக நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது 06 வேட்பாளர்களும் 1988ஆம் ஆண்டு 3 வேட்பாளர்களும் போட்டியிட்டனர்.அதன் பின்னர் 1994 ஆம் ஆண்டு 06 பேரும், 1999 ஆம் ஆண்டு 13 பேரும், 2005 ஆம் ஆண்டு 13 பேரும், 2010 ஆம் ஆண்டு 22 பேரும், 2015 ஆம் ஆண்டு19 பேரும் போட்டியிட்டனர்.

தமிழ்ப்பொது வேட்பாளராக இந்தமுறை பெரும் எதிர்பார்ப்பில் மட்டக்களப்பைச் சேர்ந்த திரு பா அரியநேத்திரன் போட்டியிடுகின்றார். வரலாற்றில் தமிழர்தரப்பு வாக்குகளை அதிகம் பெறுவார் என்பது சந்தேகமில்லை. வெல்வதற்காக இல்லை..தமிழ் மக்களின் அபிலாசைகளை உலகிற்கு வெளிப்படுத்துவதற்காகவே போட்டியிடுகிறார். வரவேற்கத்தக்கது. இவரின் தேர்தல் பரப்புரைகளை " தமிழ்த் தேசிய பொதுச்சபை" என்னும் கட்டமைப்பு (இதில் 7 தமிழ்த் தேசிய கட்சிகளும் 80 பொது சிவில் கட்டமைப்புகளும்) மேற்கொண்டு வருகின்றன. இவர் வெற்றிபெறமாட்டார் என்பது யாவருக்கும் தெரிந்த விடையம்தான் இருந்தபோதும் அவர் ஏற்படுத்தப் போகும் தாக்கம் பிரதான சிங்கள வேட்பாளர்களுக்குக் கேள்விதான். இந்த விடயம் நான்கு பிரதான வேட்பாளர்களுக்கும் நிட்சயம் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கின்றது.

இப்படி இருக்கையில் செல்வாக்கை இழந்திருக்கும் தமிழரசுக்கட்சி இரண்டாகப் பிளவுபட்டுப் பலர் தமிழ்பொது வேட்பாளரை ஆதரிக்க இன்னும்சிலர் சஜித்தை ஆதரிக்கிறார்கள். இவற்றைவிட ஏற்கனவே மந்திரியாக இருந்தவர் டக்ளஸ், அங்கயன் போன்றவர்களும் ரணிலுக்கு ஆதரவளிக்கின்றார்கள். அதேவேளை வழமைபோல வாக்குறுதிகளை நம்பி ஏமார்ந்த வரலாறு இனியும் தொடரக்கூடாது என்ற நிலையில்தான் தமிழ்ப்பொது வேட்பாளர் களமிறக்கப்பட்டார். தமிழ்ப் பொது வேட்பாளர் இத்தேர்தல்களத்தில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துவார் என்று தேர்தல்வரை நாம் எதிர்பார்ப்போம்.

இலங்கைத்திருநாட்டை இதுவரை 8 ஜனாதிபதிகள் ஆட்சிபுரிந்திருக்கிறார்கள். அனைவரும் தேர்தல் வந்தால் எத்தனையோ வாக்குறுதிகளை கூறிச்சென்றார்கள். இறுதியில் அனைத்துமே நிறைவேற்றியதாக இல்லை. இதுதான் வழமையாக நடைபெறுவது. யுத்தம் முடிந்தும் 15 ஆண்டுகள் கடந்தும் அனைத்து மக்களின் பிரச்சனைகள் தீர்ந்தபாடில்லை. தாம் ஜனாதிபதியாக வந்தால் அனைத்தையும் செய்வோம் என வாக்குறுதி அளிப்பர். ஆனால் செய்வது கிடையாது. குறிப்பாக சிறுபான்மை இனங்களான தமிழ்பேசும் இனங்களின் பிரச்சனைகள் மிக நீண்டகாலமாகத் தொடர்கதையாகத்தான் உள்ளன.

யார் ஜனாதிபதியாக வந்தாலும் தமிழ்பேசும் மக்களின் குறிப்பாக வடகிழக்கு தமிழ்மக்களின் அரசியல், சமூக, கல்வி, பொருளாதார பிரச்சனைகளுக்கு தீர்வு கிட்டுமா? என்பது கேள்விக்குறிதான். அரசியல்வாதிகள் எப்படியும் பிழைத்துக்கொள்வார்கள் இவர்களைத் தெரிவுசெய்யும் மக்கள்தான் இறுதியில் வெறுங்கையோடு அல்லலப்படுவார்கள் என்பது உறுதி.. ஆகவே அரசியல், கல்வி, சமூக, பொருளாதார மாற்றத்திற்கு அனைத்து இன மக்களும் தொடர்ந்து போராட வேண்டிய சூழ்நிலைதான் காணப்படுவதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். யார் ஜனாதிபதியாக வந்தாலும் தமிழ்பேசும் மக்களுக்கு விடிவு கிடைக்குமா? என்பது சந்தேகம்தான். பொறுத்திருந்து பார்ப்போம்!..

(சில தகவல்கள் 66ம் பக்கத்தில்)

**-ஆசிரியர் - 10.09.2024-**

## சிறுவர் வட்டம்...




### ஆத்திசூடி....

### கேள்வி முயல்..

இன்று ஏராளமான நீதி நூல்கள் இருக்கின்றன. படித்துப் பயன்பெறலாம். ஆனால் அத்தனை நூல்களையும் நம்மால் படித்துவிட முடியுமா?.. முடியாது. ஆகவே அறிவில் சிறந்த பெரியோர்கள் பல நூல்களைப்படித்த அறிஞர்கள் உரையாற்றும் கூட்டங்களுக்குப் போக வேண்டும். அவர்கள் பேசுவதை உன்னிப்பாகக் கேட்கவேண்டும். அவர்கள் கூறும் அரிய கருத்துக்களைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.. நாம் படித்துத் தெரிந்து கொள்ளுவதைவிட அறிஞர்கள் சொல்லும் பல நூல்களின் பொருட்களைக் கேட்பதனால் அவை மனதில் ஆழமாகப் பதியும். பல நூல்களைப் படித்த பெரியோர்கள் சொல்லும் நூல்ப் பொருட்களைக் கேட்க நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். முயல் என்றால் முயல்க்குட்டியல்ல!.. முயற்சி செய் என்று பொருள்...

### கைவினை கரவேல்..

இது இயந்திர யுகம். மனிதன் கையினால் செய்த பல வேலைகளை இன்று இயந்திரம் செய்து குவிக்கின்றது. ஆனாலும் கைவினைக்கு உள்ள மதிப்பே தனிதான். கைவினை என்றால் கைத்தொழில், சட்டி பானை செய்தல்,பாய் பின்னுதல், ஆடை நெய்தல், கூடை முடைதல் போன்ற பல்வேறு கைத்தொழில்களில் உனக்கு ஒரு கைத்தொழில் கைவந்த கலையாக இருக்கலாம்.. நாகரிகப் படிப்பும் படித்து நீ பெரியவனானதும் சின்ன வயதில் பெற்றோரிடமிருந்து அறிந்த கைத்தொழிலை இழிவாக நினைக்கின்றாய். உனக்கு அத்தொழில் தெரியுமா?.. என்று யாராவது கேட்கும் போது நீ உண்மையகை் கூறலாம். "அதுவா எனக்குத் தெரியாதே" என்று மறைத்துப் பொய் பேசுகிறாய். இப்படி உனக்குத் தெரிந்த ஒரு கைத்தொழிலை, தெரியாது என்று கூறுவது தவறு. கரவேல் என்றால் மறைக்காதே என்று பொருள்...

# நல்நெறிபற்றி........

(வி நந்தகுமார்)

**பிறந்தநாளில் புதுமைகள் பெறுங்கள்..**

அன்புடையோர், அனைத்தும் அடைவர்.
ஆலோசனை இல்லாத அரங்கம், ஆக்கம் பெறாது.
இறைவனுடைய பார்வையில், இனியவனாக வாழ்.
ஈதல் செய்யும்போது, இன்பம் கூடவே ஊறுகிறது.
உபதேசங்கள், உரிய காலத்தில் ஊட்டப்பட வேண்டும்.
ஊக்கமான யோசனைகள், உயர்ந்த பெருமை பெறும்.
எதிலும் கவனம் குறைந்தால், கஷ்டங்கள் கூடும்.
ஏற்றமானதை எண்ணுவதே, ஒரு ஏற்றமான எண்ணம்.
ஐந்து வார்த்தைகளானாலும், அழகாகப் பேசக் கற்றுக்கொள்.
ஒரு சொல்லைக் கூட, ஒழுங்கீனமாகக் கூறாதே.
ஓடும் நதியும், வீசும் காற்றும், கடவுளைக் காட்டிச் செல்கிறது.
பிறப்பின் பெருமை புரிந்து ஒளி ஏற்றுவதே, பிறந்தநாள்.
பிற உயிர்களை வருத்தாமல், வாழப் பின்பற்றுதல் பிறந்தநாள்.
புது மனிதனாவதற்காகவே, புதுவருடம் பிறக்கிறது.
வருடங்கள், வாழ்க்கையின் வளத்தை வளர்த்துச் செல்கிறது.
அன்பினால், ஆயுளின் வருடங்கள் விருத்தியாகும்.
காலங்கள் கரையும்போது, கறைபடாமல் காப்பாற்று.
படிப்பை கற்பதுபோல், பண்பையும் கற்றுக்கொள்.
நல்லது நினைத்தால், நன்மைகள் நிறையும்.
சமாதானம் செய்தல், சௌபாக்கியம் சேர்க்கும்.
கடுஞ்சொல் களைந்தால், கலகம் நீங்கும்.
விவேகம், வெற்றிப் பாதையை வகுக்கும்.
செருக்கு விலகும்போது, செழிப்பு வளர்கிறது.
பொறுமையால் பெறும் பலன், பொன் போன்றது.
பொறாமை, பொல்லாத பகையை வளர்க்கும்.
நுட்பமாக நோக்கு, நுண்ணறிவு பெறுவாய்.
அதர்மம் அகன்றால், தர்மம் தலைதூக்கும்.
முற்கோபம் முக்கியமல்ல, முன்யோசனைதான் முக்கியம்.
சமாதானப் பாதையில், சந்தோஷம் நிலைக்கும்.
பக்தியும், புத்தியும் பெற்றவன், பாக்கியவான்...

## அம்மா!...(தாய்) அப்பா!.. (தந்தை)

பிறந்..தாய் - தந்தை இருந்தால் பாரமில்லை
அழு..தாய் - தந்தை காட்டும்பாதை துயரமில்லை
சிரித்..தாய் - தந்தையின் கண்ணில் ஈரமில்லை
தவழ்ந்..தாய் - தந்தை போல் உலகில் யாருமில்லை
மொழிந்..தாய் - தந்தையின் பாசத்தில் பேதமில்லை
நடந்..தாய் - தந்தையைப்படி புத்தகம்தேவையில்லை
வளர்..தாய் - தந்தை சொல்லைவிட வேதமில்லை
போபித்..தாய் - தந்தை சொற்படி கேள் சோகமில்லை
புரிந்..தாய் - தந்தையைப் போல் ஆசானில்லை
உணர்ந்..தாய் - தந்தையைப் பலர் இங்கேஅறியவில்லை
படித்..தாய் - தந்தைமொழி சிலருக்குப் புரிவதில்லை
சம்பாதித்..தாய் - தந்தை பிள்ளைகள்முன் அழுவதில்லை
சேமித்..தாய் - தந்தையைச் சிலர் தொழுவதில்லை
கொடுத்..தாய் - தந்தையைவிட ஆகாயம் தெரிவதில்லை
சாதித்..தாய் - தந்தைக்கு ஓர் தாலாட்டும் இல்லை
வாழ்ந்..தாய் - தந்தையைப் பலர் பாராட்டுவதில்லை
- தந்தையின் வியர்வை உறைந்ததில்லை
இவை அனைத்திலும் - தந்தையைப் பலர் உணரவில்லை
உன் தாய் - தந்தையைவிட கங்கை புனிதமில்லை
இருக்கின்றாள்.. - தந்தையின் அன்புக்கு எல்லையில்லை
மறந்துவிடாதே!... - தந்தையை நேசி என்றும் துன்பமில்லை

### சேமிப்பு என்பது பணம் மட்டுமல்ல...

நல்ல மனிதர்களைச் சேமிப்பது

நல்ல ஆரோக்கியத்தைச்சேமிப்பது

நல்ல நண்பர்களைச் சேமிப்பது

நல்ல உறவுகளைச் சேமிப்பது

### நூற்றுக்கு நூறு...

\+ நம்பிக்கையைக் கூட்டுதல்
\- சோம்பலைக் கழித்தல்
x உழைப்பைப் பெருக்கல்
% நல்வாழ்வை வகுத்தல்

வாழ்க்கைப் பயணத்தில் பெறுவோம்
நூற்றுக்கு நூறு!..



# முல்லாவின் கதை

அறிஞர்கள் கூடியிருந்த ஒரு சபையில் மிகவும் பயனுடையது எது சூரியனா அல்லது சந்திரனா? என்பது குறித்துப் பட்டிமன்றம் ஒன்று நடந்து கொண்டிருந்தது.

அங்கே பேசியவர்கள் பெரும்பான்மையினர் சந்திரனைவிட சூரியனால்தான் உலகத்திற்கு அதிகப் பயன் உண்டு என்ற கருத்தையே வலியுறுத்திப் பேசினர்.

அப்போது பேசியவர்களை நையாண்டி செய்து வேடிக்கை பார்க்க வேண்டும் என்று முல்லாவுக்குத் தோன்றியது.


அவர் உடனே எழுந்து " அறிஞர் பெருமக்களே, இங்கே நடந்த பட்டிமன்றம் தொடர்பாக எனது கருத்தைக் கூறலாமா? " என்று கேட்டார்.

இது பொதுமன்றம், இங்கு யாரும் தங்கள் கருத்தினை எந்தவிதத் தடையுன்றிக் கூறலாம். முல்லா அவர்களே உங்கள் கருத்தைக் கூறுங்கள் என்று அறிஞர் பெருமக்கள் கேட்டுக் கொண்டனர். சூரியனைவிடச் சந்திரனால்தான் உலத்திற்கு அதிகமான பயன் கிடைக்கிறது என்று நான் கருதுகிறேன் என்றார் முல்லா.அது எவ்வாறு விளக்குங்கள் என்று அறிஞர்கள் கேட்டனர்.

பகலில் நமக்கு இயற்கையாக வெளிச்சம் இருக்கிறது. அதனால் சூரியனுடைய உதவி நமக்குத் தேவையே இல்லை. இரவில் இருளாக இருக்கிறது. சந்திரன் இருளை அகற்றி நமக்கத் தேவையான ஒளியை இரவிலே அளிக்கிறது. அதனால் சந்திரன் தான் நமக்கு அதிகப் பயனை அளிக்கின்றது என்றார் முல்லா.

முல்லா தங்களை நையாண்டி செய்கிறார் என்பதை உணர்ந்து அறிஞர்கள் சிரித்து மகிழ்ந்தார்கள்.






# அன்பால்!....

ஓர் ஏழைச் சிறுவன் வீடு வீடாகப் பொருட்களை விற்று வயிற்றுப் பசியையும் கல்விக் கொடும்பசியையும் போக்கிவந்தான். ஒரு நாள் அவனது பொருட்கள் விற்பனையாகவில்லை. பசி அவனை வாட்ட ஒரு வீட்டின் கதவைத் தட்டினான். ஒரு பெண்மணி கதவைத் திறந்து வெளியே வந்தாள் .அவளிடம் எப்படி உணவு கேட்பது என்ற மனச்சிக்கலில் "அம்மா தண்ணீர் கிடைக்குமா?" எனக் கேட்கின்றான்.

அவனது கண்ணைப் பார்த்து பசியினை அறிந்த அப்பெண்மணி வீட்டுக்குள் சென்று ஒரு குவளை (Glass) பால் கொண்டு வந்து கொடுக்கிறாள். மிகவும் ஆசையுடன் பாலைப்பருகியவன்" அம்மா நான் உங்களுக்கு எவ்வளவு கடன் பட்டிருக்கிறேன் " எனக் கேட்கின்றான். அதற்கு அந்தப் பெண் கருணைக்கான ஊதியத்தை ஒரு போதும் பெற்றுக் கொள்ளக் கூடாது என என் தாய் எனக்கு சொல்லியிருக்கிறார் என்கிறாள். அவளின் பெயரைக் கேட்டறிந்து நன்றி கூறி அவ்விடத்தை விட்டுச் செல்கிறான்.

காலங்கள் வேகமாக ஓடின . அவன் படித்து பட்டம் பெற்று மருத்துவராக பணியாற்றிக் கொண்டிருந்தான். ஒரு நாள் மருத்துவமனைக்கு ஒரு பெண்மணி அறுவைச் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டிருந்தாள் .அவளது பெயரையும் ஊரையும் அறிந்து ஓடோடிச் சென்று அவளை நன்கு கவனித்ததுடன் கடினமான அறுவைச் சிகிச்சையையும் சிறப்பாக மேற்கொண்டு குணமாக்கியும் மகிழ்ந்து கொண்டார்.

இறுதியில் மருத்துவச் செலவுக்கான சிட்டை(Bill )அவளிடம் கொடுக்கப் பட்டது .மிகவும் பதட்டத்துடன் அதனைப் பெற்றுக்கொண்ட அவள் தன் வாழ்நாளில் கட்டி முடிக்க முடியாதே என அதனைப் பார்க்கிறாள்

அதில் "Paid in full with one glass milk"(ஒரு கிளாஸ் பாலுடன் முழுமையாகச் செலுத்தப்படும்) என எழுதப்பட்டு அதன் கீழே Dr: Howard kellyஎனவும் கையொப்பம் இடப்பட்டிருந்தது.

அந்தப் பெண்மணி, தானே ஒரு கிளாஸ் பால் கொடுத்ததும் அதனைப் பருகிய சிறுவனே இன்று மருத்துவராகி தனது உயிரைக் காப்பாற்றியிருக்கிறான் என கண் கலங்கி தனது நன்றியை கண்ணீரால் நிரப்பிக் கொள்கிறாள். யார் அந்த சிறுவன்.? அமெரிக்காவில் பிறந்து ஏழ்மையில் வாழ்ந்து கல்வியால் உயர்ந்து புகழ் பெற்ற மருத்துவராக விளங்கிய கொவர்ட் கெலி
Dr:Howard kelly(20.02.1858. - 12.01.1943)
(Obsterician , Gynecologist, Writer)
” பிச்சை புகினும் கற்கை நன்றே” கல்விக்கு கைகொடுங்கள்.

**க அருந்தவராஜா - சுவீஸ்**

.................................................................................................

# நகுலின் குட்டிக் கதைகள் - 7

## நான் சொல்வது தான் சரி...

ஒரு நாள் தம்பி நகுலுடன் சகானா விளையாடிக்கொண்டிருந்தார்கள். சகானா தம்பிக்கு ஒரு விளையாட்டை சொல்லிக்கொடுத்தாள். நாம் பாடசாலையில் இப்படி முன்னரே விளையாடினோம் என்றான் நகுல். அதனால் நகுல் சகானா சொல்லாததைச் செய்தான்.

சகானா நீ செய்வது பிழை...இப்படி இது விளையாடுவதில்லை என்றாள். மீண்டும் நகுல் பாடசாலையில் இப்படி விளையாடினோம் எனச் சொல்லிக்கொண்டு இருந்தான். சகானாவிற்கு கோபம் வந்தது. நான் சொல்வது சரி, நீ பிழையாக சொல்கின்றாய் என்றாள்.

நகுல் அம்மாவிடம் சென்று சகானா தான் சொல்வதை கேட்கின்றாள் இல்லை என கூறினான். அம்மா இருவருடனும் கதைத்தார். சகானா நீ வீண் பிடிவாதம் பிடிக்கக்கூடாது. ஒருவர்.. ஒருவர் சொல்வதைக் கேட்டு விளையாட வேண்டும் என்றார். சகானா சிறிது யோசித்தாள் . வீணாக அடம்பிடிக்கக்கூடாது , அது நல்லதில்லை என்பதை உணர்ந்தாள்.பின்னர் ஒருவரை ஒருவர் புரிந்துணர்வுடன் தொடர்ந்து விளையாடினார்கள்.

நாம் எல்லா நேரமும் நான் சொல்வது சரி என அடம்பிடிக்கக் கூடாது. என்னும் பாடத்தைக் கற்றுக்கொள்வோம்!..

**செல்வன் நகுல் துரையரங்கன்**

# தனிநாயகம் அடிகளார்...

02.08.1913



01.09.1980

தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு கிறிஸ்தவ மதத்தவர்கள் ஆற்றிய தொண்டுகள் அளப்பரியது. தமிழுக்காகவே தன்னை அர்ப்பணித்துக்கொண்ட கிறிஸ்தவ அறிஞர்களுள் முதன்மையானவராக தனிநாயகம் அடிகளார் திகழ்கிறார். பன்மொழிப் புலமை மிக்கவராகமிளிரும் தவத்திரு தனிநாயகம் அடிகளார் உலகத் தமிழ்ப் பற்றின் ஊற்றாகத் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குப் பல நிலைகளிலும்அரும்பாடுபட்டுள்ளார்.

நடுத்தரக்குடும்பம் ஒன்றைச் சேர்ந்த அடிகளார் 1913-08-02 தேதியில் ஊர்காவற்றுறையில் பிறந்தார். இவரின் இளமைப் பெயர் சேவியர் என்பதாகும். இவர் தனது ஆரம்பக் கல்வியை ஊர்காவற்றுறையிலும் உயர்கல்வியை யாழ் பத்திரிசியார் கல்லூரியிலும் பெற்றார். கொழும்பிலும் இத்தாலி - ரோமாபுரியிலும் சமயக்கல்வியைக் கற்றுத் தன்னைக் குருவாக உயர்த்திக் கொண்டார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகக்கொண்டு கலைமாணி, முதுமாணிப் பட்டங்களைப் பெற்றுக்கொண்டார். பழுந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு எம்.லிட் பட்டத்தையும் பெற்றார். இறையியலிலே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கலாநிதிப்பட்ட ஆய்வை மேற்கொண்டு கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். தூத்துக்குடியில் ஆசிரியராகப் பணியாற்றிய அடிகளார் பின்னர் பல்கலைக்கழகப் பேராசிரியராகத் தன்னைப் பணிநிலையில் உயர்த்திக் கொண்டார்.

ஆசிரியராகப் பணியாற்றிய போதே ""தனிநாயகம்"" என்ற திரு நாமத்தை இவர் பூண்டுகொண்டார். தமிழ் அறிவும் தமிழ்ப்பற்றும் கொண்ட அடிகளார் உலகின் பல நாடுகளுக்கும் சென்று அங்குள்ள பல்கலைக் கழகங்களில் விரிவுரையாற்றினார். உலகப் பல்கலைக்கழகங்களின் பாடத் திட்டத்தில் தழிழை ஒரு பாடமாகச் சேர்த்துக் கொள்வதற்கும் தமிழாய்வு குறித்த வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் முயற்சிகள் மேற்கொண்ட பெருமை இவரையேசாரும். ரோமாபுரியில் சமய உயர்கல்வி பெற்றபோது அங்கு வீரமா முனிவர் கழகத்தை நிறுவித் தமிழோசை செய்தார்.

அடிகளாவர். இன, மத, மொழி,தேச வேறுபாடின்றி தமிழையும்தமிழர் பண்பாட்டையும் போற்றி அனைத்துலகிலும் அந்த நியதிகளை அள்ளிச் சொரிந்தவர். இவர் தமிழ் இலக்கியக் கழகம் ஒன்றை நிறுவி பல நூல்களையும்

வெளியிட்டார். பன்மொழிப் புலமைகொண்டவராக விளங்கிய அடிகள் பிரெஞ்ஸ், ஆங்கிலம், ஸ்பானிஷ், டொச் மொழிகளையும் கற்றுக் கொண்டு பேசவும் ஆய்வுக்குப் பயன்படுத்தவும் பல மொழிகளைக் கற்றுத் தேர்ச்சி பெற்றிருந்தார். தமிழார்வம் கொண்ட அடிகளார் உலக நாடுகள் அனைத்திற்கும் விஜயம் செய்து தமிழரின் தொன்மை, மென்மை, பக்தி, பண்பாடு குறித்து நாட்டின் வரலாறு கலாச்சாரம், பண்பாடு முதலியவற்றோடு ஒப்பிட்டுக் கருத்துக்களைக் கூறியபொழுது கேட்பாருக்குத் தமிழில் பற்றையும் தமிழிலக்கியக் கருத்துக்களை அறிவதில் அவாவைத் தூண்டுவதுமாக இருந்தன.

உலக நாடுகளுக்குச் சென்று தமிழ்த்தொண்டு புரிந்தமையினால் ""தமிழ்த்தூதர்"" எனப்போற்றப்பட்டார். தனிநாயகம் அடிகள் உலகிலுள்ள நாற்பதுக்கும் மேற்பட்ட பல்கலைக் கழகங்களில் தமிழின் சிறப்பியல்புகளையும் தமிழர் பண்பாட்டின் சால்புகளையும் எடுத்துரைத்ததுடன் நின்றுவிடாது இந்திய ஆய்வுகள்மூலம் தனது அயராத முயற்சியினால் உலகின் பல பல்கலைக் கழகங்களில் திராவிட இயல் கற்பிக்கப்படுவதோடு தமிழியல்த் துறையை அனைத்துலக அறிவுத்துறையாக்கினார்.

திருக்குறள்மீது அதிக அக்கறைகொண்ட அடிகளார் தன் சொற்பொழிவு வாயிலாக தமிழின் புகழை உலகெங்கும் பரப்பினார். சங்க இலக்கியத்தில் தமிழின் இடம், இயற்கையின் இடம், தமிழர் பண்பாடும் நாகரீகமும், தமிழரின் மானிடவியல் கொள்கை, தமிழ் இலக்கிய வரலாறு ஆய்வுகள் என்பன இவரது படைப்புக்களாகும். தவத்திரு தனிநாயகம் அடிகளார் தமிழர் விடுதலை இயக்கத்துக்குப் புத்தொளி அளித்து தமிழ்மக்களின் பழம்பெரும் பண்பாட்டுப் பாரம்பரியங்களை நிலைநிறுத்தி அவற்றில் செறிந்திருந்த நீதி நெறிகளை நினைவுறச் செய்தார்.

தமிழியலைத் தனி ஆராய்ச்சித் துறையாக அறிமுகப்படுத்திய பன்முக புலமையாளன். தமிழியல் ஆய்விலும் புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். தொகுத்து நோக்குவோமாயின் உலகத்தில் முதல் இடம்பெறுவது தமிழாகும். இதனை ஆய்வு செய்யப் பல அறிஞர்கள் தோன்றியும், வளர்ச்சி பெற்று தனிநாயம் அடிகளாராகத் தோற்றம் பெற்று தமிழை உலகத்திற்கு எடுத்துக் கூறியவர்களில் முதன்மை பெறுபவர் இவர்தான் என்று கூறலாம். இவர் தோற்றம் பெற்றதனால் தமிழுக்கும் தனிச்சிறப்பு உண்டு. அடிகளார் 1980-9-1ம் திகதி மறைந்தார்.

**செல்வி துஸ்யந்தி முருகானந்தன்**
**ஜெயபுரம் - கிளிநொச்சி**

## ஓரெழுத்துச் சொற்கள் சில...

1- ஆ - பசு
2- ஈ - கொடு
3- ஊ - இறைச்சி
4- ஏ - அம்பு
5- ஐ - தலைவன்
6- ஓ -மதகுநீர் தாங்கும் பலகை
7- கா - சோலை
8- கூ - பூமி
9- கை - ஒழுக்கம்
10- கோ - அரசன்
11- சா - இறப்பு
12- சீ - இகழ்ச்சி
13- சே - உயர்வு
14- சோ - மதில்
15- தா - கொடு

## சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 45

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | | | 6 | 5 | | | 7 |
| | | 6 | | | 7 | 4 | 8 | |
| 2 | | 7 | 4 | 9 | | | | 6 |
| | 6 | | | 7 | | 1 | | |
| 3 | | 1 | 5 | | | | 7 | 2 |
| | 9 | | | 4 | 2 | 3 | | 8 |
| 1 | | 8 | 6 | | | | 2 | 9 |
| | 2 | | | 1 | 8 | 6 | 4 | |
| 6 | | | 3 | | | | 1 | |

## சிறுவர் குறுக்கெழுத்துப் போடி 138
## ( புரட்டாதி - ஐப்பசி 2024 )

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இவ
01-04 மாணவி இதன் எதிர்ச்சொல்.
05-06 குற்றம் புரிவோரைத் தடுத்து வைக்கும் இடம்.
வ-இ
10.09 குதிரைக்கு இப்படியும் ஒரு சொல் உண்டு.
15-13 உடலுறுப்பு ஒன்று.
கீ-மே
10-06 இசைக்கருவி.
16-04 சினிமாவிலும் சின்னத்திரையிலும் இவனுக்கு இடமுண்டு.
மே-கீ
01-05 மாதங்களில் ஒன்று.
03-05 இது ஒரு திசை.

முயற்சித்துப் பாருங்கள். விடை தெரியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்.

## நம்பிக்கையே முதல் வெற்றி...

நம்பிக்கையே வாழ்க்கை
நம்பிக்கையே உன் கனவு
நம்பிக்கையே அற்புதங்கள்
நம்பிக்கையே சாத்தியம்
நம்பிக்கையே நட்புகள்
நம்பிக்கையே சமாதானம்
நம்பிக்கையே அன்பு, காதல்
நம்பிக்கையே உங்கள் சுயம்...

ஆகவே நம்பிக்கையை ஒருபோதும் கைவிட்டுவிடாதீர்கள்கள்...நம்பிக்கைதான் பலம்...நம்பிக்கை உயர்வடையச் செய்யும் பெரும் பலமும் ஆயுதமுமாகும்!..

The First step to success
is to **Believe**

Believe in life.
Believe in your dreams.
Believe in miracles.
Believe it's possible.
Believe in friendship.
Believe in peace.
Believe in love.
Believe in yourself.

## " ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டியாவான்" இதன் உண்மை என்ன?..

1- ஆடம்பரமாய் வாழும் தாய்
2- பொறுப்பில்லாமல் வாழும் தந்தை
3- ஒழுக்கமற்ற மனைவி அல்லது கணவன்
4- ஏமாற்றுவதும் துரோகமும் செய்யக்கூடிய உடன் பிறந்தோர்.
5- சொல், பேச்சுக் கேளாத பிடிவாதமுள்ள பிள்ளைகள்.

ஆகிய ஐந்தும் இருந்தால் அரசனே ஆனாலும் கூட அவரது வாழ்வு அழிவை நோக்கிப் போகும் என்பதுதான் உண்மையான பொருள்...

## சில நூல்களின் ஆசிரியர்கள்...

- சிலப்பதிகாரம் - இளங்கே அடிகள் - இராமாயணம் (மூலம்) - வால்மீகி
- இராமாயணம் (தமிழில்) - கம்பர் - சிறாப்புராணம் - சேக்கிழார்
- மகாபாரதம் - வியாசர் - மகாபாரதம் (தமிழில்) - வில்லிபுத்துாரர்
- திருவாசகம் - மாணிக்கவாசகர் - தேம்பாவணி, ஒப்பியலிலக்கணம் - வீரமாமுனிவர்
- மகாவம்சம் - மகாநாம - பாஞ்சாலி சபதம் - சுப்பிரமணிய பாரதியார்
- காஞ்சிப்புராணம் - சிவஞான முனிவர் - நற்சிந்தனை - யோகர் சுவாமிகள்
- நன்னுால் - பவணந்த முனிவர் - வெற்றி வேட்கை - அதிவீரராம பாண்டியன்
- நல்வழி, நீதிநுால்கள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் - ஔவையார்
- மனோன்மணியம் - சுந்தரம்பிள்ளை - திருப்புகழ் - அருணகிரிநாதர்

# யேர்மனி தமிழ்க் கல்விச் சேவை - ஐரோப்பா ஆதரவில் வள்ளுவர் தமிழ்ப் பாடசாலை - டோட்முண்ட் நடத்தும் 18ஆவது வருடாந்தத் திருக்குறள் மனனப் போட்டி - 2024

---

திருக்குறள், மனித வாழ்விற்கு வழிகாட்டும் உலகப் பொதுமறை. தமிழர் வாழ்வின் இலக்கணம் திருக்குறள். பெரும் சிறப்புவாய்ந்த திருக்குறளை, நம்பிள்ளைகள் அறிந்தும், படித்தும் பயனடைய வழிகாட்டும் நோக்கில் நடாத்தப்படும் போட்டியே, திருக்குறள் மனனப் போட்டியாகும். இப்போட்டியில் பிள்ளைகளைப் பங்குகொள்ளச் செய்து, திருக்குறள்வழி வாழ வைப்பதற்கும், தமிழ்க் கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கும் பெற்றோர்களும், பெரியோர்களும் ஒத்துழைக்க வேண்டுகின்றோம்.

ஒவ்வொரு பிரிவிலும் பங்குபற்றும் பிள்ளைகளில் கூடிய புள்ளிகளைப் பெறும் மூவருக்கு, முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுக்குரிய வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்படும். பங்குபற்றிய யாவருக்கும் பதக்கங்கள் வழங்கப்படும்.

போட்டிகள் 2024.11.09ஆம் திகதி, Rheinische Str.76-80, 44137 Dortmund என்ற முகவரியில் அமைந்துள்ள "தமிழர் அரங்கம்" மண்டபத்தில் நடைபெறும். முடிவுகள் யாவும் அத்தினமே அறிவிக்கப்பட்டு, பரிசுகளும், பதக்கங்களும் வழங்கப்படும்.

விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி போட்டிக்கான அனுமதிக் கட்டணத்தையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும். (ஒருவருக்கான கட்டணம் 12,- ஒயிரோ. குடும்பத்தில் ஒரு பிள்ளைக்குக் கூடுதலானவர்கள் பங்குபற்றும்போது, முதலாவது விண்ணப்பத்தாரர் தவிர்ந்த மற்றவர்களுக்கு முறையே 6.- ஒயிரோ) விண்ணப்பம் அனுப்பும்போதே பணம் அனுப்புதல் வேண்டும்.

போட்டிக்கான விபரங்களையும், விதிமுறைகளையும் நன்கு கவனித்து கொள்க. பிரிவுகளுக்கான வயதுக்கணிப்பை, போட்டியின்போது உறுதிப்படுத்த வேண்டும். அந்தந்த வயதுப் பிரிவுகளுக்குரிய குறட்பாக்களையே மனனம் செய்தல் வேண்டும்.

விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி 2024.09.21ந் திகதிக்கு முன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி: P.Srijeevaghan<br>Kuhlmannsfeld 49<br>45355 Essen

பணம் அனுப்ப வேண்டிய வங்கி விபரம்:<br>Tamilischer Bildungsverein Deutschland e.V<br>Bank:- Sparkasse UnnaKamen<br>IBAN:- DE914435 0060 0005 0533 35

மேலதிக விபரங்களுக்கு<br>0201 46932106


# கணனிச் சொற்கள் சில.... அறிந்து கொள்வோம்...


| English.... | Deutsch | தமிழ் |
|---|---|---|
| 01- Computer | - der Rechnor | - கணினி (கணனி) |
| 02- Laptop | - der/das Laptop | - மடிக் கணனி |
| 03- Server | - der Server | - சர்வர் |
| 04- CPU | - die CPU | - கணனியின் மூளை |
| 05- Microprocesson | - der Mikroprozessor | - நுண் செயலி |
| 06- Mother board | - die Hauptplatine | - மதர் போர்டு |
| 07- Hard disk | - die Festplatte | - நிரந்தரப் பதிப்பகம் |
| 08- BIDS | - das BIOS | - பயாஸ் |
| 09- Ram | - der Arbeitsspeicher | - ரேம் தற்காலிகப்பதிப்பகம் |
| 10- Battery | - Akku | - மின் கலம் |
| 11- Computer Case | - das Gehäuse | - கணிப்பெட்டி |
| 12- CD-Romdrive | - das CD-Rom-Laufwerk | - சி டி றூம் இயக்கி |
| 13- DVD drive | - das DVD-Laufwerk | - டி வி டி டிரைவ் |
| 14- Board Card | - die Karte | - பலகை அட்டை |
| 15- Graphic Card | - die Grafikkarte | - வரைகலை அட்டை |
| 16- Sound Card | - die Soundkarte | - ஒலி அட்டை |
| 17- Network interface | - die Netzkarte | - பிணையஇடைமுக அட்டை |
| 18- Jumper | - der Jumper | - தொடர்புமாற்றம் (குதிப்பவர்) |
| 19- Power supply | - die Netzteil | - மின்னிணைப்பு |
| 20- Key board | - die Tastatur | - விசைப்பலகை |
| 21- Key | - die Taste | - கட்டை |
| 22- Mouse | - die Maus | - குறியழுத்தி |
| 23- Monitor display | - der Monitor | - திரை |
| 24- Printer | - der Drucker | - அச்சேற்றி |
| 25- plotter | - der plotter | - சதிசெய்பவர் |
| 26- Ink Cartridge | - die Patrone | - மைப்பொதியுறை |
| 27- Scanner | - der Scanner | - வருடி |
| 28- Wire | - das Kabel | - கம்பி (வயர்) |
| 29- Floppy disk | - die Diskette | - நெகிழ்வட்டு |
| 30- DSL | - das DSL | - டி எஸ் எல் |
| 31- Memory stick | - der Memory stick | - நினைவககுச்சி |
| 32- Loud Speaker | - der Lautsprecher | - ஒலிபெருக்கி |

**தகவல்திரட்டு:-**

- சிவா -

## கணக்குப் புதிர்ப்போட்டி....



**புதிர் - 1**

- சதுரங்களில் வரவேண்டிய எண்களைக் கண்டுபிடியுங்கள்..

**புதிர் - 2**

- சுடோக்கோ...ஒரே நேர் கோட்டில் ஒரே இன உயிரினங்கள்கள் வரக்கூடாது.
- ஆறு சதுரங்களிலும் ஆறு உயிரினங்கள் இடம்பெற வேண்டும்..

**விடைகள் இன்னொரு பக்கத்தில்....**

---

## பொழுதுகள்!..

பெரிதாக என்ன
கேட்டுவிடப்போகிறேன்
தனியாக ஒரு அறை
எதுவும் மாட்டப்படாத
வெற்றுச்சுவர்
சிறு வெளிச்சம்
பெரு நிசப்தம்
ஒரு சிறு கைக்குட்டை போதும்
கடந்த நான்குவருட
நாட்குறிப்பேட்டை
புரட்டிப்பார்க்க
எனக்கான பொழுதுகள்
அவ்வளவும்தான்...

**தாயகம் - ரிஜா**

## வழிகாட்ட உதவும் நான்கு...

- நான்கு நபர்களை வெறுக்காதே..
  தாய், தந்தை, சகோதரன், சகோதரி
- நான்கு நபர்களிடம் கண்டிப்புக் காட்டாதே..
  ஏழை, ஆதரவற்றோர், முதியவர், நோயாளி..
- நான்கு நபர்களைப் புறக்கணி..
  முட்டாள், மடையன், சோம்பேறி, சுயநலவாதி..
- நான்கு நபர்களுடன் நட்புடன் பழகு..
  கொடுத்த வாக்கை நிறைவேற்றுபவன், மனத்தூய்மை உள்ளவன், கண்ணியமானவன், உண்மையானவன்

**- அருட்பிரகாச வள்ளலார் -**

# காசிஆனந்தனின் சிந்தனைகள்...



## பணிவு..

மண்ணை நோக்கிக் குனிந்திருந்திருந்தது தெருவிளக்கு ” இந்தத் தெருவிளக்கு கோழையாய்க் கைகட்டிக் குனிந்து நிற்பதைப் பார்த்தால் வெட்கமா இல்லையா?.. என்றது காக்கை. நீண்ட காலமாகத் தெருவின் ஓரத்திலேயே நின்ற தென்னை நெருப்பானது. ” கூர்ந்து கவனி தெருவில் ஒளியைப் பாய்ச்சி தொண்டாற்றிக் கொண்டே பெருமையால் தலை வீங்கிப் போகாமல் அடக்கத்தோடு நிற்கிறது தெருவிளக்கு” என்றது தென்னை. மீண்டும் புரிகிறாத?.. என்று காக்கையைப் பார்த்து அது கேட்டது. பிறகு சொன்னது.

**" பணிவு வேறு...குனிவு வேறு..."**

## ஆயுதம்..

ஒவ்வொரு சின்ன ஓசைக்கும் முயல் புதருக்குள் ஓடி ஒளித்தது. இதைக் கவனித்த மான் இன்னொரு மானைப் பார்த்துக் கேட்டது...” முயல் ஏன் அடிக்கடி அஞ்சி ஒடுங்கி ஓடி ஒளிக்கிறது ” இரண்டாவது மான் சொன்னது. உனக்கும் எனக்கும் கொம்பு உண்டு. யானைக்குத் தந்தம் உண்டு. கரடிக்கு நகம் உண்டு. நம்மிடம் நம்மைப் பாதுகாக்கும் ஆயுதம் உண்டு. முயலிடம் எதுவும் இல்லையே”.. சுருக்கமாக அது சொன்னது.

**“ கொம்பில்லா முயலுக்குத் தெம்பில்லா வாழ்க்கை “**

# குறளும் பொருளும்...

## அவைஅறிதல்:-

711 - அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
றொகையறிந்த தூய்மை யவர்.

712- இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுா சொல்லி
னடைதெரிந்த நன்மை யவர்.

713 - அவையறியார் சொல்லன்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉ யவர்.

714 - ஒளியார்முன் னொளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணங் கொளல்.

715 - நன்றென வற்றுள்ளு நன்றே முதுவருண்
முந்து கிளவாச் செறிவு.

716 - ஆற்றி னிலைதளர்ந் தற்றே வியன்புல
மேற்றுணர்வார் முன்ன ரிழுக்கு.

717 - கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து.

718 - உணர்வ துடையார்முற் சொல்லல் வளர்வதன்
பாத்தியு ணீர்சொரிந் தற்று.

719 - புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையு
ணன்கு செலச்சொல்லு வார்.

720 - அங்கணத்து ளுக்க வமிழ்தற்றாற் றங்கணத்த
ரல்லார்முற் கோட்டி கொளல்.

# குறளும் பொருளும்...

## சபையின் இயல்பை அறிதல்..

711- சொற்களின் தொகுதியைத் தூய்மையாக அறிந்தவர், சபையின் தன்மையை அறிந்து ஆராய்ந்து சொல்ல வேண்டும்.

712- சொல் நடையினை நன்கறிந்தவர் சபையில் பேசும் பொழுது கேட்பவரின் தரம் தெரிந்து குற்றமில்லாமல் தெளிவாகச் சொல்ல வேண்டும்.

713- சபையின் அளவை அறியாமல் பேசுபவர் சொல்லின் வகையும் அறியாதவர் கல்வியின் வளமும் இல்லாதவரே.

714- அறிவுடையவர் சபையில் பேசுபவன் அறிவுடைமையை வெளிப்படுத்தலாம். அறிவற்றவர் முன் தானும் சுண்ணச்சுவரில் வெண்மை பூசுவது போல இருக்க வேண்டும்..

715- ஒருவருக்கு நல்லது என்று சொல்லப்படுவதில் நல்லதாவது அறிஞர்களின் சபையில் அடக்கத்துடன் முந்திப் பேசாது இருத்தல்.

716- நூற்பொருளை உட்கொண்டு உணர வல்லவன் கூடிய சபையில் சொல்லின் வல்லவன் சொற்குற்றப்படுதல் நல்லவன் இழிசெயல் செய்தது போன்றதாகும்.

717- வழுப்படாமல் சொற்களைஆராயும் வல்லவரின் சபையில் சொல்பவரது கல்வியின் திறம் எல்லோருக்கும் தெளிவாகத் தெரியும்.

718- பிறர் சொல்லாமல் பொருளைத் தாமே அறியும் அறிஞர் சபையில் கற்றவர் ஒன்றினைச் சொல்வது தானே வளரும் பயிருக்குத் தண்ணீர் விடுவது போலாகும்.

719- நல்லவர்கள் சபையில் நல்ல முறையில் நல்ல பொருட்களைச் சொல்லுபவர் அறிவற்றவரின் சபையில் அவற்றை மறந்தும் சொல்லக்கூடாது.

720- நல்லவர்கள் தம் கூட்டத்தினர் இல்லா சபையில் எதையும் பேசக்கூடாது. தவிர்த்துப் பேசினால் தூய்மை இல்லாத முற்றத்தில் சிந்திய அமிழ்தம் போன்றதாகும்.

# குறுக்கெழுத்துப்போட்டி-201
## (புரட்டாதி - ஐப்பசி 2024)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ
01-05 இலங்கை வடபகுதியின் ஒரு நகரம்.
29-31 இலக்கியத்தில் ஒருவர்.
36-38 இந்தியச் சினிமாவில் புகழ்பெற்ற தமிழ் நடிகை.
46-49 கணவன் ஒத்த சொல்.

வ-இ
11-08 சிலருடைய வாழ்வு எப்போதும் இந்த வாழ்வுதான்.
14-12 நம் நாட்டில் இது ஒரு பாவனைப்பொருள்.
19-16 ஆடை வகைகளில் ஒன்று.
24-22 வாரம், மாதம், நாள் இவற்றோடு சம்பத்தப்பட்டது.
46-43 சிரிப்பு ஒத்தசொல்.

கீ.மே
28-07 இந்த நாள் வந்தால் பலருக்குக் கொண்டாட்டம்.
46-18 இது செய்யாவிடினும் தீமை செய்யாதிருத்தல் வேண்டும்.
48-20 சிலர் இது பாடுவதில் வல்லவர்கள்.

மே-கீ
01-29 மாதங்களில் ஒன்று.
19-40 சிலருடைய இந்த வளத்தால் சிறப்புப் பெறுகிறார்கள்.
28-49 தமிழ்ச் சினிமாவில் சின்னத்திரையில் இடம்பெறுபவன்.
29-43 இருபக்கத்தால் வாசித்தாலும் ஒரே சொல்.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)

## இவரை என்னவென சொல்வது!...

உடலிலிருந்த உயிர் பிரிந்தால்
உடல்தான் இருப்பது
எத்தனை நாள்
உயிருடன் இருக்கும் வரைதான்
உடலுக்கு மரியாதை இருக்கும்
மனிதர்களுக்கு பணம் இருக்குமட்டும்
மரியாதை ஆலாபனை செய்வர்
மனிதம் பேசுபவர் மனத்தில்
முன்னால் ஒன்று பின்னால்
ஒன்று பேசுவர்
நல்லது செய்கிறோம் எனக்காட்டுவார்
அங்கே எதிர்பார்ப்பு அதிகமிருக்கும்
உதவிக்கரம் கொடுப்பவர் போல்
பாவனை செய்து.
கரத்தையே உடைப்பர்
இவரை என்னவெனச் சொல்வது
நண்பர் என நம்பி நடக்க
நடுக்கடலில் தள்ளும் இவர் வார்த்தை
மனத்தை ரணமாக்கும் சொல்
மனத்தில் உதிரம் வடிக்க வைப்பார்
பார்வையில் நல்லவராட்டம் நடிப்பு
பசுத்தோல் போர்த்திய புலியாக
நம்பி நடக்கையில்
இப்படி செய்வது சரியா
இவர்களை என்னவெனச்
சொல்வது உதவி
செய்யாவிட்டாலும் பரவாயில்லை
உள்ளத்தை சொல்லம்புகளால்
நோகடிக்காதீர் வெந்த புண்ணில்
வேலைப் பாய்ச்சாதீர்
நாமும் மனிதர்தான் எமக்கும்
மனம் வலிக்கும்
உதவிசெய்து பலன்
வேணுமென்றால் நேரடியாக
கேளுங்கள் தவறில்லை
மற்றவர்களிடம் பிதற்றி
அவமானப் படுத்தாதீர்
இது சரியல்ல பழகிய பண்பெனில்
இவரை என்னவெனச் சொல்வது!

**- கொங்கா ஸ்ரான்லி -**

## அழகிய உலகம்!..

அமைதியின் பாதையில்
எங்கும் பரவும் போரின் இருள்..
படைப்பின் வல்லமை மிக்கவர்
மலைகள் செதுக்கும் கலைஞர்
மழலை மழைத் துளிகள்
மணிவிழிகள் போல,
பூக்கள் வர்ணம் பரப்பும்
தாமரைகள் போல
நதியென ஓடும் காலத்தில்
நம்பிக்கை
தண்ணீர் போல மின்னுகிறது...

பறவையின் பறக்கும்
சுதந்திரம் கனவுகள் இல்லை
சூரியன் பொன் ரதம்
ஒளியின் ஓவியர்
கடலின் அலைகள்
காலத்தின் இசை
வானின் விண்மீன்
நிழல் தாண்டும் நிலா..

மணல் போல நம் வாழ்வை
விந்தையாய் விதைத்தார்
மனத்தின் ஆழம்,
மரமாய் செழித்தார்,
காற்றின் கீதம்
புல்லின் மூச்சு போல
கனலாய்க் காயும் வெப்பம்
உணர்வின் அசைவாய்ப் படர்கிறது..

படைப்பின் வல்லமை
தாயின் கருவறை
தத்துவங்கள் உணர்த்தும்,
உயிரின் அதிசயம்
இறை அருள் பரந்துள்ளது
மாபெரும் சக்தியின் வெளிச்சம்
மனதில் விளங்கும் நம் பயணம்
வாழ்வின் அழகிய குரல்....

**- சத்யா பிரான்சிஸ் -**

## உலகே மாயமாய்...

உருளும் உலகின் அசைவிலே
உபாதை நிறைக்கும் வாழ்விலே
எதிலும் ஈடுபாடற்று இயந்திரமாகும்
வாழ்க்கையே
விடியல் மட்டும் எமதாகும்
விடயமேதும் நிகழாது
கருவி எம்மை ஆள்கிறது
கடக்கும் பொழுது விரையமாய்
நிறை குன்றும் செயல்களாய்
ஏற்றம் எதிலும் நிகழாது
இன்றைய வாழ்வின் இயல்பென்ன
உறவுகள் கூடி மகிழ்வதில்லை
ஊரவர் நிலவரம் அறிவதில்லை
பாசம் நேசம் பகிர்வில்லை
பலராய் ஒன்றித்த மகிழ்வில்லை
வேசம் போடும் வாழ்வு போல்
விரையும் புவியே என்னநிலை
நேற்றைய நினைவு கனிகிறது
இன்றைய வாழ்வு கசக்கிறது
நாளைய வாழ்வு என்னநிலை
நயம்பட வாழ்தல் உறவுமுறை
நலிந்தே தேயும் இந்நிலையில்
அறிவுக்கண்ணை திறப்பது யார்
அடுத்தபடி நிலை உரைப்பது யார்
விழித்தெழு தோழமை உறவாடி
விடியலின் முகவுரை நாமாகி
வீழ்தலற்று எழுகை பெற
ஒற்றுமைக் குடையை உயர்வாக்கி
பெற்றுயர் பேற்றிக்கு வழிகாட்டி
உலகே ஒன்றென உரக்கவிழி
உயர்வின் மகுடம் உயர்வில்.

**- வசந்தா ஜெகதீசன் -**

## உலகம் போற போக்கை பாரு !....

சினிமாக்கள் சிறிசுகளை கெடுக்குது
சின்னத்திரை குடும்பங்களில்
வில்லிகளை உருவாக்குது
ஆடை குறைப்பு செய்வதாலே
சினிமா உழைக்குது
அழுது அழுது பார்ப்பதாலே
சின்னத்திரை பிழைக்குது..

ஒருவனுக்கு ஒருத்தி என்று
சொன்னது அந்த காலம்
இன்று ஒன்று போனால்
மற்றொன்று பிடிப்பது
தான் புதிய காலம்
அச்சம் மடம் நாணம் பயிரப்பு
எல்லாம் என்னவாச்சு
அது என்ன என்று கேட்காமலே
காணாமல் போச்சு
கற்பா மானமா அதுவும்
இல்லமலே போச்சு...

பெண் பிறந்தால் தொல்லை
என்று எண்ணியது ஊரிலே
சீதனம் இல்லாமல் முதுகுமர்
குந்தியது நாட்டிலே
இங்கு எத்தனை பெண் பிறந்தாலும்
கல்யாணமாகுது விரைவிலே
ஒரு முறையா இருமுறையா
மறுமணமும் நடக்குதே
புலம் பெயர் வாழ்விலே...

அன்று பெற்றவர் பட்டது சோதனை
இன்று அவர்கள் செய்வதே
பெரிய சாதனை வீடு வாசல் நகை
நட்டும் தேவையில்லை
வீடு வீடாய் பெண்தேடி
செருப்பும் தேய்வதில்லை
பேஸ்புக்கும் இன்ரநெற்றும் காட்டுது
காதலுக்கு சோடி சேர வழியை
கல்யாணத்தை நடத்தி விட்டால்
பெற்றவருக்கு கடமை முடியுதுபாரும்...

**- கவி மீனா -**

## ஒலிம்பிக் விளையாட்டுத் திருவிழா..

உலகின் முதன்மையானது
ஒலிம்பிக் விளையாட்டு
கிறீஸ் ஏதென்ஸ் நகரிலே உருவானது
23.07.1894 உலக தினமானது
கோடை விளையாட்டாக
26.07.24 தொடங்கி 11.08.2024 வரை
நிகழும் விளையாட்டு
ஒலிம்பிக் விளையாட்டு
பாரிசில் 33வது இடம் பெற்றது
ஐந்து கண்டங்களின் பெயர் பதிவானது
ஐந்து வளையங்கள்
வெள்ளை துணியில் அழகானது
கறுப்பு நீலம் சிவப்பும் மேலேயும்
மஞ்சள் பச்சை கீழ்
வரிசையிலும் ஒளிர்ந்தது
ஆண் பெண்கள் சம்பங்கில்
பங்கானது சிறப்பு பெற்றது
இருபத்து ஆறு நாடுகள்
பங்கு கொண்டது பெருமையானது
ஐயாயிரம் வீராங்கனைகள்
பங்கு மேலானது
ஐந்து அம்சங்கள்
கொண்டே ஆரம்பமானது
அரங்குகள் அதிகமாகி
329 விளையாட்டுக்கள்
பங்கு கொண்டது
மாற்றுத் திறனாளிகளுக்கு
முக்கியத்துவம் பெற்றது
ஈழத் தமிழன் தர்சன்
தீபம் பெற்றது வரலாறானது
கோடைக்கால ஒலிம்பிக்
போட்டி சாதனையானது
உலகின் திருவிழாவாகக்
கருதாக்கி பெருமை பெற்றுள்ளது

**ஜெயா நடேசன்**

## அர்ச்சுனா!.. அர்ச்சுனா!..

இது இன்றையவனின் ஏக்கம்
அது அன்றையவனால் தாக்கம்
எதுவுமின்றிய மனக் கலக்கம்

அஞ்சி அஞ்சி வந்த அகதி மண்
தஞ்சம் புகுந்ததில் மிஞ்சியதே
கொஞ்சக் காசில் நெஞ்சு குளிர
தாய் மண் புதுமனை ஆக்கம்

பந்தம் தொடர தம்பி ,தங்கை
அந்நிய நாடு வர உதவிய தாகம்
எந்த நன்மை செய்து விடினும்
தொடர்ந்து வந்த அந்த சொந்தம்
விட்டபாடில்லாத் துக்கம் துக்கம்

எக்கச்சக்க செலவாம் ஏழையிலே
நோய் விட்டுப் போக மாந்தரிடம்
வாய்விட்டுக் கிளறி வெளிநாடு
தெரிந்ததும் தனியார் மருத்துவ
மனை இலட்ச நோட்டுக்கு வேட்டு

அங்குமிங்கும் அலைந்து அலைந்து
இங்கு வந்த அகதிக்கோ வயது
அறுபதுக்கு மேலே திகதி தெரியாது
தீராத வேதனை படுத்த படுக்கையில்
"அர்ச்சுனா அர்ச்சுனா" எனப்
பிதற்றிய
உயிர் பிரிந்ததே பெரு மூச்சுடன்.. .

**ராணி சம்பந்தர்**

# தேர்தல் அரியலும் அவிழ்த்துவிடும் பொய்களும்...

-வே புவிராஜ் - நோர்வே -

எல்லோரும் திருடர்கள்
வெள்ளை வேட்டி கள்ளர்கள்
வேதாந்தம் ஓதும் பனங்காட்டு
நரிகள்
கூழுக்கும்பாடுவார் கஞ்சிக்கும்
பாடுவார்
கச்சி கொள்கைவிட்டு
தம் குடி காக்க ஓடுவார் .

ஆதாயம் பார்ப்பவருக்கு
அரசியல் பட்டறை.
சாக்கடை எல்லாமே ஒன்றான
கழிவறை .மாயாவி கதைபோல
அடியடா அடி என்பார்
முகத்தினில் குத்தாமல் நோகாமல்
மிதி என்பார் .
நாளைக்கு நாங்கள் கூட்டாளி
என்பார்.
கோமாளி மக்களை ஏமாத்தவழி
என்ன என்பார் .

சாமானிய மக்களின் வலி ஏதும்
தெரியாது.
கூட்டங்கள் கூட்டியே கும்பிட்டு
பேசுவார்.
வயது வரை யாரை
வரம்பின்றி கால்தொட்டும்
வணங்குவார் .
குறிக்கோள் இல்லாமல்
கூழுக்கும் பாடுவார் .

வடக்கு தேயுதென்று வம்படி
காட்டுவார். தெற்கு போய்வந்தால்
நாம் ஒரு நாட்டு குடி என்பார்

ஒற்றுமை வேண்டும் என்பார்
பச்சோந்தி பயல்எல்லாம் அரசியல்
செய்வதால்அதற்கான மரியாதை அவ-
மானம் ஆனது .

செக்கும் தெரியாது சிவலிங்கம்
எதுவென்று புரியாதுதப்புக்கு
பறைக்கும் தாழ லயம் அறியாது
ஒப்புக்கு ஊதும் எம் அரசியல்
வாதியெல்லாம்

பெருமாள் கோவிலில் கை ஏந்தும்
அநாதைகள் மக்கு பயல எல்லாம் சம
நீதி கேக்கவிட்டு ஈழ தமிழ்த்தாயோ
மாரடித்து அழுகிறாள் .

சந்தர்ப்பம் வரும்போது சகுனம்
பார்க்கிறார் சாவுக்கு சாட்டாய்கதை
சொல்லி மழுப்புறார் .

அப்பம் திருடிய பூனைகள்
கைக்குஅளந்து காட்டுது அதிகார
குரங்கு .மறந்து மறந்து மறுபடி
மாயுறோம் .மண் விழுந்தும் ஒட்டாமல்
மார்தட்டி நிக்கிறோம் .அரசியலிலும்
அனாதை ஆனோம் .

அதிகாரம் கேட்பவர் அடி-
வருடி ஆனார் .வடக்கென்றும்
கிழக்கென்றும்பிரிவுகள்
காட்டிகுழுவென சேர்ந்தவர்
கச்சிகள் ஆச்சு . தமக்கென்ற
கொள்கையில்நேர்

நிலைப்பாடு இல்லை .தம் எச்சியை
தாமேதம் முகத்தினில் உமிழ்கிறார் .

பைத்தியம் அவன் என்றுதம்
நிழல் காட்டி மகிழ்கிறார் .முயலை
ஓடவிட்டுஉடும்பு படுக்குது .நரி அது
வேடம் இட்டு நாய்போல் குரைக்குது.
உள்குத்துஅரசியல் தெரியாமல்
உண்மைகள் முழிக்குது .

திரை மறை நாடகமாய் கையூட்டு
நடக்குது . திருத்த சட்டத்தில்
கணக்காய்வு

நிகழுது .ஒருத்தன் அவன் இல்லை
என்றுசிலர் வகுத்ததெல்லாம் சட்டமாம்
சில்லறைக்கு சிரிப்பவர்கள் .எம்மை

கல்லறைக்குள் புதைக்கிறார்
.ஒருத்தனும் இங்கே வருந்துவதில்லை.
வருந்துவோர் துயர் கண்டு

திருந்துவதும் இல்லை .சட்ட
சபைக்கு போனவர் எல்லாம்
சக்கட்டுமேனிக்காய் சலசலக்க பணப்
பெட்டி பார்த்ததும் சுறுண்டு கிடப்பார்
மாதம் ஒவ்வொன்றாய் அறிக்கைகள்
விடுவார் .

பொங்கலை காட்டிலும் புது
வருடத்தில் தீர்வென்பார் சித்திரை
போனபின் தீபாவளி என்பார். எல்லாம்
இவர் பேச்சு மத்தாப்பூ போல
அண்ணார்ந்து பார்த்தே கொட்டாவி
விடுகிறோம் .

முடவனை கூட்டிவந்துசெகுடனை
வழிகேட்டோம் குருடனின் கைபிடித்து
கானகம் போய்ச்சேர .விதி
வழி விட்டதென்று நெடு தூரம்
செல்கிறோம்.

வழிப்பறி செய்யும் ஊரில்
பொரிக்கலடை விற்கவந்தோம்

யார் எவர் தருவார் எம் உழைப்புக்கு
ஊதியம்....

# அழகிய உலகம்!..

அழகிய உலகில்
அகலாத துயரம்,
போர் நிழல் புவியில் பரவி
பிணி, பசி“ பட்டினி...
இறை புகழ் சூழ்ந்த உலகம்,
என் பூமியின் அகம்,
பறக்கும் பாயில் பயணம் சென்றும்,
பொய்மைப் பழி
மக்கள் பொது மனதில்
நிலைத்து நின்றன.

பசி பட்டினிக்குப்
பிணி பெருக்கத்திற்கு
யார் பொறுப்பு?
போர் பூமியில் பிரிவும் புணர்ச்சியும்,
பகடைக் காய்களாய்
உருட்டப்படுகின்றன..

இருளின் நிழலில்
இரவின் இயல்பு அழிந்தது,
புகழ் பரவிய உலகில்,
நம்பிக்கை நிலை கெட்டது..
அழகிய உலகின் அழுகையை
எந்த மனம் அறியும்?
அமைதி நித்தம் போராடுகையில்
அருளின் புன்னகை எங்கே?..
அழகிய
விலை மதிப்பற்ற வாழ்க்கை,
வலி வருத்தும் சூழல்
அச்சுறுத்தல் வாழ்வில்
வறுமை வலி மிச்சம்..
அழகிய உலகம்
அழுகையில் நிறைய
ஆயுதச் சாலைகள் பெருக்கம்
அழகிய மனதின் அன்பிலும்
அழிவைக் காணும் அழகிய உலகம்..

நிறமூட்டும் பசி நாட்கள்,
நிமிடங்களில் பரவும் நோய்க் கிருமி
நிம்மதி தொலைத்த நிமிடங்கள்,
நினைவில் புதைந்த நிம்மதி..
இரக்கம் தொலைந்த
இருண்ட உலகில்,
வன்முறை பெருக்கம்!..

- சத்யா பிரான்சிஸ் - மலேசியா

# அன்றும்!..இன்றும்!..வாழ்க்கை...

அன்று வீடு நிறையக் குழந்தைகள்
இன்று வீட்டுக்கு ஒரு குழந்தை..
அன்று பெரியவர் சொல்ல பிள்ளைகள் கேட்டார்கள்
இன்று பிள்ளைகள் சொல்ல பெரியவர்கள் முழிக்கிறார்கள்..
அன்று குறைந்த வருமானம் நிறைந்த நிம்மதி
இன்று நிறைந்த வருமானம் குறைந்த நிம்மதி..
அன்று படித்தால் நல்ல வேலை
இன்று படிப்பதே வேலையாச்சு..
அன்று வீடு நிறைய உறவுகள்
இன்று உறவுகள் இல்லா நிறைய வீடுகள்..
அன்று உணவே மருந்தாக இருந்தது
இன்று மருந்துகளே உணவாகியது..
அன்று முதுமையிலும் துள்ளல்
இன்று இளமையிலேயே அல்லல்..
அன்று தியாகிகள் நாட்டைக்காப்பாற்றினார்கள்
இன்று அரசியல்வாதிகள் நாட்டைவிற்கின்றனர்..
அன்று உதவிக்குத் தொழில்நுட்பம்
இன்று தொழில் நுட்பம்தான் சகலதும்..
அன்று யோகம் நிறைந்த வாழ்க்கை
இன்று எந்திரம் நிறைந்த வாழ்க்கையானது..
அன்று ஓடினோம் வயிற்றை நிறைக்க
இன்று ஓடுகின்றோம் வயிற்றைக் குறைக்க..
அன்று அன்று பெரியோர் நற்பாதையில்
இன்று இளையோர் பெரும் போதையில்..
அன்று ஒரே நாடெல்லாம் புரட்சி மயம்
இன்று ஒரே நாடெல்லாம் வறட்சி மயம்..
அன்று மக்கள் நல ஆட்சி
இன்று சிக்கல் நிறைந்த ஆட்சி..
அன்று செய்தார்கள் மக்கள் நல வளர்ச்சி
இன்று செய்கிறார்கள் சினிமாக் கவர்ச்சி..
அன்று கை வீசி நடந்து மகிழ்ந்தோம்
இன்று கைபேசிகளுடன் நடந்துஅலைகின்றோம்..
அன்று ஜனநாயக ஆட்சி வளர்ச்சி
இன்று பணநாயக அழிவின் வீழ்ச்சி.
அன்று வாழ்விடமெல்லாம் விளைச்சல் நிலம்
இன்று வாழ்விடமெல்லாம் விலைபோன நிலம்..
அன்று தொடமுடியாத உச்சத்தில் காதல்
இன்று தொட்டுமுடியும் எச்சக் காதல்..
அன்று கல்விதான் உயிர் மூச்சானது
இன்று பணம்தான் இறுதி மூச்சானது..
அன்று வாழ்ந்தது நல் வாழ்க்கை
இன்று வாழ்வதோ ஏதோ ஒரு வாழ்க்கை!...

- சிவா -

## குறியாய்!..

தமிழ்படிப்பதும் பேசுவதும்
இல்லை
சஞ்சிகை பத்திரிகை
வாசிப்பதுமில்லை
தமிழ் வானொலி கேட்பதுமில்லை
தாய்நாட்டு தொலைக்கட்சி
பார்ப்பதுமில்லை
சின்னத்திரையும் சினிமாவும்தான்
குறியாய்!...

## காத்திருப்பு!..

ஐயரும் சவப்பெட்டிக்காரனும்
எரிப்பவனும் புதைப்பவனும்
பணத்தைச் சுளையாக அள்ள
எப்போ? உயிர் பிரியுமென
தினம்..தினம் காத்திருப்பு!..

## வேக உணவு!..

பணத்தைக் அள்ளிக் கொடுத்து
நோயையும் வாங்கிச் சேர்த்து
உடலையும் உள்ளத்தையும்
வருத்தி அழிப்பதுதான்
அதிவேக உணவுகள்!..

## நூலகம்!..

லட்சக்கணக்கான புத்தகங்கள்
அடுக்கு மாடிகளில் இருக்கின்றன
அனைத்தும் நவீன டிஜிட்டல்
மயமாம்
வாசிக்கத்தான் ஆட்களில்லை!..

- சிவா -

## முகநூல்....

முகமறியா உறவெல்லாம் கூடும் மன்றம்
முத்திரையைப் பதித்திடவும் தருமேபக்கம்!
தகமையென வேதுமின்றித் தொடரும்கொற்றம்
தளராமல் பொழுதுகளைப் பறிக்கும் நித்தம்!
பகலவனாய் அறிவொளியைப் பகர்ந்தும்நிற்கும்
பயனுறுதல் அவரவரின் மனத்தின் திண்ணம்
நிகரில்லா வசியமாகி நிகழ்த்தும் மாற்றம
நிழலாகி நெஞ்சினையே ஊஞ்சல் ஆட்டும்!

உள்வீட்டுச் சங்கதியும் உலவச் செய்யும்
உலகத்தின் மூலையெங்கும் பரவிச் சுற்றும்!
பள்ளிசெல்லும் பிள்ளையையும் முடக்கிவைக்கும்
பட்டங்கள் நாள்தோறும் சொரிந்தே கொட்டும்!
கொள்ளிபோட்டு வாழ்வினையே முடிக்குமே
கூட்டணியும் இணைகின்ற முகநூல் முற்றம்!
அள்ளிடவே முடியாத அழகாம் ஆரம்
அரிதாரப் பூச்சுகளால் அவல மாகும்!

கனியிருக்கக் காய்கவராக் கருத்தை யேற்றே
கையிருக்கு மின்பமதைக் கருத்திற் கொள்ளப்
பனிமலராய் வாழ்வினிலே பகரும் மேன்னை
படர்கொடியாய்ப் பாரினையே கையில் வைக்கும்!
தனிமையினைப் போக்குகின்ற தளராச் சுற்றம்
தலைவலியாய் மாற்றாமல் தெளிவைக் காண!
நனிமலரின் செண்டாகச் சுகந்தம் வீசும்
நாளெல்லாம் புதுமைகளைத் தருமே அள்ளி!

**கீத்தா பரமானந்தன்**




## பாரதி...



(11.11.1892 - 11.09.1921)

சின்னம்மா பெற்றெடுத்த
சிங்காரப் பாவலனாய்!
இன்னலுக்குள்வாழ்ந்தாலும்
எப்போதும் தீரமுடன்
கன்னலுடை தமிழினிலே
கற்கண்டுப் பாத்தொடுத்தே
சொன்னதெல்லாம்
மேன்மையுடன்
சொரிந்ததெல்லாம்
இனிமைகளாம்!

பெண்ணடிமைத்
தளையறுக்கப்
பேரொளியாய் வந்தவனே!
கண்ணம்மா காதலுக்காய்க்
கானமழை பொழிந்திருந்தே
மண்ணினிலே சுதந்திரத்தின்
மாண்பாகி நிலைத்தவனே!
வண்ணமுறு கவிகளிலே
வாழ்கின்றாய் பாவலனே!

சத்தியத்தின் பாதையிலே
சமத்துவத்தைவிதைத்திடவே
புத்தியினைத் தீட்டிநின்றே
புதுமைகளைச் செய்திட்டே
வித்தாரக் கவிஞனென
வீறுகொண்ட பாரதியே!
நித்தமுமாய் வாழ்கின்றாய்
நித்திலத்தில் வரலாறாய்!

**கீத்தா பரமானந்தன்**

## கல்யாணச் சந்தையிலே!.

- இரா . சம்பந்தன் -



கல்யாணச் சந்தையிலே
விலைபோகும் மாப்பிள்ளைகளால்
முதிர் கன்னியர் மூலைகளிலே . .

புரையோடிப் போன புண்ணுக்கு
மருந்திட மறுக்கு மினமாகவே
நம்மினம் இன்றுவரை.

குலவிளக்கான குத்துவிளக்கு
குடும்ப விளக்காக சுடர்விட
எத்தனை கரங்களின்
வியர்வைத் துளிகள்

பெண் மகவு பிறந்துவிட்டால்
பிறந்தநாள் தொட்டு
வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி
ஓடியோடி யுழைத்து
உருக்குலைந்து போகும் பெற்றோர்

உடன் பிறந்த சோதரிகளுக்காய்
கடல் கடந்து சென்றவர்கள்
உடல் உறையும் குளிரினால்
உதிரம் வற்றிப் போனவர்களாய் .

வறுமை குடியிருக்கும்
வாசல்களிலே
வரதட்சணை கேட்பதனால்
படரவொரு கொழுகொம்பின்றி
இடருழந்து கிடக்கும்
வஞ்சிக் கொடிகள்தாம் எத்தனை

வருடங்கள் உருண்டோடிச் செல்ல
வாலிபம் வழிந்தோடிச் செல்ல
வண்டுகளை வெறுக்கின்ற
மலர்களும்
மலர்களை வெறுக்கின்ற
வண்டுகளும்.

வேரது கருகிய பின்
விழுகின்ற மழைத்துளியால்
பூச்செடிகள்தாம் மலர்ச்சியுறுமா?

பூவிதழில் புன்னகை சிந்திவரும்
பொன்மகளை வரவேற்காமல்
பொன்னகையைக் கேட்டங்கே
பூவையின்
புன்னகையைப் பறிப்பதுமேனோ?


மெத்தைக் கிளிகளின்
மேன்மைகளை ரசிக்காமல்
சொத்து சுகங்களின் மோகத்தால்
செவ்வந்திப் பூக்களைப் பிடுங்கி
செந்தீயில் வீசிடுவோர் அங்கங்கே!

மூண்டெரியும் தீச்சுவாலையாய்
முதிர் கன்னியரின் பெருமூச்சு
அத்தீண்டலால் தினந்தோறும்
துயரக் கடலில் பெற்றோர் . .!

அந்த நீலாம்பரிகளின்
உள்ளமெனும் கடல் குமுறுகையில்
உணர்வுகள் அலைகளாய் மோதி
உடைந்து போவதை யென்றும்
உணராச் சமூகம் !

சீர்வரிசை பெறுவதும் கொடுப்பதும்
பெருமையென்றே யெண்ணுவோர்
மத்தியிலே
சீர்திருத்தம் மலர்வதெப்படி?.........

# C.N.அண்ணாதுரை... (தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர்)

15.09.1909  03.02.1969

வடஇந்திய காங்கிரசின் ஆதிக்கம் தேசம் தழுவி வியாபித்திருந்த பொழுது
மடத்தலைவர்களையே எம் தலைவர் என தமிழ்மக்கள் நின்றனர் தொழுது
படைஉண்டு தலைவன் எவன் எவன் என விடைதெரியாது தழுதழுத்து
விடைகொண்டு எழுந்ததமிழ்த்தாயின்தவப்புதல்வன்அறிஞர்அண்ணா ஒருவிழுது

படிப்பறிவு ஆர்வம் உள்ளவனை வறுமை தடுத்து நிறுத்துவது இயல்பு
எழுத்துப்பேச்சு கதை நாடகம் எத்தடைதாண்டிப் பட்டம்பெற்றது சிறப்பு
நீதிக்கட்சியின் நிழலைத்தனதாக்கி ஆளுமைசெய்தவர் பெயர் பெரியார்
குடியரசு விடுதலையில் கொள்கைபாடி கோபுரம் தொட்டது இந்தப் பொறுப்பு..

இந்திக்குவழிவிட்டு தமிழ்ச்சந்திக்கு வரவைத்தது ஓமந்தூரார் மாநிலஆட்சி
குலக்கல்விக்கு வித்திட்டு பள்ளிப்படிப்பைப் பாதியாக்கியது ராஜாஜிசூழ்ச்சி
சமூகம்அரசியல்பகுத்தறிவுபுராணஎதிர்ப்புஎனகலக்கியதுஅண்ணாவின் எழுச்சி
தம்பி - அண்ணா என்ற உறவுப்பரியந்தம் அறிவுப்பரிணாமமானது தமிழ்மலர்ச்சி

இன்றுஎல்லாத்தமிழ்க்கட்சிகளுக்கும்பொதுவானபிரச்சனைபிளவும் முரண்பாடும்.
இதற்குவித்திட்டு விதைபோட்டவர்கள்அண்ணாவும்பெரியாரும்என்பதுகுறைபாடு
சுதந்திரம் வெள்ளையர்களிடம் இருந்து உள்ளூர்க் கொள்ளையர்களிடம்
கல்யாணமும் கறுப்பும்முதலில்கட்சியும் வேண்டாம் என்றார் அறிஞர் அண்ணா

ஆட்சிபீடம் ஏறிய இரண்டு ஆண்டுகளுக்குள் அண்ணாவை இயற்கை பறித்தது
காலம்கொஞ்சம் விட்டிருந்தால் தமிழகஅரசியல் கண்ணியம் காக்கப்பட்டிருக்கும்
எனினும் கீழை வெண்மணி படுகொலைகள் அண்ணா ஆட்சிக்குக்கரும்புள்ளி
தமிழ்என்று முழங்கினாலும் ஆங்கிலக்கதவை அகலத்திறப்பது அவர் ஆசை

இவர் இல்லை என்றாலும் தமிழக இரண்டுகட்சிகளும் தலைவர் இவர்தான்
ஆனாலும் இவர் குடும்பத்திற்கு சேர்த்தசொத்து என்பது வறுமை மட்டுமே
எல்லோரையும் கவரும் அறிவும் பேச்சும் நேர்மையும் கால வழிகாட்டு
எக்கால இளையோரையும் ஏங்க வைக்கும் கல்விக் கலங்கரை விளக்கு!...

- ப.பசுபதிராசா -

# மண் இதழிலக்கம் 226 இற்கான அட்டைப்படக்கவிதை.




அள்ளக் குறையாத அன்பினை அள்ளி
அனைவருக்கும் பகிர்ந்த ஆழ்ந்த பதிவு
கொள்ளைச் சிரிப்பில் உலகினைக் கட்டி
குளிர்ந்திட வைத்திடும் குவிந்த பணிவு
பிள்ளை மனத்துடன் தாயாய் எண்ணி
பேணிக் காத்திட்ட களிப்பினில் கனிவு
வெள்ளைத் துகிலுள் வேரினில் ஒளியை
வெளிச்சமாய்க் காட்டிய பேதமிலா நிலவு.

அன்னைக்கு அன்னையாய் அவனியை
ஆட்சி செய்தாய் அறத்தினில் தாயாய்
உன்னையே உருக்கி ஊழிய தாயாய்
ஊற்றியே விட்டாய் உள்ளத்துள் நீயாய்
முன்னைய பிறவியில் முதிராமல் பூத்து
முகிழ்ந்து நின்றாய் வாசனைத் தீவாய்
பின்னேயிப் புவியும் பேசிடும் அவதாரம்
பேரன்பின் ஊற்றில் பெருகினாய் பாவாய்.

குலவி நின்ற மாந்தர்களின் மனதினுள்
கூடியே பயணிக்கும் உந்தனின் கனவு
உலவுகின்ற தொண்டுகளில் ஒன்றியதாக
உயிர்ப்போடு உனது உள்ளத்தின் தினவு
பலவுமாய்ப் படர்ந்து வியாபித்து விரியும்
பயணங்களில் உந்தன் வதிவின் நனவு
நிலவுகின்ற சேவையில் நீண்டு விரிந்தே
நித்திலம் மறவாத வதிவிலுன் நினைவு.

**அம்பலவன் புவனேந்திரன்..**

# பண்டார வன்னியன்...



சிலையில் இன்றுவாழுகின்ற செம்மையின் நாயகன்
சிங்க நடை பயின்றுவந்த செந்தமிழ் மாமன்னவன்
விலைபோகா வீரத்தின் விளையும் நிலமானவன்
வெள்ளையரையே ஓடேட விரட்டிவிட்ட காவலன்
மலையென நிமிர்ந்துநின்ற மாபெரும் மன்னவன்
மாண்புகள் பொருந்திய மண்ணின் மைந்தனவன்
கலைகளையும் தமிழையும் கட்டிக்காத்து நின்றவன்
காலம் என்றும் கரைத்திடாத பண்டார வன்னியன்

எல்லைகள் தாண்டி எதிரிப்படையை யோடவிட்டு
ஏகாதிபத்தியத்தையே தனியாய் ஏறெனஎதிர்த்தவன்
தொல்லைகள் நீங்கிடவே தொடர்ந்தே போரிட்டு
தோல்விகளே அறியாது துலங்கியவெம் கதிரவன்
வல்லமையோடு வாட்கொடியைப் பறக்க விட்டே
வரலாற்றில் வாழுகின்ற வன்னியின் நாயகன்
முல்லை நிலம் எங்கும் மூச்சில் உறைந்தவன்
முன்னோர்க்கு முன்னவனாய் முதலில் நிற்பவன்




உச்சியில் பிரகாசிக்கின்ற உயர்ந்த கதிரானவன்
உலகத்தார் வியக்கின்ற உன்னதத் தலைவன்
கச்சிலை மடுவில் கல்வெட்டெனப் பதிந்தவன்
காலங்கள் கரைத்திடாக் காவியமாய் ஆனவன்
மெச்சிடும்படி வெள்ளையரும் மேலாய்ப் போற்றிட
மேதகு வீரனாய் இம்மேதினியிலே வாழ்பவன்
அச்சத்தினை விரட்டியே அஞ்சியோட விட்டவன்
அகிலம் போற்றிடும் அன்னைத் தமிழ் மாவீரன்

முன்னைத் தலைமுறையின் மூச்சான பொருளே
முப்பெரும் இராஜ்ஜியத்தில் முடி தரித்த அருளே
பின்னை ஆட்சிகளும் பெயர் சொல்லும் மருளே
பேரின வாதத்திற்குப் பித்தாயானதொரு பேரிருளே
அன்னைத் தமிழ்நிலத்து ஆட்சியின் அருந்திரளே
ஆதிக்குடி மண்ணின் அடங்காத திமிரச் சுருளே
உன்னை பாடிடவே ஒருநாள் இங்கே போதாதே
உலகம் வாழும் வரை உனதுபுகழும் மாறாதே

**- அம்பலவன்புவனேந்திரன் -**

# அன்பே சிவம்!...

- கவி மீனா -

" காற்றுள்ள போதே தூற்றிக் கொள் என்பது பழமொழி "அதுபோலே இளமை உள்ள போது செய்யும் உண்மை காதல்தான் முதுமை வரை நிலைத்து நிற்கும். இளமைக் காலத்தில் சண்டையும் வாக்குவாதமும் பண்ணுபவர் வாழ்க்கை முதுமையில் நரகமாய் மாறிவிடும், இளமையில் காதலித்த நினைவுகள் முதுமையிலும் கை கோத்து நடக்க வைக்கும்.

வாழும் காலம் கொஞ்சம் அதை இனிமையாகப் போக்க தெரியாதவர்கள்தான் தனது துணையுடன் சண்டையிடுவோரும் தீய வழிகளில் நடப்போரும் பொய் பேசியே காலத்தை ஓட்டுவோருமாய் இளமைக் காலங்களை வீணாக்கி விட்டு முதுமையிலே தனிமையிலே தள்ளாடி தவிக்கின்றனர்.

அன்பே சிவம் என்பர் அந்த அன்பைக் காட்டத் தெரிந்தவனுக்கு வாழ்க்கையே இன்ப மயம். தன்னை நம்பி வந்த பெண்ணை நம்பாமல் சந்தேகத்தில் அலைபவனும் தன்னை உயிராக மதித்து தன் உடல் பொருள் கற்பு யாவையும் அவனுக்காக இழக்க முன் வந்த பெண்ணை கொஞ்சமும் மதிக்காது அவமதித்து பொய் சொல்லி ஏமாற்றுகின்றவனை எந்த ஒரு பெண்ணாலும் மேலும் மேலும் நேசிக்க முடியாதுதான் போகின்றது.

இது பெண்ணுக்கு மட்டு மில்லை கணவனை ஏமாத்தி சோரம் போகிற பெண்களுமுண்டு இப்படியான உண்மையில்லா மனிதர்களால் உலகில் அன்பு இல்லாமல் போகிறது. குடும்பத்தில் ஒற்றுமை அழிந்து போகிறது..

காதல் என்பது கண்ணுக்கு தெரியாத ஒன்று உள்ளங்கள் உணர்ந்து கொள்ளவும் உயிர் கலந்து கொள்ளவும் கடவுளால் உலகுக்கு அனுப்பட்ட ஒரு சக்தி அது நல்ல மனங்களைதான் வந்து தாக்கும் காதலுக்கு கண் இல்லை என்பர் காரணம் பணம் பொருள் அந்தஸ்த்து அழகு பார்த்து வருவது காதல் இல்லை,கண்கள் நான்கும் காணும் போது பொறி தட்டும் காதல் கைகள் நாலும் சேர்ந்த பின்னே காணாமல் போவது ஏன்?

அந்த காதல் உண்மையில்லை! உடல் இரண்டானாலும் உயிர் ஒன்றாய் வாழ்ந்தால்தான் காதல், உனது எனது என்ற பாகுபாடு இன்றி யாவும் நமதே என்னும் நோக்குடன் கணவன் மனைவி வாழ முடிந்தால் மட்டுமே அது குடும்பம்.ஒழிவு மறைவு இல்லாத மனங்கள் இருவருக்கும் இருந்தால்தான் வாழ்க்கை இனிக்கும், இளமைக் காலங்களில் அடிபட்டவன் முதுமையிலே அடிபாட்டுடன் பிரிந்து விடுவான்.

மரத்திலே பசுமை இல்லாத போது இலைகள் காய்ந்து பறப்பது போலே குடும்பத்திலே அன்பும் உண்மையும் இல்லாத போது உறவுகள் பிரிகின்றன இளமையும் முதுமையும் கடவுள் ஏன் தந்தான்? என்பதை சிந்தித்து பார்த்தால் தனிமை வருவதை தடுக்கலாம். இதை தனி ஒருவரால் செய்ய முடியாது ஆணும் பெண்ணும் ஒருமனப்பட்டு வாழ்ந்தால்தானே கடைசி வரை முதுமையிலும் கை கோர்த்து நிக்கலாம்.இதுக்கு தேவை ஒருவர் மீது மற்றவருக்கு இருக்கும் அன்பு பாசம் உண்மை நம்பிக்கை!

## ஒரு உரையாடல்..






"Ok, so the plein air class meets on Wednesdays."

ஆசிரியர் - "அரசே" எங்கள் சம்பளத்தை 60,000 ஆக உயர்த்து"

அரசு - "உனக்கு இப்போ மாசம் எவ்வளவு சம்பளம்?"

ஆசிரியர் - "50,000"

அரசு- "ஒரு வருஷத்துல எத்தனை நாட்கள்?"

ஆசிரியர் - "365"

அரசு- "அதுல உனக்கு சனி, ஞாயிறு லீவு. வருஷத்துல 104 நாளைக் கழி"

ஆசிரியர் - "261"

அரசு - "அதுல தவணைப் பரீட்சை முடிஞ்சதும் வாற லீவு மொத்தம் 10 வாரம், அதுல ஏற்கனவே சனி ஞாயிறு கணக்குல எடுத்ததால அதைக் கழிச்சா 56 நாட்கள் அதை 261ல கழிச்சா எவ்வளவு நாள் வருது?"

ஆசிரியர் - "205"

அரசு- "அதுல ஒரு 10 பவுர்ணமி நாட்களும் வரும் அதையும் கழிச்சா எவ்வளவு நாள் வருது?"

ஆசிரியர் - "195"

அரசு - "எல்லோருக்கும் எட்டு மணித்தியாலம் வேலை, உனக்கு மட்டும் ஆறு மணித்தியாலம். அதுல அசெம்ப்ளி, இன்டெர்வல், ஒரு free பாடம். அதுக்கெல்லாம் ஒரு மணித்தியாலத்தைக் கழிச்சா 5 மணித்தியாலம். இப்ப 195 ஐ 5 ஆல பெருக்கி 8 ஆல பிரிச்சு எத்தனை வருதுன்னு சொல்லு"

ஆசிரியர் - "கிட்டத்தட்ட 122 நாட்கள்"

அரசு - "அதுல ஒரு 8 ஏனைய விடுமுறை நாட்களும் வரும், அதையும் கழிச்சா எவ்வளவு நாள் வருது?"

ஆசிரியர் - "114"

அரசு - "அதுல ஒரு 24 விடுமுறை நாட்கள் ஆசிரியர் லீவு எடுக்கலாம் அதையும் கழிச்சா எவ்வளவு நாள் வருது?"

ஆசிரியர் - "90"

அரசு - "90 ஐ 30 ஆல பிரிச்சு எத்தனை மாசம் வருதுன்னு சொல்லு"
ஆசிரியர் - "கிட்டத்தட்ட 3 மாசம்"
அரசு - "வருஷத்துக்கு இப்போ உனக்கு எவ்வளவு சம்பளம் கிடைக்குது?"
ஆசிரியர் - "6 லட்சம்"
அரசு - "அதை மூன்று மாசத்தால பிரிச்சா ஒரு மாசத்துக்கு இரண்டு லட்சம். ஆமா நீ எவ்வளவு சம்பளம் கேட்டா?"
ஆசிரியர் - "அறுபதாயிரம்"
அரசு - "அப்போ இரண்டு லட்சத்துல அறுபதாயிரம் போனா மீதி நீ அரசாங்கத்துக்கு கொடுக்க வேண்டியது ஒரு லட்சத்து நாற்பது ஆயிரம். அதை எப்போ திருப்பித் தரப்போறாய்?"
படித்ததில் பிடித்தது!..

**றியாஸ் - பிரான்ஸ்**

---

## நல்மொழிகள்....

1- அறிவு தூங்கினால் முட்டாள்.

2- அன்பு தூங்கினால் சுயநலம்

3- ஆசை தூங்கினால் சந்நியாசம்

4- இதயம் தூங்கினால் மரணம்

5- மனம் தூங்கினால் ஓய்வு

6- உடல் தூங்கினால் சோம்பல்

7- கோபம் தூங்கினால் பொறுமை

8- அமைதி தூங்கினால் கவலை

9- மூளை தூங்கினால் கோமா


10- நினைவு தூங்கினால் நிம்மதி

## பெரிது..

தன்மானம் பெரிது
தாளாமை பெரிது
திருந்தி நடப்பது பெரிது
தீமை தவிர்ப்பது பெரிது
துணிந்து நடப்பது பெரிது
தூய்மை காப்பது பெரிது
தெளிவு பெறுவது பெரிது
தேசத்தை மதிப்பது பெரிது
தைரியம் சாலப் பெரிது
தொண்டாற்றுவது பெரிது
தோழமை கொள்வது பெரிது
தௌவல் பேணுதல் பெரிது

(தௌவல் - இளம்பருவம்)
(தாளாண்மை - ஊக்கம், முயற்சி)

# சபாநாயகரின் தமிழ் அபிமானம்!..



Kiri Banda Ratnayake (23 February 1924 - 30 April 2004) was a Sri Lankan politician, the Speaker of the Sri Lankan Parliament and later was the Governor of the Central Province of Sri Lanka - இலங்கைப் பாராளுமன்றத்தின் முன்னாள் சபாநாயகர், மந்திரி, மத்திய மாகாண ஆளுநர், பாராளுமன்ற உறுப்பினர்.

.........................................................................................................................................

இந்த நாடு சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து தமிழ் மொழிக்கு உரிய இடம் கொடுக்கப்படவில்லை என்னும் குறை இருந்துவருகிறது. தமிழ்மொழிக்கு உரிய இடம் கொடுப்பதென்பது ஆட்சியாளர் தமிழ்மொழிக்கு உரிய இடம் கொடுப்பது. மற்றது தமிழ் மக்கள் தமிழ்மொழிக்கு உரிய இடம் கொடுப்பது என அர்த்தப்படும். தமிழ் மக்கள் தமிழ்மொழிக்கு உரிய இடம் கொடுத்தால்தான் ஆட்சியாளர்களும் உரிய இடம் கொடுப்பார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்...

தமிழ் மக்கள் நிறைந்துள்ள சபையில் நன்கு தமிழ் அறிந்த தமிழர்கள்கூட தமிழோடு சம்பந்தப்பட்ட விடயங்களைத் தமிழில் பேசுவதில்லை. இதற்கு மாறாக, நடந்த ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடுவது பொருத்தமாகும்.சில ஆண்டுகளுக்கு முன் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் ஒரு பாராட்டுவிழா நடைபெற்றது. பாராட்டப்பட்டவர் ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவராகிய ஓர் அமைச்சர். அவர் சிங்களவர். பாராட்டிப் பேசிய தமிழர்கள் எல்லோரும் ஆங்கிலத்திலேயே பேசினார்கள். ஒருவர் சிங்கள மொழியிலும் பேசினார். எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த அமைச்சர் தமது நன்றியுரையைத் தெளிவான யாழ்ப்பாணத் தமிழிலேயே ஆரம்பித்தார்,

"எனக்கு நன்றாகத் தமிழ் தெரியும். நீங்கள் தமிழிலேயே பாராட்டுரை வழங்கியிருக்கலாம். நான் இந்த ஓடக்கரையில் இன்ன வீட்டில் வசித்தவன். அப்பமும் தோசையும் சாப்பிட்டவன்". என்று வெளுத்துவாங்கிவிட்டார். சபை வெட்கிப்போய்விட்டது.இப்படிப் பேசியவர் வேறு யாருமல்ல. அன்றைய ஆட்சியில் (1994ல்) சாபாநாயகராக வீற்றிருக்கும் கே.பீ.இரத்நாயக்க அவர்கள்தான்.... தகவல்:- **வித்துவான் வேலன். முன்னாள் ஆசிரியர், பருத்தித்துறை - ஹாட்லிக் கல்லூரி.**

# எழவைத்த வாழும் கடவுள்களில் ஒருவன் நீ திலீபா!..



இவரை ஒருநாள் தற்செயலாய் ஒரு சமூகத்தின் நடுவில் காண்கிறாள் இவர் யார்! என்ன? பேசுகிறார்! பார்க்க அமைதியான சாந்தமான முகமுங் குணமும் ஆனால்ப் பலத்த சத்தமாகப் பலர் வேற திரண்டு நிற்கிறார்களே திரள் திரளாக ! சரி என்னதான் நடக்கிறது என்று சற்று எட்டிப் பார்க்க இவள் துணிகிறாள் சற்று சனத்திரளை மெல்ல விலக்கியவளாய் உள்ளே நுழைகிறாள் உத்தரவின்றியே !விரைந்து ஆனால் நிதானமாய் அழைக்காமலே ஏதோ பிழைக்காகவே போராடுகிறார் போல என்று மனம் கூற செல்ல விழைகிறாள்.

அந்த இடமோ சாவகச்சேரி! இன்று அங்கே ஒரு திலீபனின் குரலுக்காக மக்கள் ஏங்கித் திரண்ட நினைவுகள் அன்றைய அந்த நாளைப் படம் பிடித்துக் காட்ட மறுக்கவில்லை என்று இவள் இன்றும் மறக்காத அந்த மனநிலையோடு மகிழ்வதா !சிரிப்பதா இல்லை அழுவதா என்று எதுவுமே புரியாத புதிராக என்னவென்றே தெரியாமல் ஆனால் இன்றுமொரு அகிம்சைப் போராளியை மக்கள் எதிர்பார்த்துக் காத்திருப்பதை மட்டும் இவள் உணர்கிறாள்.

**-திரேஸ் மரியதாஸ் - லண்டன்**

வடகிழக்கு வறட்சியான ஒரு வெறுமையான நிலையை அதுவும் ஒரு தலைவன் இல்லாமலே ஆயனில்லா ஆடுகளைப்போல சேவை தேவை என்பதை உணரவைத்தது இவளுக்கு ! என்ன செய்யலாம் என்று எழுந்தவளாய் எழுதுவோம் தொடர்ந்து விழிப்புணர்வைக் கொடுப்போம் .இந்த நேரத்தை இந்த நிகழ்வை இறைவன் பாவித்து நடத்துகிறாரோ என்ற எண்ணம் தோன்ற மறுபுறம் ஏன் தமிழர்களே தமிழர்களுக்குள் அடிபடுகிறார்களே அதுவும் படித்த மருத்துவர்கள் என்ற ஆதங்கம் மறுபக்கம் சிந்தையைப் பிய்க்க ,இல்லை இது ஏதும் சதியோ தமிழ் மக்களுக்கு எதிராக என்று இன்னொரு புறம் ஆழ்மனது போராட "ஆண்டவனே இது உன் திட்டம் என்றால் மீண்டெழ வை " என்று ஒருவாறு திலீபன் பிறந்த ஊர் திலீபனே இன்று உனக்காக அதே சாத்வீக வழியை இயற்கை தர விரும்பினால் அவரது ஊரின் மருத்துவரோடு தொடரட்டும் என்று மனதை ஆற்றியவளாய்....

இவ்வாறு மீண்டுமாய்ப் பழையது புதிதாக !புதியது பழையதாக என்று குழம்பியவளாய் அன்று" என் பெற்றோர் போராடி இருந்தால் நான் இங்கு பேசவேண்டி வந்து இருக்காது நாளை என் பிள்ளையும் இதையே சொல்லக்கூடாதென" மனம் கனக்க அன்று அவன் உரைத்த அவனது வார்த்தைகள் வெறும் சொற்கோவைகளாக மட்டும் நோக்கவில்லை அது அடுத்தவருக்கான தமிழ் மக்களுக்கான குரலாகவே இவள் மனதைத் தைக்க மனம் பதைபதைக்கிறாள்.

"நடக்கிறது நல்லதாகவே நடக்கட்டும் நடந்ததுவும் நல்லதாகவே நடந்தது நடக்க இருப்பதுவும் நல்லதாகவே நடக்கட்டும்" என்ற நேர்மறை எண்ணங்கள் நிழலாட மீண்டும் அன்று அந்த இடத்தை விட்டகன்றதை நினைக்கிறாள்.

அன்று முள்ளாய்த் தைத்த அந்த நினைவுகள் இன்னமும் எள்ளாய் எண்ணையாய் எரியாதோ !எரியவைக்க இன்றொருவர் வராரோ அவதாரமாய் என்று மனதுக்குள் கேள்வியும் நானே பதிலும் நானே என்று செபித்தவளாய்த் தவிக் கிறாள்! ஆழமாகவே செபிக்கும் இவள் இவர்கள் தமிழ் மொழிக் காகத்தானே உயிரைக் கொடுத் தார்கள் சரி! அந்த இலக்கை நானாவது சற்று என்னால் இயன்றதை யாவது செய்வோம் சாத்வீகமாய் என்று தொடர்கிறாள் புலம்பெயர்ந்த போதும் புலன் பெயராமலே திலீபனுடைய மொழிப்பற்றோடு! அங்கங்கே தமிழைக் கற்பிக்க எழுகிறாள்.

இவ்வாறு திலீபனைப் போன்ற பலரின் கனவுகளோடு பயணித்தவளாய் அவரை நினைக் கிறாள் இந்த மக்களுக்காகத் தமிழுக்காக உயிரையே அர்ப் பணித்தாரே அதுவும் நீராகாரமின்றிப் பன்னிரெண்டு நாட்களாக உயிரை மெல்ல மெல்ல விடுவதென்பது அவ்வளவு சுலபமல்லக்கொடுமை யுலுங்கொடுமை! அதெப்படி ஒரு நாள் விரதம் இருந்தாலே எப்ப உண்ணுவது என்று அதுவும் எமக்காக எம் தேவை களுக்காக இறைவனிடம்கேட்கும் சுயநலமுள்ள இவள் தன்னையும் அவரையும் ஒப்பிட்டு நோக்கிப் பார்க்கிறாள் ! நான் மடு அவரோ மலை என மனம் சற்றுக் குறுகிய வளாய்த் தன்னைத்தானே தேற்றுகிறாள்!

இப்படியும் தெய்வங்கள் நாங்கள் காண இருந்திருக் கிறார்களே என்று எண்ண சந்தோஷம் ஒரு புறம் மறுபுறம் எந்த இலக்கையும் அடையாமலே விடைபெற்று விட வைத்து விட்டோமே என்ற மன உளைச்சல் ஒரு புறமென ஒப்பாரி வைத்துக் கத்திக் கதற வேண்டும்போல அனலாய் தேகம் துடிக்கவெடித்து வெடித்து அழவேண்டும் போல இருந்தது இறந்ததைப்போல ஆனாலும் இன்றும் என்னைப் போன்ற பலர் அவரைப் பற்றி எழுதுகிறோம் அந்தத் தலைப்பை எடுத்து மறுபடி அவரைப் பிறப் பிக்கக் கருத்தரிக்க வந்து தந்த மனிதர்களையும் ஒரு கணம் எண்ணச் சிறிது மன அமைதி அடைந்தவளாய்க் கடவுளே! கடவுளே என்று வானத்தை அண் ணார்ந்து பிரார்த்தித்தவளாய் அவனிடமே விண்ணப்பித்ததுச் சமாதானம்!.. அமைதி!.. விடிவு!.. விரைவில் தமிழ் மக்களுக்கு விடையாய் வருமெனக் காத்து இருக்கிறாள்.

காற்றில் அவர்களின் கனவுகளைத் தூதுவிட்டுப்பதிலுக் காய் வழியோரம் விழி வைத்த வளாய்த் துங்காத இரவுகளோடு அழுதபடி விழியிருந்தும்மனித நேயத்தை எழவைக்க முடியாத பார்வையற்றவளாய் நான்ஒன்றும் மொழிக்காய்.... என்ற தாழ்வு மனப்பான்மையோடு,தமிழ் மக்க ளுக்கு விடுதலைப்பார்வை தர ஒரு வைத்தியர்ஆவது வரமாட்டாரோவெனஅன்றுவிடை பெற்ற அந்தத் தளம்இன்னமும் வளமில்லாமல் நலிந்துகிடக்கிறதே என்றும் முழங்க முடியாதவளாய் நானும் இருக்கிறேன் என்று தவித்தவளாய!..

## ஊஞ்சல்...

வீசி ஆடும் ஊஞ்சலாம்
விண்ணில் ஆடும் ஊஞ்சலாம்
ஆசை அக்கா பார்க்கவே
அன்புத் தம்பி ஆடுவான்...

பாலர் ஏறி ஆடலாம்
பாடிப் பாடி ஆடலாம்
நீல வானில் தாவியே
நிலவில் ஊஞ்சல் ஆடலாம்...

பல வர்ண ஊஞ்சலாம்
பாலகர் ஆடும் ஊஞ்சலாம்
ஆசை அம்மா ஆட்டியே
ஆட வைக்கும் ஊஞ்சலாம்...

தம்பி தங்கை ஊஞ்சலாம்
அங்கும் இங்கும் ஆடிடும்
அழகு வர்ண ஊஞ்சலாம்
ஆடிப் பாடி ஆடும் ஊஞ்சலாம்!..

## ஓடி விளையாடு பாப்பா...

ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா...

சின்னஞ்சிறு குருவி போல - நீ
திரிந்து பறந்துவா பாப்பா
வண்ணப் பறவைகளைக் கண்டு - நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா...

சொல்லில் உயர்வுதாழ்வு சொல்லேல்
அதைத் தொழுது படித்திடடி பாப்பா
துன்பம் பெருகிவந்த போதும் - நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா...

சோம்பல் மிகக்கெடுதி பாப்பா - தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா
நீதி உயர்ந்தமதி கல்வி - அன்பு
நிறைய உடையவர்கள்மேலோர் பாப்பா

## 16ம் பக்க கணக்குப்புதிர் விடை...






## சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | |
|---|---|---|---|
| மா | ண | வ | ன் |
| சி | றை | ட | ல |
| ரி | ப | க் | ல் |
| ல் | ட | கு | வி |

## குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கா | ங் | கே | ச | ன் | து | றை |
| ர் | ணி | ண் | க | டி | ட் | மு |
| த் | ளி | ப | ம் | க | ம் | ு |
| தி | க | தி | ய | ற் | த | வி |
| கை | கே | யி | ணி | ப | கி | ல் |
| ரே | வ | தி | ண் | னை | ங் | ல |
| கை | ன | ன் | பு | ரு | ச | ன் |

## சுடோக்கோ போட்டி முடிவு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 3 | 8 | 6 | 5 | 2 | 9 | 7 |
| 9 | 5 | 6 | 2 | 3 | 7 | 4 | 8 | 1 |
| 2 | 8 | 7 | 4 | 9 | 1 | 5 | 3 | 6 |
| 8 | 6 | 2 | 9 | 7 | 3 | 1 | 5 | 4 |
| 3 | 4 | 1 | 5 | 8 | 6 | 9 | 7 | 2 |
| 7 | 9 | 5 | 1 | 4 | 2 | 3 | 6 | 8 |
| 1 | 3 | 8 | 6 | 5 | 4 | 7 | 2 | 9 |
| 5 | 2 | 9 | 7 | 1 | 8 | 6 | 4 | 3 |
| 6 | 7 | 4 | 3 | 2 | 9 | 8 | 1 | 5 |

# நான்தான்!... மதவடி மயிலன்!...

நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக்கிறன்... வணக்கம்!...வணக்கம்!... எல்லாரும் சுகம் என்று நினைக்கிறன்..

கோடைகாலத்தில் பலபேர்தாய் நாட்டுக்குப் போய் வந்திருப்பியள் தானே. பலர் கண்டதெல்லாததையும் திண்டு கொழுத்து நிறைகூடியும் வந்திருப்பிள். இனி என்ன பிரசர், சீனி வருத்தம் கொலஸ்ரோல் என டொக்டர்களிடம் மாறி..மாறிச் செல்ல வேண்டியதுதானே...

ஊருக்குச் சென்றவர்கள் அங்கு பந்தா காட்டி, தண்ணியடித்து கூழும் கும்மாளமும் அடித்தவர்கள் தமது பிள்ளைகளுக்குச் சாமத்தியச் சடங்கு கலியாணம் தமது சாதிக்குள் செய்து வைத்தவர்கள், 56, 60, 70 எனப்பிறந்தநாள் கொண்டாடியவர்கள் பல ரகத்தினர் செய்த அட்டகாசங்களோ கண்கொண்டு பார்க்க முடியாது. அந்தளவுக்குக: கொண்டாட்டங்கள் களைகட்டி இருந்ததை உடனுக்குடன் தமிழ் ஊடகங்கள் காட்டிக்கொண்டுதான் இருந்தன பாருங்கோ..

நம்மட நாட்டில பொருளாதாரப் பிரச்சனையால் பெரும் நெருக்கடி. இதனால் நாட்டைவிட்டுத் தப்பி வெளிநாடுகளுக்கு எப்ப ஓடலாம் என்று பல்லாயிரக் கணக்கானோர் படாத பாடுபடுகுதுகள் பாருங்கோ.. வேலை வெட்டி ஒன்றும் இல்லாமல் வெளிநாடுகளில் இருந்து வரும் பணங்களை நல்லாய் அனுபவிக்கும் கூட்டத்தினர் மிக அதிகம் பேர்.



அது அப்படி இருக்கையில் ஜனாதிபதி தேர்தல் சூடுபிடித்து அரசியல் குழப்பங்கள் முட்டி மோதி எங்கும் எப்போதும் பிரச்சனை..பிரச்சனை என்றே மக்கள் படும்பாடு அல்லோல கல்லோலம்தான். பாராளுமன்றக் கதிரைகளையும் உள்ளூராட்சி மன்றக் கதிரைகளையும் பிடித்து சொகுசுவாழ்வு வாழ எத்தனைப்பேர் வாக்களார்களைவிட வேட்பாளர்கள் கூடப்பேர் கண்டியளோ.அந்தளவுக்கு கதிரைச் சண்டை முற்றிவிட்டது. யாராவது நாட்டின் பொருளாதாரத்துக்கு நல்ல தீர்வை வைப்பார்கள் என்றால் இது கிடையாது பாருங்கோவன்.

நம்மட அரசியல் வாதிகளும் நாளுக்குநாள் பல பிரச்சனைகளைக் கிழப்பிக் குளிர்காயும் படலம் தொடர்கதைதான் பாருங்கோ..நாடு எக்கேடு கெட்டாலும் பறவாயில்லை நாங்கள் எங்கட பணம் பண்ணும் வேலையில்தான் குறிக்கோளாக இருப்பம் என்ற போக்குத்தான் அரசியல் வாதிகள் அதிகம் பேருக்கு கண்டியளே..

சரி..சரி..இப்படியே அடுக்கிக்கொண்டு போகலாம்.. கடந்த இரண்டு மாதங்களாக "அர்ச்சுனா" என்ற பெயர் அடிபடாத சொல் உலகம் முழுவதும் ரெண்டராகிப் பெரும் சாதனைதான்..

இந்த அர்ச்சுனன் அம்புவிட்டு இன்றுவரை தமிழர் பிரதேசங்கள் மட்டுமல்ல சிங்களப் பிரதேசங்களிலும் கலக்கு கலக்கிக்கொண்டிருக்கின்றது ஒரு சாதனைதான் பாருங்கோ..

அர்ச்சுனன் பத்த வைத்த நெருப்பால் இன்று ஆசுப்பத்திரிக்காரர் கெடிக்கலங்கிக்போய் கிடங்கினம். எத்தனை ஊழல்கள் மோசடிகளை அம்பலத்துக்குக் கொண்டு வந்த பிதா மகனாகத்தான் பெருவாரியான புலம்பெயர் மற்றும் தாயகத்தமிழ் மக்கள் பார்க்கிறார்கள். சுகாதாரத்துறையில் பல ஆண்டுகளாக இடம்பெற்றுவரும் பல மோசடிகளால் எத்தனையோ உயிர்களும் அநியாயமாக போயிருக்கின்றன என்பதும் கவலைக்குரிய விடையம்தான்.

இந்தத் டொக்டர்மாரை கடவுளுக்குச் சமம் என்றுதான் எப்போதும் அனைத்து மக்களும் வழிபடுவார்கள். அப்படி வழிபட்ட தெய்வங்களில் சிலர்தான் பல வகையான மோசடிகள், ஊழல்கள் புரிந்து உயிரையும் எடுத்துக் கொண்ட துயர சம்பவங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. கடவுள்களே இப்படித் துரோகம் செய்தால் இனி யாரிடம் மக்கள் அநியாயயங்களைச் சொல்லி அழுவது.

தம்பி அர்ச்சுனன் சாவகச்சேரி வைத்தியசாலையில் இடம்பெற்ற பல ஊழல் சம்பவங்களை அம்பலத்துக்குக் கொண்டுவந்ததைத் தொடர்ந்து தெல்லிப்பளை, யாழ்ப்பாணம், மன்னார் வைத்தியசாலைகள் மட்டுமல்ல பல வைத்தியசாலைகளில் இடம்பெற்ற ஊழல்கள் மோசடிகளும் நிர்வாகச் சீர்கேடுகளும் அம்பலத்துக்கு வந்து பூகம்பமாக வெடித்துச் சிதறியுள்ளன. அரசியல் வாதிகளும் சிலர் இதில் உடந்தையாக இருந்தபடியால் அவர்கள் இச் சம்பவங்களை மூடி மறைப்பதிலேயே குறியாய் இருந்து செயற்பட்டு வருகிறார்கள். மக்கள் யாரை நம்பி வாக்களித்தார்களோ அவர்கள் இன்று துரோகிகளாகவே மாறியிருப்பது தமிழர்களின் தலைவிதி என்று நோவோம். இன்று வைத்தியத்துறை மட்டுமல்ல அனைத்து அரசதுறைகளிலும் மோசடிகள் கொடிகட்டிப் பறக்கின்றன பாருங்கோ. இதை இந்த மயிலன் சொல்லவில்லை. தமிழ் மக்களின் குரலாக ஓங்கி ஒலிக்கின்றதுதான் உண்மை...

அர்ச்சுனா சொன்ன விடையங்களால், எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளால் அநியாயமாக கைது செய்யப்பட்டு அவர் சிறைசென்றும் வந்த துயர சம்பவமும் இடம்பெற்றிருக்கின்றது. எந்த மக்களுக் காகக் குரல் கொடுத்தாரோ அந்த மக்களின் சில புல்லுருவிகளால் சிறைவாசம் சென்றிருக்கிறார். இருந்தாலும் அர்ச்சுனனின் நடவடிக் கைகளால் வைத்தியத் துறையினர் கெடிக்கலங்கிக் கிடக்க, ஊழல் புரிந்து உயிர் எடுத்தவர்கள் மௌனம் காக்கின்றனர். தமது ஊழல் நடவடிக்கைகள் வெளிவந்து தமது தொழிலுக்கும் ஆபத்து வந்து விடும் என்ற பயத்தால் ஒன்றுக்கும் வாய்திறக்காமல் இருக்கிறார்கள்.

இது இப்படிஇருக்க அர்ச்சுனன் அரசியில் குதிக்கப் போறார் என்ற செய்தி அனைத்து தமிழ் எம் பிக்களின் அடிவயிற்றைக் கலக்கியுள்ளது. அர்சுனன் அரசியலுக்கு வந்து புதுக்கட்சி தொடங்கி இளைஞர் படையைத்திரட்டி இளையோரை எம்பியாக்கிவிட்டால் தமது பிழைப்புக்கு உலை வைத்து

விடுவானோ.. என்று அனைத்து தமிழ் எம்பிமாருக்கும் பயம் மேலோங்கியிருக்கின்றது. தாம் நாலு ஐந்து தடவைகள் மக்களை ஏமாற்றி எம்பியாக வந்து, (கிழட்டு வயதிலும்) அனுபவித்த சுகபோகங்கள் தேடிய பணம் சொத்துக்கள், புகழ் எல்லாத்துக்கும் முடிவுகட்டப் போறான் இந்த அர்ச்சுனன் என்று ஆமை தனது தலையை உள்ளிழுத்து அமைதியாகக் கிடந்தது போல வாய்திறக்காமல் தலை நீட்டாமல் அனைத்து தமிழ் எம்பிக்களும் மௌன விரதம் இருந்து வருகிறார்கள். தேர்தல் வந்தால் காணும் இருக்கிற இல்லாத பொய்களையும் கூறிக்கொண்டு தாம்தான் மீட்பர்கள் என்று சொல்லிக்கொண்டு முண்டியடித்துவிடுவார்கள். இது இன்று மட்டுமல்ல பல காலம் ஏமாறுவோர் இருக்கும்வரை அவர்கள் ஏமாற்றிக்கொண்டே இருப்பார்கள் பாருங்கோ!..

தம்பி அர்ச்சுனாவைப் போல பல அர்ச்சுனாக்கள் இன்று நம் இனத்துக்குத் தேவை. இதைத்தான் புலம்பெயர் மக்களும் தாய் நிலத்து மக்களும் விரும்பி நிற்கிறார்கள். முதிய அரசியல் வாதிகள் அனைவரும் வீட்டில் இருக்கட்டும் இளைய தலைமுறையினரை அரசியல் செய்ய விடவேண்டும். ஊழலற்ற சமுதாயம் உருவாக்க வீரமுள்ள நேர்மையுள்ள திறமையுள்ள இளைஞர்கள் பாராளுமன்றம் செல்ல வேண்டும். இதற்கு கிழட்டு அரசியல் வாதிகள் இடம் விடுவார்களா?..

மூன்று மொழிகளிலும் அசத்தி அரசியல் வாதிகளையும் அரசதுறையினரையும் ஆட்டம்காண வைத்து கெடிகலங்க வைக்கும் அர்ச்சுனாமீது சில குறைபாடுகள் காணப்படுவதாகவும் ஒரு சிலர் குற்றம் சுமத்துகிறார்கள். நம்மவர்கள் குற்றம் காண்பதில் வல்லவர்கள்தானே. அவசரப்படுகின்றார். வைத்தியத் துறையினர் இவருக்கு சப்போட் இல்லை. ஓரிரு நட்களில் மாதங்களில் எல்லாவற்றையும் சீர்திருத்த முற்படுகின்றார் உடனடியாகச் சமுதாயத்தை மாற்றி அமைக்க முற்படுகிறார், அதிகமாகத் தேவை யில்லாதவற்றைப் பேசுகின்றார் இவை சாத்தியமில்லை என்று பல காரணங்களை முன்வைக்கின்றனர். சில உண்மைகள் இருப்பதையும் உணரமுடிகின்றது பாருங்கோ..

எப்படியானாலும் தம்பி அர்ச்சுனா இன்று ஒட்டுமொத்ததமிழ்ச் சமூகத்துக்குத் தேவையான ஒரு நட்சத்திரம்தான். ஒரு சிறிய தீக்குச்சிதான் ஒரு நகரத்தை அழிக்க வல்லது. அப்படியாக எங்கள் முன் தோன்றி இன்று வலம் வந்துகொண்டிருப்பவர்தான் இந்த அர்ச்சுனன். அர்ச்சுனன்போல பல அர்ச்சுனன்கள் இன்றுதமிழ்ச் சமுதாயத்துக்கு மட்டுமல்ல ஒட்டு மொத்த இலங்கைச் சமுதாயத்துக்குக் தேவை. அதற்கு சில சமூகஊட கங்கள் ஊதிப்பெருப்பித்து லாபம், சுகம் காண்பதை நிறுத்தி, உண்மை, நேர்மையை நிலைநிறுத்தப் பாடு படவேண்டும். ஊடகங்களும் சமூகத்தின் ஒரு கால் என்பதை நிலைநிறுத்த வேண்டும்.

ஒட்டுமொத்த இலங்கை மக்களின் நல்வாழ்விற்கு இலங்கையில் பல இன, மொழி அர்ச்சுனாக்கள் தேவை. அவர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும்..நல்லவை செய்யவேண்டும்.. நல்லவை நடக்கட்டும் என இந்த மயிலனும் விரும்புகின்றான்!...

## Top Ten - அதிக சம்பளம் வேண்டும் நடிகைகள்...

### கோடிகளில் புரளும் சினிமா நடிகைகள்...

புலம்பெயர் இலங்கைத் தமிழர்களின் பணமும் அடங்கும்.. தமிழகத்தில் தமிழ்ச் சினிமாவில் நடித்துவரும் இன்றைய நடிகைகளில் அதிகூடிய சம்பளம் வேண்டும் நடிகைகளின் விபரம். அதாவது ஒரு படத்துக்கு அவர்கள் வேண்டும் தொகையைப் பார்த்தால் தலை விறைக்கும். உலகம் வாழ் தமிழ்ச் சினிமா ரசிகர்கள் அள்ளிக் கொடுக்கும்வரை நடிகைகளின் சம்பளமும் உயர்ந்து கொண்டேதான் இருக்கும்....

குறிப்பாக இன்று இலங்கைத் தமிழர்களால் இந்திய தமிழ் சினிமாக்காரர்கள் கோடி...கோடியாக உழைக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது. அந்த அளவுக்கு புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் உழைப்பு இந்திய சினிமாக்காரர்களுக்குப் போய்ச் சேருகின்றது என்பது உண்மையான விடையமாகும்....

ஒரு படம் நடிக்க அவர்கள் வேண்டும் சம்பளம்...

1- திரிஷா - 9 - 10 கோடி இந்திய ரூபா
2- நயன்தாரா - 7 - 8 ” ”
3- தமன்னா - 6 - 7 ” ”
4- சமந்தா - 5 - 6 ” ”
5- பூஜா ஹெக்டே - 3 - 4 ” ”
6- காஜல் அகர்வால் - 3 - 4 ” ”
7- கீர்த்தி சுரேஸ் - 2 - 3 ” ”
8- சாய் பல்லவி - 1 - 2 ” ”
9- ஆண்டரியா - 1 - 2 ” ”
10- நித்தியா மேனன் - 1 - 2 ” ”



## மூன்று தலைமுறை நடிகர்கள்...

1- சிவாஜி - பிரபு - விக்ரம்

2- குமாரி ருக்மணி - லக்ஷ்மி -ஐஸ்வரியா

3- முத்துராமன் - கார்த்திக் - கௌத்தம்

4- நாகேஸ் - ஆனந்தபாபு - கஜேஸ்

5- கருணாநிதி - ஸ்டாலின் - உதயநிதி

# சினிமாவில் முன்னணிப் பாடகிகளின் முதல்ப் பாடல்.....

தமிழ் சினிமாப் படங்களில் பாடிப் புகழ் பெற்றவர்கள் வரிசையில் முன்னிலை வகிக்கும் பாடகிகளின் முதல்ப் பாடல்கள் எது? என்று நம்மில் பலருக்குத் தெரிந்திருக்காது. ஆகவே தெரிந்து கொள்ளுங்கள்...

1- டி.கே.பட்டம்மாள்:- (அமரர்) ""தியாக பூமி"" (1939) என்ற படத்தில் "" தேச சேவை செய்ய வாரீர் என்ற பாடலை முதன் முதல் பாடினார்.

2- பி. சுசீலா:- ""பெற்ற தாய்"" என்ற படத்தில்(1953) ""எதற்கு அழைத்தாய்"" என்ற பாடலை முதல்ப் பாடினார்.

3- எஸ்.ஜானகி:- "" விதியின் விளையாட்டு"" (1957) என்ற படத்தில் "" பெண் என் ஆசை பாழானது ஏனோ "" என்ற பாடலை முதல்ப் பாடினார்.

4- எஸ் பி சைலயா:- "" மனிதரில் எத்தனை நிறங்கள்" (1978) என்ற படத்தில் "" மழைதருமோ என் மேகம் "" என்ற பாடலை முதல்ப் பாடினார்

5- உமா ரமணன்:- (அமரர்) "" நிழல்கள் "" என்ற படத்தில் (1980) "" பூங்கதவ தாழ்த்திடவா "" என்ற பாடலை முதல்ப் பாடினார்

6- வாணி ஜெயராம்:- (அமரர்) ""வீட்டுக்கு வந்தமருமகள்"" (1973) என்ற படத்துக்காக ""ஓர் இடம் உன்னிடம்"" என்ற பாடலை முதல்ப் பாடினார்.

7- ஜான்ஸி:- "" திரிபுர சுந்தரி "" (1978) என்ற படத்துக்காக "" வானத்துப் பூங்கிளி "" என்ற பாடலை முதல்ப் பாடினார்.

8- கே.எஸ் சித்ரா:- "" சிந்துபைரவி "" என்ற படத்தில் "" நான் ஒரு சிந்து"" (1985) என்ற பாடலை முதல்ப் பாடினார்.

9- சொர்ணலதா(அமரர்):- "" நீதிக்குத் தண்டனை "" என்ற படத்தில் "" சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா "" (1987) என்ற பாடலை முதல்ப் பாடினார்.

10- பவதாரணி (அமரர்) :- "" என் பொம்முகுட்டி அம்மாவுக்கு "" என்ற படத்தி (1988) ""குயிலே..குயிலே "" என்ற பாடலை முதல்ப் பாடினார்.

11- அனுராதா:- "" பம்பாய் "" என்ற படத்தில் "" (1995) மலரோடு மலர் இங்கு "" என்ற பாடலை முதல்ப் பாடினார்.

12- சுஜாதா:- "" கவிக்குயில் "" என்ற படத்தில் "" (1977) காதல் ஓவியம் ""என்ற பாடலை முதல்ப் பாடினார்.

3- சின்மயி:- "" கன்னத்தில் முத்தமிட்டால் ""(2002) என்ற படத்தில் "" ஒரு தெய்வம் தந்த பூவே "" என்ற பாடலை முதல்ப் பாடினார்.

14- சயந்தவி:- "" அன்னியன் "" (2004) என்ற படத்தில் "" அண்டங் காக்கா " என்ற பாடலை முதல்ப் பாடினார்.

15- உஷா உதுப் :- "" மேல் நாட்டு மருமகள் "" (1975) என்ற படத்தில் "" லவ் இஸ் பியூட்டி.ஃபுல் "" என்ற பாடலை முதல்ப் பாடினார்.

16- ஸ்ரேயா கோஷல்:- "" சொல்ல மறந்த கதை "" (2002) என்ற படத்தில் "" செல்லமே செல்லம் "" என்ற பாடலை முதல்ப் பாடினார்.

17- பாம்பே ஜெயஸ்ரீ:- "" தம்பதிகள் "" (1983) என்ற படத்தில் "" வாடா கண்ணா "" என்ற பாடலை முதல்ப் பாடினார்.

18- மதுஸ்ரீ:- "" ஆகா எத்தனை அழகு "" (2003) என்ற படத்தில் ""நிலவிலே நிலவிலே "" என்ற பாடலை முதல்ப் பாடினார்.

சினிமா பின்னணிப் பாடகிகள் இன்னும் பலர் இருக்கிறார்கள்.. எனது தேடலில் கிடைத்த சில பாடகிகளை இங்கு பதிவிட்டுள்ளேன்..

.............................................................................................................................................

**தமிழ்ச்சினிமாவில்....**

தமிழ்ச்சினிமா வரலாற்றில் (365நாட்கள்) அதிக நாட்கள் (திரையிடப்பட்ட) ஓடிய படங்கள்...

1- பாட்ஷா

2- சந்திரமுகி

3- கரகாட்டக்காரன்

4- பயணங்கள் முடிவதில்லை

5- நெஞ்சத்தைக் கிள்ளாதே




**இந்திய சினிமாவில்**

**அதிக சம்பளம் பெறும்**

**நடிகைகள்..**

1- தீபிகா படுகோன் - 30 கோடி

2- பிரியங்கா சொப்ரா - 25 கோடி

3- கத்ரீன் கைப் - 22 கோடி

4- அலியா பட் - 20 கோடி

5- கரீன் கபூர் - 18 கோடி

6- ஷரத்தா கபூர் - 16 கோடி

7- திரிசா (தமிழ்) - 15 கோடி

8- வித்தியா பாலன் - 14 கோடி

9- நயன்தாரா - 12 கோடி

10- ஐஸ்வர்யா ராஜ் - 10 கோடி

( பெறுமதி இந்திய ரூபாவில் )

# பூக்களால் கிடைக்கும் பயன்கள்...

**புளியம்பூ:-** பூவை சிறிது நெய் சேர்த்து வதக்கித் துவையலாக்கிச் சாப்பிட்டால் பித்தம், வாந்தி நிற்கும். இப்பூவை கஷாயமாக அருந்தினால் வயிற்றுக்கோளாறு நீங்கும்.

**அகத்திப்பூ:-** பூவைச் சுத்தம் செய்து பருப்புடன் சேர்த்து கூட்டு சமைத்துச் சாப்பிட இதயம் பலம் பெறும். பூவைச் சாறு பிழிந்து வெறும் வயிற்றில் சாப்பிட குடல்ப்புண் ஆறும். வயிற்றுக் கோளாறுகள் தீரும்.

**எள்ளுப்பூ:-** பூவைத் தினமும் உண்டு மோர் குடித்துவர கண் நோய்கள் தீரும்.

**வெங்காயப்பூ:-** பூவையும் வெங்காயத்தையும் சம அளவில் எடுத்து வதக்கிச் சர்க்கரையும் கலந்து உண்ண வரட்டு இருமல் குணமாகும். பூவையும் வெங்காயத்தையும் சாறாக்கி இரவில் வெறும் வயிற்றில் குடித்து வந்தால் காச நோய் குணமாகும்.

**தாமரைப்பூ:-** வெண்தாமரைப் பூவைப் பாலில் போட்டுக் காய்ச்சி வரும் ஆவியைக் கண்களில் படும்படி செய்தால் கண் நோய்கள் குணமாகும். கால் லீட்டர் நீரில் பூவைக் காய்ச்சிக் கிடைக்கும் கஷாயத்தை அருந்தினால் காய்ச்சல் இருதய நோய்கள் குணமாகும்.

**முருங்கைப்பூ:-** பூவை அவியல், கூட்டு, பொரியல் என்று சமைத்து உண்ணலாம். நரம்புத் தளர்ச்சி, பித்தம் குணமாகும்.. கண் எரிச்சல் போகும். இதயத்திற்கு வலுவூட்டும். வெப்பம் தணியும். ஆரோக்கியம் பெருகும். பூவின் கஷாயம் மயக்கம், வாந்தியைக் குணப்படுத்தும்.

**செம்பருத்திப்பூ:-** பூவைப்போட்டு காய்ச்சிய எண்ணையால் கூந்தல் செழித்து வளரும். தலை குளிர்ச்சி பெறும். இரத்தம் சுத்தமாகும். இதயம் வலுவடையும். பூவைத் தண்ணீரில் கொதிக்க வைத்து தேன் சேர்த்து கிரீன் டீ போல் குடிக்கலாம்..









# முருங்கை கீரையின் மருத்துவ குணங்கள்!

முருங்கை மரத்தை பொறுத்த வரை முருங்கைக்காய், முருங்கைப் பூ, முருங்கைக்கீரை இவை அற்புதமான மருந்துப் பொருளாகும். இதில் விட்டமின் ஏ, பி, சி சத்துக்களும், சுண்ணாம்புச்சத்து, புரதம், இரும்பு, கந்தகம், குளோரின், தாமிரம், கல்சியம், மக்னீஷியம் போன்ற சத்துக்களும் உள்ளன.

முருங்கைக்கீரையோடு, பூண்டு, மஞ்சள், உப்பு, மிளகு சேர்த்து அரைத்து உண்டால் நாய்க்கடி குணமாகும். முருங்கைக்கீரையை வேகவைத்து அதன் சாற்றை குடித்து வந்தால் உடல் சூடு தணியும்.

வெப்பத்தின் காரணமாக உடலில் ஏற்படும் மலசிக்கல் நீங்கும். முருங்கை இலையை எடுத்துவிட்டு காம்புகளை நறுக்கி மிளகு ரசம் வைத்து சாப்பாட்டுடன் சேர்த்து உண்டு வந்தால் கை, கால் உடம்பின் வலிகள் யாவும் நீங்கும்.

முருங்கை இலைகளில் இரும்புச் சத்து, சுண்ணாம்புச் சத்து ஆகியவை இருக்கின்றது.

முருங்கை இலைகளை நெய்யில் வதக்கி சாப்பிட்டால் ரத்த சோகை உள்ளவர்களின் உடம்பில் நல்ல ரத்தம் ஊறும். பல் கெட்டியாகும். முடி நீண்டு வளரும். நரை முடி குறையும். தோல் வியாதிகள் நீங்கும்.

முருங்கைக்கீரை மலச்சிக்கல், வயிற்றுப் புண், கண் நோய் ஆகியவற்றுக்கு மருந்தாகவும் பயன்படுகிறது.

வாரத்தில் ஒருமுறையோ இரண்டு முறையோ முருங்கைக்கீரையை உணவாக உபயோகித்தால் ரத்தமும், சிறுநீரும் சுத்தம் அடைகின்றன. வாய்ப்புண் வராதபடி பாதுகாப்பு உண்டாகிறது.

முருங்கைக்கீரை சூப் மூட்டு வலியையும் போக்க வல்லது. கர்ப்பப்பையின் குறைகளை போக்கி கருத்தரிப்பதை ஊக்குவித்து பிரசவத்தை துரிதப்படுத்தும்.

முருங்கை இலையை கொண்டு தயாரிக்கப்படும் பதார்த்தம், தாய்ப்பால் சுரப்பதை அதிகப்படுத்தும்.

# Top 10 University In Germany
## ஜேர்மனியின் சிறந்த பல்கலைக்கழகங்கள்

ஜேர்மனியில் சிறந்த விளங்கும் 10 பல்கலைகழகங்களுக்கான பட்டியல்

Universität Hamburg
ஜேர்மனியின் சிறந்த பல்கலைகழகங்களுக்கான பட்டியலில் 10 வது இடத்தையும் உலகளவில் 205வது இடத்தையும் பெற்றுள்ளது 1919ம் ஆண்டு Weimar ஆட்சியில் தொடங்கப்பட்ட பல்கலைகழகம் இதுவாகும். தற்போது 43000 மாணவர்களுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும் இப்பல்கலைகழகத்தில் 150க்கும் மேற்பட்ட படிப்புகள் கற்றுக்கொடுக்கப்படுகிறது.

Albert-Ludwigs-Universtaet Freiburg
நகரின் மிக முக்கிய பகுதியில் அமையப்பெற்றுள்ள Albert-Ludwigs-Universtaet Freiburg பல்கலைகழகம், பொறியியல், மருத்துவம் தொடர்பான பாடங்களை கற்றுக்கொடுக்கிறது.ஐரோப்பாவிலேயே அதிகளவான மருத்துவ வசதிகள் கொண்ட இப்பல்கலைகழகத்தில் தற்போது 24000 பேர் பயில்கின்றனர்.இங்குள்ள சூழலில் பயிலும் மாணவர்களை சிறந்த ஆராய்ச்சியாளர்களாக உருவாக்கத் தவறவில்லை.ஜேர்மனியின் சிறந்த பல்கலைகழகங்களுக்கான பட்டியலில் 9வது இடத்திலும் உலகளவில் 192வது இடத்திலும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

Technische Universität Berlin
உலகளவில் 154வது இடத்தை பிடித்துள்ள இப்பல்கலைகழகம், ஜேர்மனியில் 8வது இடத்தை பெற்றிருக்கிறது.ஜேர்மனியின் முதல் தொழில்நுட்ப பல்கலைகழமான Technische Universität Berlin அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் சிறந்த ஆராய்ச்சியாளர்களை உருவாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளது. எதிர்கால சந்ததியினருக்கு சுமையை அதிகரிக்காமல் தற்கால சவால்களை ஏற்று நிலையான வளர்ச்சி கொள்கைக்கு ஏற்றவாறு மாணவர்கள் பயில்வதையும் நோக்கமாக கொண்டு செயல்படுகிறது.

Humboldt-Universität Zu Berlin
உலகளவில் 120வது இடத்தை பிடித்துள்ளது ஜேர்மனியின் சிறந்த பல்கலைகழகங்களுக்கான பட்டியலில் 7வது இடத்தில் இருக்கிறது. 1810ம் ஆண்டு தொடங்கப்பட்ட இப்பல்கலைகழகம், அனைத்து பல்கலைகழகங்களுக்குமான முன்னோடி என்றழைக்கப்படுகிறது. 1914 முதல் 1933ம் ஆண்டு வரை இயற்பியல் துறையில் சிறந்து விளங்கிய ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் இங்கு உறுப்பினராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

Karlsruher Institut Für Technologie
தகவல் தொழில்நுட்பம், ஆற்றல் ஆகியவற்றில் உலகளாவிய சவால்களுக்கு ஏற்றவாறு தங்களது பங்களிப்பை வழங்குவதையே நோக்கமாக கொண்டுள்ளது

மேலும் 22,000 க்கும் மேற்பட்ட மாணவர்களை தொழில்முறை வாழ்க்கைக்கு தயார்படுத்த ஆராய்ச்சி அடிப்படையிலான படிப்பை வழங்குகிறது.உலகளவில் 119வது இடத்தை பெற்றுள்ள ஜேர்மனியின் சிறந்த பல்கலைகழங்களுக்கான பட்டியலில் 6வது இடத்தை பிடித்துள்ளது.

Rheinisch-Westfälische Technische Hochschule Aachen
ஜேர்மனியின் மிகப்பெரிய தொழில்நுட்ப பல்கலைகழகமான RWTH Aachen 170க்கும் மேற்பட்ட படிப்புகளை வழங்குகிறது. இங்கு படிக்கும் 47,000 பேரில் 14,000 பேர் வெளிநாட்டை சேர்ந்தவர்கள், உலகத்தரம் வாய்ந்த ஆராய்ச்சியாளர்களை, மாணாக்கர்களை உருவாக்குவதே நோக்கமாகும்.ஜேர்மனியின் சிறந்த பல்கலைகழகங்களுக்கான பட்டியலில் 5வது இடத்திலும், உலகளவில் 106வது இடத்தையும் பெற்றுள்ளது.

Freie Universität Berlin
1948ம் ஆண்டு தொடங்கப்பட்ட இப்பல்கலைகழகம் ஜேர்மனியின் சிறந்த பல்கலைகழகங்களுக்கான பட்டியலில் 4வது இடத்தை பெற்றுள்ளது. அறிவியல் தொடர்பான பிரிவுகளில் சிறந்து விளங்கும் இப்பல்கலைகழகம் உலகளவில் சிறந்த ஆராய்ச்சியாளர்களை உருவாக்குவதற்கான நன்மதிப்பை பெற்று 87வது இடத்தில் நீடிக்கிறது. பல்கலைகழகம் தொடங்கப்பட்ட காலத்தில் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பிளவுபட்ட சோவியத் நகரில் உள்ள மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனையை வெளிப்படையாக விமர்சித்தனர், இது அக்காலத்தில் சர்வதேச கவனத்தை பெற்றது குறிப்பிடத்தக்கது.

Universität Heidelberg
ஜேர்மனியின் மிகப்பழமையான பல்கலைகழமான இது 1386ம் ஆண்டு தொடங்கப்பட்டதாக கூறப்படுகிறது. ஜேர்மனியின் மூன்றாவது இடத்திலும், உலகளவில் 87வது இடத்திலும் நீடிக்கிறது.150க்கும் மேற்பட்ட படிப்புகள் இங்கு கற்றுக்கொடுப்பதுடன் 30,000க்கும் மேற்பட்ட பயில்கின்றனர்.

Ludwig-Maximilians – Universität München
கல்வி மற்றும் ஆராய்ச்சி துறைகளில் 500 வருட அனுபவத்தை கொண்டுள்ள Ludwig-Maximillians-Universität München ஐரோப்பாவின் முன்னணி ஆராய்ச்சி நிலையங்களில் ஒன்றாகும்.ஜேர்மனியின் சிறந்த பல்கலைகழகங்களுக்கான பட்டியலில் 2வது பெற்றுள்ளதுடன், உலகளவில் 54வது இடத்தில் நீடிக்கிறது.

Technische Universität München
வணிகம் மற்றும் நிர்வாகம் தொடர்பான படிப்புகளில் கவனம் செலுத்த தொடங்கப்பட்ட Technische Universität München உலகளவில் சிறந்த பல்கலைகழகங்களுக்கான பட்டியலில் 37வது இடத்தில் உள்ளது. ஜேர்மனியின் மிகச்சிறந்த பல்கலைகழகம் என்ற பெயரை பெற்றுள்ளதுடன், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப உலகில் புதுப்புது ஆராய்ச்சிகளைமேற்கொண்டு எதிர்கால சந்ததியினருக்கு ஆகச்சிறந்த சூழலை உருவாக்குவதையே நோக்கமாக கொண்டு செயல்படுகிறது.

# மலேசியாவில் பொங்கிய தமிழ்...!






மலேசியாவின் "பேரா" மாநிலத்தில் அமைந்தது "ஈப்போ" நகரம். ஈப்போ நகரம் சுத்தத்திற்கும் குறைந்த வாழ்க்கைச் செலவிற்கும் பிரசித்தி பெற்றது. ஈப்போ முத்தமிழ் பாவலர் மன்றம் கடந்த 22 வருடங்களாக தமிழ்ப் பணிகளை முன்னெடுத்து வருகிறது."எங்கும் தமிழ்எதிலும் தமிழ்" என்ற பிரகடன வாசகத்துடன்(கருப்பொருளுடன்) தன் பணிகளை முன்னெடுத்து வருகின்றது.இந்த அமைப்பினால் இதுவரை மூன்று அனைத்துலக பன்னாட்டு மகாநாடுகள் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளன.

இந்த அமைப்பின் தற்போதைய தலைவராக கவிஞர் வனிதா தினகரன் பணியாற்றி வருகிறார். ஈப்போ முத்தமிழ் பாவலர் மன்றத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான "பன்னாட்டுத் தமிழ் எழுத்தாளர் தொடக்க மாநாடு" கடந்த யூலை மாதம் 21 ஆம் திகதி ஈப்போ நகரில் தமிழ் உலகம் வியக்கும் படியாக ,சிறப்பாக நடைபெற்று முடிந்தது. இம் மாநாட்டிற்கான ஏற்பாட்டுக் குழுவுக்கு டாக்டர் அருள் ஆறுமுகம் கண்ணன் தலைமை ஏற்று நடத்தினார்.

இம் மகாநாட்டிற்காக இந்தியா,இலங்கை, சிங்கப்பூர்,மொறீசியஸ்,பிரித்தானியா, பிரான்சு முதலிய பல்வேறு நாடுகளில் இருந்தும்தமிழ் எழுத்தாளர்கள் வந்திருந்தனர். மலேசியாவிலும், பிற நாடுகளிலும் தமிழுக்கும், சமூகத்திற்கும் பணி செய்யும் சான்றோர்கள் பலர் கௌரவிக்கப் பட்டனர்.அவர்களுக்கு சிறப்பு விருதுகளும் வழங்கப்பட்டன. பல்வேறு கலை நிகழ்வுகளும் சிறப்பாக நடைபெற்றன.பன்னாட்டு எழுத்தாளர்களின் புத்தக கண்காட்சி ஒன்றும் நடைபெற்றது. இம் மகாநாட்டில் பன்னாட்டுதமிழ் எழுத்தாளர்கள் எழுதிய " பன்னாட்டு சிறுகதை களஞ்சியம்" எனும் மூன்று தொகுப்பு நூல்களும் வெளியிடப்பட்டன.இந் நூல்களில் 148 எழுத்தாளர்களின் படைப்புகளும்,50 இற்கு மேற்பட்ட மலேசியபல்கலைக்கழக மாணவர்களின் படைப்புகளும்இடம்பெற்றிருந்தன.

இம் மகாநாட்டினை முன்னிட்டு சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.இம் மலருக்கு மலேசிய அமைச்சர்கள்,மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள்,பேரா மாநில ஆட்சிக்குழு உறுப்பினர்கள்,

முன்னாள் அமைச்சர்கள்,தமிழ் நாடு காமராசர் அறக்கட்டளையின் நிறுவுநர்,மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் மோகனன் பெருமாள் முதலிய பலரும் வாழ்த்துச் செய்திகளை வழங்கியிருந்தனர். தக்கார் சிறப்பு விருதுகள் 14 எழுத்தாளர்களுக்கு வழங்கப் பட்டன. மலேசிய எழுத்தாளர்களான பேராசிரியர் முனைவர் மாரி சச்சிதானந்தம்,தமிழ்மணி முனைவர் சி.வடிவேலு,தமிழ்த்திரு.சைமன் ஞானமுத்து, ஈப்போ சரளாஸ் ரீ,சிவா லெனின், முருகு மாதவன், தி.தாயுமானவன்,பெ.கந்தசாமி ,முனியாண்டி சண்முகம் ஆகியோர் "தக்கார் விருது" பெற்றனர்.

## இலங்கை பற்றியது..

- சுதந்திரம் அடைந்தது - 1948-02-04

- தேசிய கீதம் - சிறீ லங்கா தாயே

- தேசியக் கொடி - வாளேந்திய சிங்கம்

- தேசிய மலர் - நீலோற்பலம்

- தேசிய மலர் - நாகமரம்

- தேசியப்பறவை - காட்டுக்கோழி

- தேசிய விளையாட்டு - கரபந்தாட்டம்

- தேசிய இரத்தினக்கல் நிறம் - நீலம்

தமிழக எழுத்தாளர் டாக்டர் LTR இளைய கட்டப்பொம்மன்,விசாகன் மயிலாச்சலம் ஆகியோர் தக்கார் விருது பெற்றனர்.சிங்கப்பூரில் இருந்து வந்த முனைவர் இலக்குமி மீனாட்சி சுந்தரம் தக்கார் விருது பெற்றார். இலங்கை யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த கவிஞர் இரா.ஜெயக்குமார் தக்கார் விருதுபெற்றார். மியான்மாரில் இருந்து வந்த எம்.ஜி.குமார், இவ்விருதினை பெற்றுக்கொண்டார் இந்த வகையில் மலேசியா வாழ் தமிழர்களின் எழுச்சியை காட்டுவதாக இவ்விழா அமைந்தது.

**கவிஞர் இரா.ஜெயக்குமார்**
**உரும்பிராய் - யாழ்ப்பாணம்**

## இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் வருமானம் பற்றியது.. (2023ல் ஒருமாதத்தில்)

| | |
|---|---|
| -சம்பளம் | 54.285 |
| -உல்லாசக் கொடுப்பனவு | 10.000 |
| -தொலைபேசிக்கு | 50.000 |
| -பாராளுமன்ற வருகைக்கு | 17.500 |
| -அலுவலகக் கொடுப்பனவு | 1.00.000 |
| -எரிபொருள் கொடுப்பனவு | 1.79.067 |

மொத்தமாக ஒரு மாதத்தில்
பெறும் சம்பளம்... 4.10.852

**முதியோர் இல்லத்தில் வாழும் தாய் ஒருவர் எழுதிய கவிதை இது...**

இது மனிதக் காட்சிச்சாலை
எங்களிடம் பால் குடித்த
மிருகங்களும் சுயநலங்களும்
பெயர் புகழுக்காக அவ்வப்போது
வந்து போகும் இடம்தான் இது!...

# 33வது சர்வதேச கோடைகால ஒலிம்பிக் போட்டிகள் - பிரான்ஸ் - 2024

Intenational Oliympics xxxiii - 2024 - Paris - France
26.07.2024 - 11.08.2024






வரலாற்றுப்புகழ்மிக்க ஒலிம்பிக் போட்டிகள் 4 வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறுகின்றன. மாறி..மாறி ஒவ்வொரு கண்டத்திலும் நடைபெறுவது வழக்கமாக இருந்தாலும் ஆபிரிக்காக் கண்டத்தில் இன்னும் நடைபெறவில்லை என்பது வரலாறாகும். இந்த வருடம் 33வது ஒலிம்பிக் ஐரோப்பாக கண்டத்திலுள்ள பிரான்ஸ் - பாரிஸ் நகரில் நடைபெற்றது.

**ஒலிம்பிக்போட்டிகள்...**

1896ம் ஆண்டு முதலாவது ஒலிம்பிக்போட்டி கிறீஸ்லாந்து நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது 14 நாடுகளைச் சேர்ந்த 280 போட்டியாளர்கள்தான் பங்குகொண்டனர். ஆக 43 விளையாட்டுகள் நடைபெற்றதாம்.தொடர்ச்சியாக நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை 4 கண்டங்களில் மாறிமாறி இடம்பெற்றுவந்தன. பின்னர் 1924ம் ஆண்டு நவீனமயப்படுத்தப்பட்டு இற்றைவரை சிறப்பாக நடைபெற்று வருகின்றது. நவீனமயப்படுத்தப்பட்டு இது 100 வருடமாக இடம்பெற்ற போட்டியாக சிறப்புப் பெற்றுள்ளது. ( 1924 - 2024 )

**கண்டங்கள் ரீதியாகப் பார்க்கும்போது...**

| | |
|---|---|
| ஐரோப்பாவில் | - 18 தடவைகள் நடைபெற்றது |
| வட / தென் அமெரிக்கா | - 08 " " |
| ஆசியா | - 04 " " |
| அவுஸ்த்திரேலியா | - 02 " " |
| ஆபிரிக்கா | - 00 இதுவரை நடைபெறவில்லை |


**பிரான்ஸ் - பாரிஸ் 33வது ஒலிம்பிக் போட்டிகள் 2024**

இவ்வருடம் கோடைகாலத்தில் 26.07.2024 தொடக்கம் 11.08.2024 வரையும் பரா ஒலிம்பிக் 28.08.2024 தொடக்கம் 08.09.2024வரையும் நடைபெற்றன. பாரிசில் 42 அரங்குகளில் 329 வகையான விளையாட்டுகள் இடம்பெற்றது.206 நாடுகளைச் சேர்ந்த 10.741 வீர, வீராங்களைகள் போட்டிகளில் கலந்து கொணடனர்.வெற்றியாளர்களுக்கு 2.600 பதக்கங்களும் பரா ஒலிம்பிக் (மாற்றுத் திறனாளிகள்) வெற்றியாளர்களுக்கு 2.484 என மொத்தம் 5.084 பதக்கங்கள் வழங்கப்பட்டன.

இதுவரை ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற நாடுகள்....

Summer and Winter Olympic Games City Country Year Continent Summer

Athens Greece - 1896 - 1
Paris France -1900 - 2
St. Louis United States - 1904 - 3
London United Kingdom - 1908 - 4
Stockholm Sweden - 1912 - 5
Berlin Germany - 1916 - 6 Cancelled due to World War-1
Antwerp Belgium - 1920 - 7
Paris France - 1924 - 8
Amsterdam Netherlands -1928 - 9
Los Angeles United States - 1932 - 10
Berlin Germany - 1936 - 11
Helsinki Finland - 1940 - 12 Cancelled due to World War-2
London United Kingdom - 1944 - 13 Cancelled due to World War-2
London United Kingdom - 1948 - 14
Helsinki Finland - 1952 - 15
Stockholm Sweden - 1956 - 16
Rome Italy - 1960 - 17
Tokyo Japan - 1964 - 18
Mexico City Mexico - 1968 - 19
Munich West Germany - 1972 - 20
Montreal Canada - 1976 - 21
Moscow Soviet Union - 1980 - 22
Los Angele United States - 1984 - 23
Seoul South Korea - 1988 - 24
Barcelona Spain - 1992 - 25
Atlanta United States - 1996 - 26
Sydney Australia - 2000 - 27
Athens Greece - 2004 - 28
Beijing China - 2008 - 29
London United Kingdom - 2012 - 30
Rio de Janeiro Brazil - 2016 - 31
Tokyo Japan 2020-2021 - 32
Paris France - 2024 - 33
Los Angeles United States - 2028 - 34




2024 ஒலிம்பிக் போட்டியில் தற்போது உலகின் முதலாவது அதிவேக ஓட்டக்காரன் என்ற விருதைப் பெற்ற அமெரிக்கவீரன் (Noah Lyles)நோவா லைலிஸ் 9.78 செக்கன்களில் 100 மிட்டர் ஓட்டத்தில் முதலிடம் பிடித்து தங்கப்பதக்கத்தைப் பெற்றார். கடும்போட்டியாளராக விளங்கிய ஜமேக்கா நாட்டு வீரர் 1 செக்கனைத் தவறவிட்டு 2வது இடத்திற்கு வந்தார். 3வது இடத்தையும் அமெரிக்க வீரர் ஒருவரே பெற்றார். இன்று உலகின் அதிவேக ஓட்டக்காரர் இந்த மின்னல் வீரனையும் வாழ்த்துவோம்.

33வது பாரிஸ் ஒலிம்பிக் திருவிழா கோலாகலமாக நிறைவு பதக்கம் பெற்றதில் அமெரிக்கா முன்னணி.. சீனா, யப்பான் 2ம் 3ம் இடங்களைப் பெற்றன. சர்வதேச ஒலிம்பிக் போட்டியானது பல சோதனைகள் வேதனைகளோடும் பற்பல சுவார்சிமான நிகழ்வுகளோடும் வியக்க வைக்கும் நிகழ்வுகளோடும் மிகக்குதூகலமாகவும் பற்பல வேடிக்கை, விநோத, களியாட்டங்களோடு பாரிஸ் நகரில் 11.8.2024 ஞாயிற்றுக்கிழமை இரவு முடிவடைந்தது. தொடர்ந்து மாற்றுத் திறனாளிகளின் ஒலிம்பிக் போட்டிகள் (Paralympics) 28.08.2024 ஆரம்பமாகி 08.09.2024 அன்று முடிவுற்றது. அடுத்த ஒலிம்பிக் அமெரிக்கா - லோஸ் ஏஞ்சல்ஸ் நகரின் 2028 கோடைகாலத்தில் நடைபெறும்...

## Final medals table

| | Country | G | S | B | T |
|---|---|---|---|---|---|
| 1 | USA | 40 | 44 | 42 | 126 |
| 2 | China | 40 | 27 | 24 | 91 |
| 3 | Japan | 20 | 12 | 13 | 45 |
| 4 | Australia | 18 | 19 | 16 | 53 |
| 5 | France | 16 | 26 | 22 | 64 |
| 6 | Nether-lands | 15 | 7 | 12 | 34 |
| 7 | Great Britain | 14 | 22 | 29 | 65 |
| 8 | Korea | 13 | 9 | 10 | 32 |
| 9 | Italy | 12 | 13 | 15 | 40 |
| 10 | Germany | 12 | 13 | 8 | 33 |
| **71** | **India** | **0** | **1** | **5** | **6** |

## Paralympische Spiele Paris 2024

## 28. August 2024 – 8. September 2024

| Team | Gold - | Silber | - Bronze |
|---|---|---|---|
| 1-China | 94 | 76 | 50 |
| 2-Bitannien | 49 | 44 | 31 |
| 3-U.S.A | 36 | 42 | 27 |
| 4-Niederlande | 27 | 17 | 12 |
| 5-Brasilien | 25 | 26 | 38 |
| 6-Italien | 24 | 15 | 32 |
| 7-Ukraine | 22 | 28 | 32 |
| 8-Frankreich | 19 | 28 | 28 |
| 9-Australien | 18 | 17 | 28 |
| 10-Japan | 14 | 10 | 17 |

மாற்றுத்திறனாளிகளின் ஒலிம்பிக் கோட்டிகள் பாரிஸ் நகரத்தில் 8.9.2024 அன்றுபல்வேறு களியாட்டங்களுடன் நிறைவுபெற்றது. 79 நாடுகள் ஏதாவது ஒரு கிண்ணதஇதையாவது பெற்றுக்கொண்டன. முதல் 10 இடங்களையும் பெற்ற நாடுகள் இங்கே பதிவாகியுள்ளன...

# இரு ஜேர்மனிகள் ஒன்றிணைந்த நாள்..

- செல்வி சாமினா சிவதாசன் -









இரு ஜேர்மனிகளும் இணைந்த தினம் (Tag der deutschen Einheit)

ஜேர்மனி நாட்டின் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாளாக "ஜேர்மனி இணைந்ததினம் (Tag der deutschen Einheit)" விளங்குகிறது. இது ஒவ்வொரு ஆண்டும் 3ம் திகதி ஐப்பசி மாதம் கொண்டாடப்படுகிறது. இத்தினமன்று மேற்கு ஜேர்மனியும் (Bundesrepublik Deutschland (BDR)) மற்றும் கிழக்கு ஜேர்மனியும் (Deutsche Demokratische Republik (DDR) 41 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் இணைந்தநிகழ்வை ஜேர்மனி வாழ் மக்கள் நினைவு கூறுவார்கள்.

இரண்டாம் உலகப்போரில் தோல்வி அடைந்தது ஜேர்மனி. வெற்றிபெற்ற அமெரிக்கா , பிரான்ஸ், பிரிட்டன் மற்றும் அப்போதையசோவியத்யூனியன் ஆகிய நான்கு நாடுகளால் ஆக்கிரமிக்கப்பட்டது. ஜேர்மனியால் மீண்டும் ஒரு போரைத்தொடங்க முடியாது என்பதை உறுதிப்படுத்த விரும்பினார்கள். இருப்பி னும் அவர்களால் ஒரு முடிவு எடுக்க முடியவில்லை . இக்காரணத்தினால் அவர்கள் இந்நாட்டை 1949ஆம் ஆண்டு பிரித்தார்கள். கிழக்கு ஜேர்மனி சோவியத்யூனியானலும், மேற்குஜேர்மனி அமெரிக்கா , பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளாலும் நிர்வகிக்கப்பட்டது. 1961ஆம் ஆண்டு கோடைகாலத்தில் பெர்லின் நகரில் மதில் கட்டுதல் தொடங்கப்பட்டது. காலப்போக்கில் அங்கு மூன்று மீட்டர் உயரமான கான்கிரீட் சுவர் கட்டப்பட்டது. இரண்டு பகுதியிலும் எல்லையில் கடுமையான சோதனைகள் செய்யப்பட்டன.

மக்களின் வாழ்க்கை முறையும் இருபகுதியிலும் முற்றிலும் மாறுபட்டதாகத் இருந்தது. DDR; "Sozialistische Einheitspartei Deutschland (SED)" என்ற ஒரு கட்சி மட்டுமே இருந்தது. அவர்கள் தமது குடிமக்களின் விருப்பங்களை கணக்கில் எடுக்கவில்லை . அன்றாட வாழ்க்கைக்கு தேவையான அனைத்தையும் தங்கள் கைக்குள்ளேயே வைத்திருந்தார்கள். இக்கட்சியின் கட்டுப்பாட்டில் தான் பாடசாலைகள், கடைகள் மற்றும் தொழிற்சாலைகள் இருந்தன. அக்காலப்பகுதியில் அங்கு சில பொருட்கள் கிடைக்கவில்லை அல்லது குடிமக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டியிருந்தது. மேலும் பயணங்கள் செய்வது சாத்தியமில்லை (73ம்பக்கம்)

# யேர்மனிய தமிழ்பெண் எழுத்தாளர்கள் விபரம்..

- தொகுப்பு சாந்தினி துரையரங்கன் -

## யேர்மனி தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள்... தொடர்ச்சி - 33




Regd:NLKVK83324585

"விருத்தக் கவி வேந்தர்"

Nederland Suriyaththamil Television

நெதர்லாந்துச் சூரியத்தமிழ்த் தொலைக்காட்சி

"விருத்தக் கவி வேந்தர்"பட்டயச் சான்றிதழ்

28-05-2024

திருமதி. சக்திதேவி சிறினிசங்கர் அவர்களுக்கு

"விருத்தக் கவி வேந்தர்"

Netherland Suriyatamil TV Channel upon the recommendation of the committee do confer

DIPLOMA IN TAMIL GRAMMER

TO

Mrs.Sakthidevy Srinisankar

With all rights and Privileges in witness where of The Signature of the Founder of Netharland Suriyatamil TV Channel is here into affixed

NLST19

(ஜெர்மனி)

"விருத்தக் கவி வேந்தர்"

Tamil Grammer Teacher/Poet
Dr Saraswathi Baskaran

Suriyaththamil Director
Dr Shanthi Ravindran

**பெயர் - திருமதி சக்திதேவி சிறினிசங்கர்**

பிறப்பு - குரும்சிட்டி தெல்லிப்பளை
தந்தை தாய் - திரு திருமதி கதிரவேலு சிவசிரோன்மணி
கல்வி - ஆரம்பக்கல்வி - குரும்பசிட்டி பொன் பரமானந்தர் வித்தியாலயம்.
உயர்கல்வி - தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரி.
திருமணம் - திரு . சிறினிசங்கர் - 1991
தற்போதைய வாழ்விடம் -முன்சன்கிளப்பாக் (Mönchengladbach )
பிள்ளை - ஒரு ஆண்
எழுத்துத்துறை - கவிதை

தாயகத்தில் 1980 - 1990 வரை காகேசந்துறை சீமெந்து தொழிற்சாலையில் ஆங்கில தட்டெழுத்தாளராக கடமையாற்றினார்.பின்னர் 1990 யேர்மனிக்கு புலம்பெயர்ந்தார்.

யேர்மனியில் முன்சன்கிளப்பாக் தமிழ் கல்வி கலாசார நிலையத்தில் 15 ஆண்டுகளாக தமிழ்மொழியை மாணவர்களுக்கு கற்பித்து வருகின்றார். 2019 ம் ஆண்டு முதல் லண்டன் தமிழ் வானொலி , பாமுகத்தில் செவ்வாய்க்கிழமையில் நடைபெறும் சந்தம் சிந்தும் சந்திப்பு எனும் கவி நிகழ்ச்சியிலும், வியாழக்கிழமை நடைபெறும் கவிதைநேரத்திலும் கவிதைகள் எழுதிவருகின்றார். பாமுகப் பூக்கள் எனும் கவித்தொகுப்பு நூலில் இவரின் கவிதைகளும் அதில் இடம்பெற்றுள்ளன. சில இறைபாடல்கள் எழுதியுள்ளார்.

நெதர்லாந்து சூரியத்தமிழ்த் தொலைக்காட்சி ஊடகத்தில் பாவலர் , முனைவர் திருமதி சரஸ்வதி பாஸ்கரன் அவர்களிடம் மரபிலக்கணத்தை முறைப்படி கற்று கவிதை எழுதக் கற்றுக் கொண்டிருக்கின்றார்.அமெரிக்கா முத்தமிழ் இலக்கிய பேரவை இணைய வழியூடாக நடாத்திவருகின்ற கவிரங்குகளில் பங்குபற்றி வருகின்றார்.

இவர் சமூக சமய சேவைகளை விரும்பி செய்து வருகின்றார். இதனால் சிறிது காலம் மாணவர்களுக்கு சமய வகுப்புகளும் நடாத்திவந்தார். பக்திப்பாடல்கள் பாடுவதில் திறமை பெற்றவர். புலம்பெயர்வாழ்வில் தம் வாழ்வாதாரத்திற்கு என வேலை செய்தாலும் தமிழுக்கும் சமயத்திற்கும் என தம்மால் இயன்றதை செய்து வருகின்ற சக்தி சிறினிசங்கர் அவர்கள் இன்னும் எழுத்துத்துறையில் பல படைப்புகளை இலக்கிய உலகிற்கு தர வேண்டும் என வாழ்த்துகின்றோம். வளமுடனும் நலமுடனும் வாழ்க வாழ்க!..

...........................................................................................




## சிரி..சிரிப்பு!...

1) ஒருவர்:- நீங்க பொண்ணுவீடா?..மாப்பிள்ளை வீடா?..
மற்றவர்:- பக்கத்து வீடு!...

2) குமார்:- தேன் கொட்டினால் வலிக்கும் நீ ஏன் சிரிக்கிறாய்?..
ஜெகன்:- தேன் கொட்டியது எனக்கில்லை என் மனைவிக்கு.

3) திருடன்-1:-நேற்று நாம் திருடியபணத்தை எண்ணாமல் ஒழிச்சுப்போட்டாய்..
திருடன்-2:-அதுக்கென்னடா நாளைக்குப் பேப்பரிலவரும் அப்ப பார்ப்பம்!..

4) பாலன்:- நிவாரண முகாமுக்கு வந்தவங்கள் ஏன் அலறிஅடித்துக் கொண்டு ஓடுறாங்கள்?..
குணம்:- நிவாரண முகாம் என்றதற்குப் பதிலாக "நிர்வாண முகாம்" என்று யாரே எழுதிப்போட்போட்டாங்களாம்!..

5) தொழிலாளி:- ஏன் சார் சம்பளம் கேட்டால் பலாப்பழம் தாறீங்கள்?..
முதலாளி:- அதுதான் அப்பவே சொன்னேன் சுளையாய்த் தருவேனென்று!..

6) டாக்டர்:- சீனி, எண்ணெய், உறைப்பு குறைத்தால்தான் வருத்தம் சரிவரும்.
நோயாளி:- டாக்டர் முதல்ல பீசை (கட்டணம்) குறையுங்கோ!..

7) குணேஸ்:- காத்தடிச்சால் இப்படி வியர்க்குதே ஏன்?..
கணேஸ்:- நான் சைக்கிளுக்குக் காற்றடித்தேன் அதுதான் வியர்க்குது.

# இலங்கை வானொலி நினைவில் நிற்கும் குரல்கள்....



KS ராஜா - இலங்கை வானொலி அறிவிப்பாளர் ..

"வீட்டுக்கு வீடு வானொலிப் பெட்டிக்கருகே ஆவலுடன் குழுமியிருக்கும் பெருமக்கள் அனைவருக்கும் உங்கள் அறிவிப்பாளன் K.S.ராஜாவின் அன்பு வணக்கம்!"

1970, 80களில் காற்றின் அலைகளில் தவழ்ந்து வந்த இலங்கை வானொலி வர்த்தக சேவைகளில் இந்த வாசகத்திற்கு இருந்த மதிப்பே தனி! "இலங்கை" என்ற வட்டத்தினை உடைத்து, தென்னிந்தியாவிலும் அன்றைய நாட்களில் வானொலிகளை நோக்கி மக்களை ஒன்று கூட வைத்தவர்கள்..... இலங்கை வானொலியின் அறிவிப்பாளர்கள் கே.எஸ்.ராஜாவும், பி.எச்.அப்துல் ஹமீத்தும்!

எடுத்துக்கொண்ட விஷயத்தை, சில சொல்லாடல்கள் மூலம் மனதில் நிலைத்து நிற்பதாக, பொட்டில் அடித்தாற்போல் நேயர்களின் மனதில் பதியவைக்கும் இலாவகம் கொண்டவர்கள்! ஞாயிறன்று பகல் 1.30க்கு எழுபதுகளின் இறுதியில் "இசைத் தேர்தல்" என்ற பாடல்களைத் தரப்படுத்தும் நிகழ்ச்சி ஒளிபரப்பாகும்.

இப்பாடல்தான் முதலிடத்திற்கு வரும் என பந்தயம் கட்டி, ஆவலுடன் தமிழகமே காத்திருந்தது அந்த காலம். "இளமை ஊஞ்சலாடுகிறது" படத்தில் வரும் "என்னடி மீனாட்சி" பாடல் ஓராண்டுக்கும் மேலாக முதலிடத்தில் இருந்தது.

இவ் வானொலி நிலையத்தின் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களுக்கும், அறிவிப்பாளர்களுக்கும் இருந்த கற்பனைத்திறன் அலாதியானது.நிகழ்ச்சித் தயாரிப்பை பொறுத்தவரை பாட்டுக்கு பாட்டு, ஒரு நிமிடம் தமிழ், அன்றும் இன்றும் போன்ற , இன்றும் பல்வேறு கல்லூரி விழாக்களிலும், தொலைக் காட்சி சனலிலும் பார்க்கும் நிகழ்ச்சிக்களை உருவாக்கியவர்கள் இவர்கள்.

கே.எஸ். ராஜா "திரைவிருந்து" என்ற இலங்கையில் ஓடும் திரைப்பட விளம்பர நிகழ்ச்சியை நடத்துவார். கம்பீரக் குரல், மின்னல் வேகம், வார்த்தைக்கு வார்த்தை விளங்கிக் கொள்ளும்படியான தெளிவான உச்சரிப்பு...... வார இறுதி நாட்களை வானொலிக்கருகே கட்டிப் போட்ட வித்தகர் K.S.ராஜா! "அறிவிப்பு என்பது தாலாட்டுப்பாடுவது போன்றதல்ல, தூங்கி விழுபவர்களையும் உற்சாகம் கொள்ளச் செய்வது" என்று தனது குரலால் அனைவருக்கும் சக்தி பானத்தை காது வழியாக ஊட்டியவர் கே.எஸ்.ராஜா!

"நீயா?" பட விளம்பரத்தில் ஸ்ரீப்பிரியா கதறிக் கேட்கும்," என்னை விட்டுட்டு போகாதீங்க ராஜா...." இதை நிகழ்ச்சியின் இறுதியில் வைத்து, "போகவில்லை நேயர்களே.... மீண்டும் அடுத்த ஞாயிற்றுகிழமை இதே நிகழ்ச்சியில் சந்திப்போம்!" என விடைபெற்றுச் செல்வது K.S ராஜாவின் தனி அடையாளம்!!

யாழ் முற்றவெளி அரங்கில் K.J. ஜேசுதாசின் இசை நிகழ்வு! பாடகி சுஜாதாவும் வருகை தந்திருந்தார். மேடை அறிவிப்பாளர் K.S ராஜா! தமிழும் ஆங்கிலமும் கலந்து, "இசைச் சிகரமும் - அறிவிப்பு சிகரமும்" இணைந்த அந்த மேடை நிகழ்வு இன்றளவும் யாழ் முற்றவெளியையும் அது தாண்டிய கடற்பரப்பையும் வருடிச் செல்லும்!

"நான் ஏன் பிறந்தேன்" படத்தில்கே.ஆர்.விஜயாவிடம் எம்.ஜி.ஆர் பேசுவதாக வரும்....,"அழறவங்களை சிரிக்க வைக்கிறதும், சிரிக்கிறவங்களை சிந்திக்க வைக்கறதும் தான் என்னோட லட்சியம்!"என்ற வசனத்தை மட்டும் தனியே பிரித்தெடுத்து........

"மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களே! உங்கள் இலட்சியம் என்ன?" என்று நீங்கள் பேசிவிட்டு, அந்த இடத்தில் கொண்டு வந்து லிங்க் கொடுப்பீர்களே...... அடடா! இது போன்ற ரேடியோ கிராபிக்ஸை எல்லாம் இன்றும் கூட என் செவிகள் அசை மீட்டு ரசிப்பதுண்டு.

1983 இலங்கை, ஜூலை கலவரம்..... இந்தியா வந்த K.S.ராஜா, அப்போது இங்கு இயங்கி வந்த ஈழ இயக்கங்களுள் ஒன்றான "ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி"யில் இணைந்து செயற்பட்டார்.

1987 ஆம் ஆண்டில் "இலங்கை - இந்திய ஒப்பந்த"த்தைத் தொடர்ந்து இலங்கை திரும்பிய இவர் இலங்கை வானொலியில் தமது வழக்கமான பணிகளுக்கு திரும்பினார்!

இந்நிலையில், 1989ஆம் ஆண்டு கொழும்பில் இவர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார். இவரது உடல் கொழும்பு கடற்கரையில் கண்டெடுக்கப்பட்டது. இவரது "நினைவு சமாதி" கொழும்பு பொரல்லை மயானத்தில் உள்ளது.

K.S.ராஜா, தூய தமிழில் உரையாடும் வேகத்துக்கு ஈடு கொடுக்க இது வரை தமிழினத்தில் யாரும் பிறந்ததுமில்லை, பிறக்கப் போவதுமில்லை!

கோடான கோடி தமிழ் வானொலி நேயர்களின் மனதில் இன்றும் அவரது நினைவுகளும், அவரது மதுரக்குரலும் ஒலித்துக்கொண்டே இருக்கின்றது!

**நன்றி - யாழ் சுதாகர்., ஆருத்ரா, ஜனா**




# 75 ஆண்டுகள் நிறைவுகாணும் நேட்டோ அமைப்பு

North Atlantic Treaty Organization (NATO)

## வட அத்திலாந்திய ஒப்பந்த அமைப்பு

பரவலாக நேட்டோ (NATO) என அறியப்படும் வட அத்திலாந்திய ஒப்பந்த அமைப்பு (North Atlantic Treaty Organization) தோற்றம் பெற்று 75வது ஆண்டை 04.04.2024ல் நிறைவு செய்தது.

1949 ஆம் ஆண்டு ஏப்ரல் 4 ஆம் நாள் வட அத்திலாந்திய ஒப்பந்தம் கையெழுத்தானதன் மூலம் உருவான ஒரு இராணுவக் கூட்டணி ஆகும். இதன் தலைமையகம் பெல்ஜியத்தின் தலைநகரமான பிரசல்சில் உள்ளது. வெளியார் தாக்குதலுக்கு எதிராக பரஸ்பர பாதுகாப்பு உதவி வழங்குவதற்கு இதிலுள்ள உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் இணங்கியதன் மூலம் இவ்வமைப்பு ஒரு கூட்டுப் பாதுகாப்பு முறையைக் கொண்டுள்ளது.

இதன் முதல் சில ஆண்டுகள் இது ஒரு அரசியல் கூட்டணியாகவே செயல்பட்டது. ஆனாலும், கொரியப் போர் இதன் உறுப்பு நாடுகளுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. இதனைத் தொடர்ந்து இரண்டு ஐக்கிய அமெரிக்கத் தளபதிகளின் கீழ் ஒன்றிணைந்த படைக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. இக் கூட்டணியின் முதல் செயலாளர் நாயகமான லார்ட் இஸ்மே என்பவர் பதவி ஏற்றார்.

1ம் 2ம் உலக யுத்தத்தில் உலகின் பல நாடுகளில் லட்சக்கணக்கானோர் மாண்டு மடிந்தனர். சில நாடுகளின் ஆதிக்கம் ஆயுத பலத்தால் பேரழிவுகள் இடம்பெற்றன. யேர்மனி போன்ற நாடுகளின் சர்வாதிகார நடவடிககைகளால் அன்று உலகமே போரிடவேண்டிய நிலை ஏற்பட்டது. 2ம் உலக யுத்தம் பெரும் பேரழிவுகளுக்குப் பின்னர் உலக மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக ஐரோப்பிய (11) நாடுகளும் அமெரிக்காவும் ஒன்றிணைந்து 12 நாடுகள் இந்த அமைப்பை04.04.1949ம் தி-கதி தோற்றுவித்தன. பின்னர் படிப்படியாக இணைந்து தற்போது 32 நாடுகள் அங்கத்துவம் பெறுகின்றன.

1949 - 2024 வரை உலகின் பல நெருக்கடிகளை இந்த அமைப்பு கட்டுப்படுத்த ஆயுத பாவனைகளையும் பல கோடி பணச்செலவையும் பல்லாயிரம் படைகளின் இழப்புகளையும் சந்தித்து வந்துள்ளது. குறிப்பாக இக்காலப் பகுதிகளில் ஈராக் - ஈரான் யுத்தம், ஈராக் - குவைத் வளைகுடா யுத்தம், சோவியத் நாடுகள் மற்றும் யூக்கோஸ்லாவிய துண்டுகளாகப் பிரிந்தமை, ஆப்கானிஸ்தான் யுத்தம், செப்டெம்பர்-11 அமெரிக்க தீவிரவாத யுத்தம், ஈராக் - அமெரிக்க யுத்தம், லிபியா யுத்தம், துருக்கி - குர்திஸ்தான் யுத்தம், உக்ரைன் - ரஷ்ஷியா யுத்தம், பலஸ்தீனம்-இஸ்ரேல் யுத்தம் எனப் பல்வேறு யுத்தங்களின் தாக்கத்தை சந்தித்து வந்துள்ளது.

இந்த 32 நாடுகளும் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் எதிர்கால நலன்கருதியும் ஒரு கூட்டாக அமைக்கப்பெற்றதே இந்த நேட்டோ அமைப்பாகும். இவை மட்டுமல்லாமல் ரஷ்ஷியா, சீனா, யப்பான், வடகொரியா போன்ற நாடுகளின் அணு ஆயுத ஏவுகணை, இரசாயன குண்டுத்தாக்குதல்கள் ஏற்பட்டால் அவற்றை எதிர்கொள்ளுவதற்கும் சமாளிப்பதற்குமான ஒரு கூட்டு முயற்சியாகவே இந்த அமைப்பு தோற்றம் பெற்றது.

அத்துடன் உலக சமாதானத்தை நிலைநாட்டுவதற்காகப் பெரும் பங்காற்றி வருகின்றது என்று கூறலாம். இத்தோடு வல்லரசு நாடுகள் தமது பலத்தால் ஏனைய நாடுகளை அடிபணிய வைப்பது மற்றும் அணு ஆயுத, இராணுவ பலத்தை பிரயோகிக்காமல், இராணுவ பலத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதும், அணு ஆயுத ஏவுகணைகளையும் மற்றும் இரசாயன ஆணுக்குண்டுகளை பெருமளவில் உற்பத்தி செய்வதையும் இந்த அமைப்பு கட்டுப்படுத்துகின்றது என்றும் கூறலாம்.

ஆட்சி மொழி - ஆங்கிலம் , பிரெஞ்
பொதுச் செயலாளர் -புதியவர் Mark Rutte ( முன்னையவர் Jens Stoltenberg )
ராணுவச் செயற்குழுத் தலைவர் -கியாம்பாவுலோ டி பாவுலோ
Formation 4 April 1949 (75 years ago)
Type - Military alliance
Headquarters - Brussels, Belgium
Official language - English and French
Secretary General - புதியவர் Mark Rutte ( முன்னையவர் Jens Stoltenberg )
Chair of the NATO Military Committee Rob Bauer
Supreme Allied Commander Europe Christopher G. Cavoli

Membership - 32 states - அங்கம் வகிக்கும் நாடுகள்...
(1) Albania (2) Belgium (3) Bulgaria (4) Canada
(5) Croatia (6) Czech Republic (7) Denmark
(8) Estonia (9) Finland (10) France (11) Germany
(12) Greece (13) Hungary (14) Iceland (15) Italy
(16) Latvia (17) Lithuania (18) Luxembourg
(19) Montenegro (20) Netherlands (21) Macedonia
(22) Norway (23) Poland (24) Portugal (25) Romania
(26) Slovakia (27) Slovenia (28) Spain (29 Sweden
(30) Turkey (31) United Kingdom (32) United States

# ஐக்கிய நாடுகள் சபை தோற்றம்...



ஐ.நாடுகள் சபை 2ம் உலகப்போருக்கு பிறகு 1945ம் ஆண்டு சர்வதேச அமைப்பாக ஐ.நாடுகள் சபை 26.06.1945 ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதன் தலைமை அலுவலகம் அமெரிக்காவின் நியூயோர்க்கில் நிறுவப்பட்டது. இச் சபையை " ஐ.நாடுகள் " என்ற பெயரை அமெரிக்க ஜனாதிபதி பிராங்லின் ருஸ்வேல்ட் அவரால் உருவாக்கப்பட்டதாகும்

ஐ.நாடுகள் என்பது உலக அமைதி,மற்றும் பாதுகாப்பை பேணுதல் நாடுகளுக்கிடையே நட்புறவு உறவுகளை வளர்த்தல் பன்னாட்டு ஒத்துழைப்பைப் பேண நாடுகளின் நடவடிக்கைகளை ஒத்துழைப்பதற்கான மையமாக அமைந்தது

1ம், 2ம் உலக யுத்தத்தில் 5 கோடிக்கும் அதிகமான மக்கள் இறந்தனர்.எனவே அமெரிக்கா,சோவியத் ரஷ்யா,இங்கிலாந்து சீனா என்பன நாடுகள் நிரந்தர அமைதி ஏற்படுத்த ஐ.நாடு சபை உருவானது.ஐ.நாடுகளின் பொதுச்சபை அதனது 193 வது உறுப்பு நாடாக தெற்கு சூடான் அதிகார பூர்வமாக இணைந்தது. 194வது நாடாக வருவதற்குப் பலஸ்தீனத்தைப் பல நாடுகள் அங்கீகரித்திருக்கின்றன.

இச்சபையின் முக்கிய பணிகளாக நாடுகளிடையே போர், உள்நாட்டுப் போர் என்பவற்றால் பாதிக்கப்படும் மக்களைப் பாதுகாத்தல். நாடுகளிடையே போர் மூளாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படும் மக்களைப் பாதுகாத்தல், உலகின் கொடிய நோய்களிலிருந்து பாதுகாத்தல், கல்வி, சமூக, விஞ்ஞான மேம்பாட்டுக்கு உழைத்தல், தொழிலாளர் உரிமைகள், நாடுகளின் சுதந்திரம், இறையாண்மையைப் பாதுகாத்தல் மற்றும் உலகின் அமைதியைப் பேணுதல் போன்ற பல விடையங்கள் அடங்கும்...

தற்போதைய பொதுச் செயலாளர் 2015 தொடங்கி இற்றைவரை அன்ரோனியோ குற்றரஸ் ( Antonio Guterres ) என்பவர் பதவியில் உள்ளார்.இப்பதவியை 5 ஆண்டுகள் கொண்ட ஒன்று அல்லது இரண்டு பதவிக் காலங்களுக்கு ஒருவர் பதவி வகிப்பர்.இப்பதவியில் வகிப்பவர் நிரந்தர உறுப்பு (வீட்டோ அதிகாரம்) நாடுகளைச் சேர்ந்தவராக இருக்கக் கூடாது என்பதும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது..

**ஜெயா நடேசன் - ஜேர்மனி**






## ஜேர்மனியில் முதலாவது தமிழ்ப்படம்

## " நாளைய மாற்றம்" திரைப்பட விமர்சனம்

(கலைவாணி.ஏகானந்தராஜா)

எம்மவர் திரைப்படம் என்று நினைக்காது சென்று பாருங்கள் வியந்து போவீர்கள். தியேட்டரிலிருந்து வெளியே வரும்போது மனதில் மகிழ்ச்சி மட்டும்தான் சிம்மாசனமிட்டு உட்காரந்திருக்கும்.

நாளைய மாற்றம் திரைப்படத்தை நான் தியேட்டரில் பார்த்தேன். சிறப்பான கதை அம்சமுள்ள படம். ஜேர்மனியிலும் பாரீசிலும் இலங்கையிலும் படப்பிடிப்பை செய்துள்ளார்கள். இலங்கையில் எடுக்கப்பட்டவை மிக சிறப்பாக கதையை ஒட்டிய சூழலில் எமது உணர்வுடன் கலந்ததாக இருந்தது. தாயகத்திலிருந்து வெளிநாடு புறப்பட்ட ஒரு பெண்ணின் அவலநிலை, ஊர்ச் சனங்களுக்கு பயந்து தன் பிள்ளையின் வாழ்க்கையை சீரழித்த தாய், தஞ்சம் என்று ஒதுங்கிய இடத்தில் "வேலியே பயிரை மேயக் காத்திருக்கும் அவல நிலை" நிகழ்காலத்தில் தாயகத்தில் நடைபெறும் எம்மவரின் தவறான செயற்பாடுகள், மூட நம்பிக்கைகள் சமூக வேறுபாடு என யதார்தங்களை வெளிக்கொணர்ந்த அருமையான படம்.

பாடல்களின் இசையமப்பு சிறப்பு என்பதாஇ குரலிசை சிறப்பு என்பதா பாடல் வரிகள் சிறப்பென்பதா? மொத்தத்தில் இரண்டு பாடல்களுமே தரமான பாடலாக அமைந்தன.ஒரு பாடலுக்குள்ளேயே கதாநாயகியின் வாழ்க்கையின் பிற்பகுதி அழகாக காட்டப்பட்டது. மற்றொரு பாடலுக்குள்ளேயே தாயக நிலமையும் 2009 கடைசிப் போர்ச்சூழலும் அதனால் தந்தையின் இழப்பு தாய்மாமன் பிள்ளையின் இழப்பு என்பன கண்களில் நீரை வரவழைத்தது. சிறிய பாத்திரங்களிலிருந்து பெரிய பாத்திரங்கள்வரை நடிப்பு இயல்பாகவும் உணர்வுபூர்வமாகவும் அமைந்திருந்தது.

இயக்குனர் திருமதி சிபோ.சிவகுமார் முதல் படத்திலேயே பெரு வெற்றியை அடைந்துள்ளார் என்றே கூறவேண்டும். மனைவிக்கு உறுதுணையாக இருந்து கைகொடுத்த திரு.சிவகுமாரை பாராட்டுகிறோம். அத்துடன் நடிகர்கள், இசையமைப்பாளர்கள், பாடகர்கள், ஒலிப்பதிவில், படப்பிடிப்பில் உதவிய அனைவரையும் மனதார பாராட்டி மகிழ்கிறோம். இந்தப்படம் தாயகத்தில் காட்டப்பட்டு அங்கு உள்ள மக்களில் பத்து வீத மக்களாவது நாளைய மாற்றத்தை ஏற்படுத்துவார்களேயானால் அதுவே சிபோ.சிவகுமாரன் அவர்களுக்கு மாபெரும் வெற்றியாக அமையும்...



# மனிதநேயச் செயற்பாட்டாளர்.. மெண்டிஸ் காலமானார்..

சிங்கள இனத்தவராக இருப்பினும் தன் பரந்த மனத்தினால் மனிதர்களை மனிதர்களாக நேசித்து மனித உரிமைகளை மதித்து தமிழினத்தின் உரிமைக்காக தன் வாழ்வையே அர்ப்பணித்து நின்ற அதி உன்னத மனிதம் விராஜ் மெண்டிஸ் சாவை அணைத்த செய்தி இடியாக அதிர்ச்சி தருகிறது.

ஈழத்தில், தமிழ் மக்களின் விடுதலை ஊடாகவே சிங்கள மக்களின் சமூக விடுதலை வென்றெடுக்கலாம் என்று முழுமையாக நம்பிய ஒரு மனிதன். ஆலோசகரும், விமர்சகரும் மனிதநேயச் செயற்பாட்டாளருமான இவர்தமிழ் விடிவிற்கான செயற்பாடுகளுக்குப் பின்புலமாக இயங்கியவரும், IMRV - அனைத்துலக மனித உரிமைகள் அமைப்பின் தலைமை இயக்குநருமாகிய திரு. விராஜ் மெண்டிஸ் அவர்கள் 16.08.2024 யேர்மனியில் காலமானார் என்பதனை ஆழ்ந்த வேதனையோடு அறியத் தருகிறோம்.

திரு. விராஜ் மெண்டிஸ் அவர்கள் தனது வாழ்நாளின் பெரும்பகுதியை எமக்காகவும், எமது உரிமைக்காகவும், எமது விடுதலைக்காகவும் தன்னை அர்ப்பணித்து யோமனியில் பல தசாப்த காலங்களாக பன்முக ஆற்றலோடு அனைத்துத் தளங்களிலும் முன்னின்று பங்காற்றியவர் என்பது அனைவரும் அறிந்ததே.

இவரது இழப்பானது தமிழினம் ஈடுசெய்ய முடியாத ஒன்றாக அமைந்துள்ளது. தனது இறுதி மூச்சுவரை தமிழ்மக்களுக்காகப் பல தளங்களில் குரல்கொடுத்து வந்துள்ளார்.இந்தப் பெருமானோடு சில வருடங்களின் முன் இரு தடவைகள் கலந்தரையாடியதை மறக்க முடியவில்லை. அன்னாரின் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல ஆண்டவனை வணங்குகின்றோம்...

### ஆழ்ந்த இரங்கல்கள்



**அ.சேகுவேரா (இசைப்பிரியன்)**
(பொறுப்பாசிரியர் - எழுநா ஆவணப்பட வரிசை)

தோற்றம் - 15.10.1986 மறைவு - 25.07.2024

# ஆழ்ந்த இரங்கல்கள்

இலங்கையில் தமிழ் ஆவணப்பட வரிசையின் பொறுப்பாசிரியராக இருந்தவர் இசைப்பிரியன் என்று அறியப்பட்டவருமான “அ.சேகுவேரா“ அவர்கள் 25.07.2024 அன்று காலை காலமானார் என்ற செய்தி பெரும் வேதனையை ஏற்படுத்தியது.

வன்னி - புனிதபூமி சிறுவர் இல்லத்தில் வளர்ந்து, பாடசாலைப் படிப்பை முடித்து, போராட்ட காலத்தில் நிதர்சனம் தொலைக்காட்சியில் பணிபுரிந்த இவர், 2009 இற்குப் பின்னர் நிமிர்வு, சமூகம் ஊடகம், பல ஊடகங்களிலும் ஊடகவியலாளராகப் பணியாற்றியுள்ளார். இவர் வட போர்முனை பயிற்சி ஆசிரியராக இருந்து இறுதிப் போரில் காணாமல் ஆக்கப்பட்ட செஞ்சுடரின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் போராளியும், ஊடகவியலாளரும், வவுனியா பிரஜைகள் குழுவின் ஊடகப் பேச்சாளரும், அரசியல் - சமூகச் செயற்பாட்டாளருமான இவர் சுயாதீன ஊடகவியலாளராகவும், பத்தி எழுத்தாளராகவும், அரசியல் விமர்சகராகவும், கலைஞனாகவும் பல்துறைகளிலும் கால் பதித்துள்ளார். இசைப்பிரியன் சமூக மாற்றத்திற்கான ஒருவராவார் தன்னுடைய ஊடகப் பயணத்தின் பல்வேறு பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்திருந்தார்.

நம் சமூகத்தில் பேசப்படாத விடயங்களை ஆவணப்படத்தின் ஊடாக வெளிக்கொணர வேண்டும் என்பதில் இவர் அதீத ஆர்வம் காட்டியிருந்தார். ஊடகப் பணிகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டுவந்த இசைப்பிரியனின் இழப்பு பேரிழப்பாகும்.இவரைப் பிரிந்து துயருறும் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரது ஆன்மா இயற்கையில் இளைப்பாறட்டும்!

எமது மண் சஞ்சிகையிலும் முன்னர் பல ஆண்டுகள் கவிதை, கட்டுரை போன்ற பல விழிப்புணர்வு விடையங்களை எழுதிவந்தார். இவரை நேரடியாகக் காணாவிட்டாலும் பல தடவைகள் தொலைபேசி தொடர்பை எம்மோடு பெணிவந்தார். பன்முக ஆளுமையுடைய நல்லதொரு எழுத்தாளர் கலைஞர். அன்னாரின் இழப்பானது தமிழுலகத்திர்குப் பேரிழப்பாகவே கருதுகின்றோம்....

# எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் 17,140,354 பேர் வாக்களிக்கத் தகுதி

கொழும்பு, ஒக. 06

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்காக நாட்டின் அனைத்து வாக்கெடுப்பு மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை 17,140,354 என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாக்கெடுப்பு மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை பின்வருமாறு : -

1. கொழும்பு - 1,765,351
2. கம்பஹா - 1,881,129
3. களுத்துறை - 1,024,244
4. கண்டி - 1,191,399
5. மாத்தளை - 429,991
6. நுவரெலியா - 605,292
7. காலி - 903,163
8. மாத்தறை - 686,175
9. அம்பாந்தோட்டை - 520,940
10. யாழ்ப்பாணம் - 593,187
    யாழ்ப்பாணம் மாவட்டம் - 492,280
    கிளிநொச்சி மாவட்டம் - 100,907
11. வன்னி - 306,081
    வவுனியா மாவட்டம் - 128,585
    மன்னார் மாவட்டம் - 90,607
    முல்லைத்தீவு மாவட்டம் - 86,889
12. மட்டக்களப்பு - 449,686
13. அம்பாறை - 555,432
14. திருகோணமலை - 315,925
15. புத்தளம் - 663,673
16. குருணாகல் - 1,417,226
17. அநுராதபுரம் - 741,862
18. பொலநறுவை - 351,302
19. பதுளை - 705,772
20. மொனராகலை - 399,166
21. இரத்தினபுரி - 923,736
22. கேகாலை - 709,622

இதுவரை ஜனாதிபதி பதவி வகித்தவர்கள் வரிசை..



JRJ Premadasa Wijetunga Chandrika Mahinda Sirisena Gotabaya



ரணில் விக்கிரமசிங்க

# யேர்மனியில் வலதுசாரிக்கட்சி அமோக வெற்றி...

2 மாநிலத் தேர்தல்களின் முடிவுகள்... வெளிநாட்டவர்களுக்கான எதிர்ப்பு அதிகரிப்பு...

யேர்மனியில் 16 மாநிலங்கள் காணப்படுகின்றன. அவற்றில் 2 மாநிலங்களின் சக்ஸன்(Sachsen) ரூறிங்கன் (Thüringen) தேர்தல்கள் 01.09.2024 அன்று நடைபெற்றன. இந்தத் தேர்தலில் வலதுசாரிக்கட்சியும் வெளிநாட்டவர்களுக்கு எதிரான கட்சியுமான A&D ( Alternative für Deutschland) அமோக வெற்றி பெற்றிருக்கிறது.

யேர்மனியின் தற்போதயை ஆளும்கட்சிகள் ( SPD , Grüne, FDP ) மற்றும் எதிர்க்கட்சி ( CDU ) தோல்வியைச் சந்தித்துள்ளன. இதே வேளை ரூறிங்கன் மாநிலத்தில் வலதுசாரிக்கட்சியான A&D 1வது இடத்தைப் பிடித்து வரலாற்றுச் சாதனையைப் பதிவு செய்துள்ளது.

புதிதாகக் களமிறங்கிய டீளுறு ( Bündnis Sahra Wagenknecht ) கட்சியானது இரு மாநிலங்களிலும் வெற்றிபெற்று (15 + 15) 30 இடங்களை (MP) பெற்றிருப்பதும் இன்னுமொரு வரலாற்றுச் சாதனையாகும்.

யேர்மனியில் அண்மைக் காலங்களாக இடம்பெற்றுவரும் வெளிநாட்டவர்களின் கத்திக்குத்து கொலைகள் காரணமாகவும் வெளிநாட்டவர்களின் கட்டுக்கடங்காத வருகை, யேர்மானியர்களுக்கு வேலை இன்மை, பொருளாதார நெருக்கடிகள், வெளிநாட்டவர்களின் குற்றச் செயல்கள் அதிகரிப்பு, நிறவெறி போன்ற பல காரணங்களால் தற்போதய ஆட்சியாளர்களுக்கு எதிராகவே மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். மேற்குறிப்பிட்ட விடையங்கள் இன்னும் அதிகரிக்குமானால் ஒட்டுமொத்த வெளிநாட்டவர்களுக்கும் எதிரான நடவடிக்கைகள் அதிகரிக்கும் என்பது உறுதியாகின்றது. அந்தளவுக்கு யேர்மனியர் பலர் தமது வெறுப்பை இந்தத் தேர்தலில் வெளிக்காட்டியிருக்கிறார்கள்.

ஆகவே இந்த நாட்டில் வாழும் வெளிநாட்டவர்கள் யேர்மன் மக்களோடு ஒன்று சேர்ந்து அரசின் சட்டதிட்டங்களை மதித்து, கடைப்பிடிக்க வேண்டும். அமைதியை விரும்பி வாழும் யேர்மனிய மக்களோடு நாம் சகோதரத்துவத்துடனும் அன்பாகவும் வாழப் பழகவேண்டும். இல்லையேல் வெளிநாட்டவர்கள் எதிர்காலத்தில் பல இன்னல்களைச் சந்திக்க நேரிடும் என்பதை இந்தத் தேர்தல் முடிவுகள் உணர்த்தியிருக்கின்றன.

இரு மாநிலங்களின் தேர்தல் முடிவுகளைப் பார்ப்போம்...

Wahlergebnis Sitze im Landtag -Sachsen

| | | | |
|---|---|---|---|
| CDU | 31,9% | - | 41 ( MP) |
| AfD | 30,6% | - | 40 |
| BSW | 11,8% | - | 15 |
| SPD | 7,3% | - | 10 |
| Grüne | 5,1% | - | 7 |
| Linke | 4,5% | - | 6 |
| FW | 2,3% | - | 1 |
| | | | --------- |
| | | | 120 |

Wahlergebnis Sitze im Landtag - Thüringen

| | | | |
|---|---|---|---|
| AfD | 32,8% | - | 32 (MP) |
| CDU | 23,6% | - | 23 |
| BSW | 15,8% | - | 15 |
| Linke | 13,1% | - | 12 |
| SPD | 6,1% | - | 06 |
| Sonst | 4.4% | - | 00 |
| Grüne | 3,2% | - | 00 |
| FDP | 1.1% | - | 00 |
| | | | ----------- |
| | | | 88 |

# தாயகச் செய்திகள் சில...

21.07.2024- வருடாவருடம் சுமார் 3000 பேர்வரை பல்வேறு காரணங்களால் தற்கொலை செய்கிறார்கள் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

22.07.2024- முல்லைத்தீவு-கொக்கிளாய் மனிதப் புதைகுழிகளிலிருந்து இதுவரை 5 மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. புதைகுழி அகழ்வு வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

23.07.2024- யுத்தம் முடிவடைந்து 14 வருடங்கள் நிறைவடைந்தும் யாழ் குடாநாட்டில் 3.571 ஏக்கர் நிலப்பகுதி படையினர் வசமுள்ளது என யாழ் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

24.07.2024- தமிழ்க்கட்சிகள் 50 பொது அமைப்புகள் ஒன்று சேர்ந்து "தமிழ்த் தேசிய பொதுக்கூட்டமைப்பு " என்னும் பெயரில் புதிய கட்டமைப்பு யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டது.

25.07.2024- வெலிக்கடை படுகொலையின் 41 வது வருட நினைவு தினம் நாட்டின் பல பகுதிகளில் நினைவு கூரப்பட்டது.

26.7.2024- T-20 ஆசியாக் கிண்ண கிரிக்கட் போட்டியில் இலங்கை பெண்கள் அணி இந்திய அணியை வென்று கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது.

27.07.2024- வடமாகாணத்தில் 97 வீதமான கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக வடபகுதி ஆளுநர் தெரிரிவித்தார்.

31.07.2024- இந்த வருடம் யூலை மாதம்வரை 32.078 டெங்கு நோயாளர்கள் அடையாளம் கண்டிருப்பதாக சுகாதரா அமைச்சு தெரிவித்தது.

01.08.2024- 2023ம் ஆண்டில் 9.436 சிறுவர் துஸ்பிரயோக வழக்குகள் பதிவாகியிருப்பதாகவும் 53 சிறுமிகள் கர்ப்பம் தரித்தனர் என்றும் 125 சிறுவர்கள் போதைக்கு அடிமையாகியுள்ளனர் எனவும் அரசு தெரிவித்துள்ளது.

02.08.2024- நாட்டின் சனத்தொகையில் 67 சதவீத மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதில்லை என நீர் வழங்கல் அமைச்சு அறிவித்துள்ளது.

03.08.2024- யாழ் - தாளையடிப் பகுதியில் 266 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்ட நீர் சுத்திகரிப்பு நிலையத்தை ஜனாதிபதி திறந்து வைத்தார்.

04.08.2024- இவ்வருடம் முதல் 3 மாதங்களில் சுற்றுலாத்துறைக்கு 150 கோடி டொலர் வருமானம் கிடைத்துள்ளது.

10.08.2024- இலங்கையில் (H.I.V) எயிட்ஸ் நோயாளர் தொகை அதிகரித்துள்ளது. இதுவரை 3.500 பேர் அடையாளம். 52 சிறுவர்களும் அடையாளம். 81 வீதம்பேர் தீவிர சிகிச்சைப் பிரிவில். மருத்துவ சட்ட நிபுணர் தெரிவித்துள்ளார்.

20.08.2024- நாட்டில் கடந்த 5 ஆண்டுகளில் பிறப்பு வீதம் குறைவடைந்துள்ளது. 2019ம் ஆண்டு பிறப்பு பதிவான எண்ணிக்கையைவிட 2023ல் 70.000 பேர் குறைந்துள்ளதாக புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்தது.

24.08.2024- புகைத்தல், மதுபானம் பாவனையால் நாட்டில் ஒரு நாளில் 100 பேர்வரை இறப்பு. ஒருநாளில் புகைப்பிடித்தல் மதுபான பாவனையால் 121 கோடி ரூபா செலவு செய்யப்படுகின்றது. அரச புள்ளிவிபரம் தெரிவித்தது.

28.08.2024- நாட்டிலுள்ள 5 பெண்களில் 2 பெண்கள் நெருங்கிய உறவினர்களால் பாலியல் வன்முறைக்கு ஆளாகின்றனர் என புள்ளி விபரத் திணைக்களம் அறிவித்தது.

31.08.2024- காணாமல் போனோரின் குடும்பங்களை இலங்கைப் படைகள் தொடர்ந்து துன்புறுத்திவருவதாக இலங்கை மனிதஉரிமை அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

## உலகச் செய்திகள் சில...

04.07.2024- இந்தியா உத்தரப்பிரதேசத்தில் சனநெரிச்சல் 140 பேர் பலி
04.07.2024- பிரேசிலில் வெள்ளம் மண்சரிவு 200 பேர்பலி 5லட்சம் பேர் இடம்பெயர்வு.

07.07.2024- உலகம் முழுவதும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பற்ற உணவுகளால் வருடாவருடம் 60 கோடி மக்கள் நோய்வாய்ப்படுவதாகவும் 4லட்சம்பேர் உயிரிழப்பதாகவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்தது. இந்தியாவில் மட்டும் வருடாவருடம் 33.000 பேர் உயிரிழப்பு.

06.07.2024- ஈரானின் புதிய ஜனாதிபதியாக மசூத் பெசெஸ்கி தெரிவு.

10.07.2024- பிரித்தானிய பாராளுமன்றத் தேர்தலில் தொழிற்கட்சி அமோக வெற்றி.28 இந்திய வம்சாவழியினர் 1 இலங்கைத் தமிழ் வம்சாவழிப் பெண்ணும் வெற்றி.

12.07.24- இந்தியா தமிழ்நாட்டில் மட்டும் 17 வயதிற்குட்பட்டவர்கள் சுமார் 1.58 கோடிபேர் போதைகளுக்கு அடிமை என மதுரை நீதிமன்றம் தெரிவித்தது.

14.07.24- கடந்த 10 மாதங்களாகத் தொடரும் இஸ்ரேல் - பலஸ்தீனம் போரால் 42.000 பேர் பலி. 4லட்சம் பேர் இடம்பெயர்வும் புலம்பெயர்வும். 1 லட்சம் பேர்வரை படுகாயம். 161 ஊடகவியலாளர்களும் பலி

15.07.2024- ஆபிரிக்கா கொங்கோ நாட்டில் போராட்டக்காரர்கள் கலவரம் 100 பேர்வரை பலி.

20.07.2024- வங்களாதேஷில் மாணவர்கள் போராட்டம் 600 பேர்வரை பலி. நாட்டின் கலவரங்கள் வெடிப்பு. 400 பொலிஸ் நிலையங்கள் தரைமட்டம். அரச தலைவர் நாட்டைவிட்டு ஓட்டம் தற்காலிக அதிபராக நோபல் பரிசு பெற்ற பொருளாதர நிபுணர் முகமது யூனிஸ் பதவி ஏற்றார்.

20.07.2024- யேர்மனியில் வருடாவருடம் 61.400 பேர்வரை குடற்புற்றுநோயால் பாதிப்பு. இவர்களில் 70 வீதம்பேர் இறப்பு என சுகாதார தரப்பு தெரிவிப்பு.

25.07.2024- யேர்மனியிலுள்ள சனத்தொகையில் 17 வீதம்பேர் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்கிறார்கள் என புள்ளிவிபரம் தெரிவித்துள்ளது.

26.07.2024 இந்தியாவில் 2018 - 2023 வரை வீதி விபத்துக்களால் 8 லட்சம்பேர்வரை இறப்பு

27.07.24- கடந்த ஆண்டு உலகம் முழுவதும் சுமார் 40 மில்லியன் மக்கள் எயிட்ஸ் நோயினால் பாதிப்பு. இதில் சுமார் 90 லட்சம் மக்கள் சிகிச்சை எதுவும் பெறாமல் வாழ்கிறார்கள் எனவும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவிப்பு.

28.07.2024- எந்தியோப்பியாவில் மழை மண்சரிவு 250 பேர்வரை பலி.

29.07.2024- பலஸ்த்தீன ஹமாஸ் இயக்கத்தலைவர் இஸ்மாயில் ஹனீபா ஈரானில் வைத்து இஸ்ரேலிய உளவுப்படையினரால் படுகொலை.

31.07.2024- இந்தியா - கேரளாவில் மழைவெள்ளம் மண்சரிவு 500 பேர்வரை பலி.350 வீடுகளை வெள்ளம் அடித்துச் சென்றது.

04.08.2024- அமெரிக்காவில் Dell கம்பியூட்டர் நிறுவனத்தில் 12.500 ஊழியர்கள் வேலையிழந்துள்ளனர்.

15.08.2024- தாய்லாந்தின் புதிய பிரதமராக முன்னாள் பிரதமரின் மகள் ஷினவத் ராவை (37வயது) தெரிவாகியுள்ளார்.

20.08.2024- சூடானில் மழை வெள்ளம் 200 பேர்வரை பலி.

22.08.2024- இந்தியா கல்கத்தாவில் பெண் மருத்துவர் வன்புணர்வு கொலை உலகெல்லாம் அதிர்வலைகள்.

25.08.2024- ஆப்கானிஸ்தானில் பெண்கள் பொது இடங்களில் தடை மற்றும் முகத்தையும் உடலையும் காட்டக்கூடாது மீறினால் கடும் தண்டனை தலிபான்கள் அறிவிப்பு.

28.08.2024- இந்தியாவில் 2023ம் ஆண்டில் 16 லட்சம் குழந்தைகளுக்கு எவ்வித தடுப்பூசிகளும் ஏற்றப்படவில்லை என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

30.08.2024- நியூசிலாந்து நாட்டில் பொருளாதார நெருக்கடி கடந்த வருடம் மட்டும் 32.000 பேர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர்.

31.08.2024- ஐரோப்பாக் கண்டத்திலுள்ள 35 நாடுகளில் கடும்வெப்பம் காரணமாகச் சென்ற ஆண்டில் 47.000 பேர் இறப்பு.

# தமிழர் பிரதேசங்களில் புதிய சீரழிவுகள்...






பணம் கூடியதால் புதிய பிரச்சனைகள்...தமிழர் பிரதேசங்களில் சர்ப்பிரைஸ் கிப்ட்டால் (Surprise Gift -ஆச்சரியமான பரிசு)சீரழியும் தமிழர்கள்!

தற்போது சர்ப்பிரைஸ் கிப்ட் என்பது இலங்கை மக்களை பிடித்து ஆட்டுவித்து வருவதாகவும் இதனால் சமூக சீரகேடுகள் இடம்பெறுவதாகவும் சமூக ஆர்வலர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். வெளிநாடுகளில் வாழும் உறவினர்கள் , தாயகத்தில் உள்ள நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு சர்ப்பிரைஸ் கிப்ட் அனுப்புவது பாசஷனாகி விட்டது. பணத்தை மடித்து பூங்கொத்துகளாவும் தெரியாதவர்களிடம் தம் இளம் மனைவிக்காக, இளம் பெண்களுக்காக, காதலர்களுக்காக பரிசுப் பொருட்களை அனுப்புவதுமாக உள்ளனர். இன்னும் சிலர் தமது அன்புக்குரியவர்களுக்கு லட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் பணம், பவுண், உடை, வாகனம், காணி, வீடு, கடை எனப் பலதரப்பட்ட விலை உயர்ந்தவையையும் வேண்டி அன்பளிக்காக வழங்குகிறார்கள்.

பின் விளைவுகள்...

- பெயருக்கும், புகழுக்கும், ஆசைக்குமாக இவைகளை வேண்டிக்கொடுக்கும் புலம்பெயர் நாடுகளில் வாழ்வோர் கடனாளிகளாகவும் மாறுகிறார்கள் இன்னும் சிலர் இதனால் வேலை இழந்தவர்களும் உண்டு. இன்னும் சிலர் அளவுக்கு அதிகமாக வங்கிகளில் கடன் எடுத்து அன்பளிப்புச் செய்தபடியால் தமது வங்கிக் கணக்குகளையும் இழந்து ஒன்றும் செய்யமுடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.
- சர்ப்பிரைஸ் கிப்ட்டால் அளவுக்கு மிதமிஞ்சி பணம் அன்பளிப்புச் செய்யப்படுவதால் தாயக இளம் சமூகமும் மாணவர்களும் ஆடம்பரத்தில் மூழ்கி, பணத்தின் அருமை தெரியாமல் மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களை வேண்டிப் பாவித்து , வாகன விபத்துக்களில் சிக்கி அநியாயமாக உயிரிழக்கின்றனர்.
- இன்னும் பலர் போதைப்பொருள் மற்றும் போதைகளுக்கு அடிமையாகித் தமது வாழ்வை இழக்கின்றனர். இதனால் தாமும் கெட்டுச் சுற்றியுள்ளவர்களையும் கெடப்பண்ணி எதிகாலத்தை இழக்கின்றனர்.
- சர்ப்பிரைஸ் கிப்ட்டால் சில குடும்பங்கள் பிரிந்த சம்பவங்களும் கடந்த காலங்களில் இடம்பெற்றிருந்தன. அதுமட்டுமல்லாது அந்த காணொளிகள் சமூக ஊடகங்களில் பகிரப்படும் நிலையில் , எமக்கு சம்பந்தம் இல்லாதவர்களிடம் காணொளி செல்லும் சந்தர்ப்பங்களும் உள்ளன.
- அதேவேளை தனித்திருக்கும் நபர்களையும் , அவர்களின் வசதிகளையும் அறிமுகம் இல்லா நபர்களிடம் அறியப்படுத்துவதனால், கொலை கொள்ளை, திருட்டு என அதன் பின் விளைவுகள் பாரதூரமாகி விடுகின்ற சம்பவங்களும் அதிகமாகியுள்ளன.

எனவே உங்கள் அன்புக்குரியவர்களுக்கு பணம் மற்றும் பரிசுகள் அனுப்புவது, அதுவும் அறிமுகம் இல்லாதவர்களிடம் அதை கொடுத்தனுப்புவது எத்தனை ஆபத்தை விளைவிக்கும் என்பதை ஆராயாது, இவ்வாறான சர்ப்பிரைஸ் கிப்ட் அனுப்புவது நல்லதல்ல என சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆகவே இவ்விடையம் பற்றி புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்பவர்களும் தாயகத்தில் வாழ்பவர்களும் சற்று சிந்திப்பீர்களாக!...

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப்பொறுப் பேற்றுஉதவும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

1- திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen - 600-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - தியாகராசா டிலானி (பி.தி 10.04.2014)
குருபவராசா ரேணுஸ்றியா (பி.தி 23.08.2012)
றொனி டிலக்சனா (பி.தி 03.08.2014)

.................................................................................................................................

2- திருமதி சிவதர்சினி பிராங்ளின் - Viersen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - றமணன் பிலோமினா (பி.தி 08.04.2012)
- ஜெகஸ்ரீன் மதுசாளினி (பி.தி 02.04.2013)

.................................................................................................................................

3- திருமதி சாந்தினி துரையரங்கன் - Essen - 480-00 யூரோ
சிறீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை
உதவி பெறுவோர்.. - திலக்சிகா கோடீஸ்வரன் (பி.தி 12.05.2008)
மதுஸா சுந்தரலிங்கம் (பி.தி 01.01.2008)

.................................................................................................................................

4- திருமதி அஜந்தி பத்மநாதன் - London - 480-00 யூரோ
செபமாலை இரக்கத்தின் இல்லம்- தலைமன்னார்- மன்னார்
உதவி பெறுவோர்.. - கதிர்விழி சகாயநாதன் (பி.தி 09.05.2008)

.................................................................................................................................

5- திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Bonn - 480-00 யூரோ
சிறீ அகிலாண்டேஸ்வரி "அருளகம்" - வவுனியா
உதவி பெறுவோர்.. - இ. அபிராமி (பி.தி 14.11.2002)

.................................................................................................................................

6- திருமதி அனிதா றஞ்சன் - Duisburg - - 480-00 யூரோ
திருஞானசம்பந்தர் குருகுலம் - களுவாஞ்சிக்குடி - மட்டக்களப்பு
உதவி பெறுவோர்.. சாய்ரிதன் சத்தியசீலன் (பி.தி 07.06.2010)

7- திருமதி ஸ்ரெவ்வானி இம்மானுவல் - Essen - 480-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. அஸ்வினி சுனில்சாந்த் ( பி.தி 09.06.2012)
8- திரு Johannas Grüendler - Köln - 480-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. தட்சாயினி கபிசா ( பி.தி 01.09.2012)
9- செல்வன் பிரணவன் யோகராசா - Düsseldorf - 240-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. சிவராசா பவிதா ( பி.தி 05.09.2011 )

---

- பொறுப்பெடுத்தவர்கள் 9 பேர்.. (ஜேர்மனி, லண்டன்)

- உதவி பெறுவோர் 13 பிள்ளைகள் (தாயகம் - சிறீலங்கா)

---

## 55ம் பக்கத் தொடர்ச்சி......

தொட அதுவும் குறிப்பாக மேற்கு ஜேர்மனிக்கு பயணம் செய்வது தடைசெய்யப்பட்டிருந்தது. கிழக்கு ஜேர்மனியில் இக்காலத்தில் வாழ்ந்த மக்கள் தங்கள் கருத்துக்களை சுகந்திரமாக வெளிப்படுத்த முடியாத திருப்தியற்ற இக்கட்டான நிலையில் இருந்தார்கள். எனெனில் இவர்களை "ஸ்டேடிஸ் (Stasi)" என்னும் இரகசிய சேவை எப்போதும் கண்காணித்து வந்தது. சுருக்கமாக கூறப்போனால் DDRஇல் வாழ்க்கை முறை மிகவும் தனிமையாகவும், கடினமாகவும் இருந்தது. அதனால் அந்நாட்டு மக்கள் காலப்போக்கில் தங்கள் வாழ்க்கையை வெறுத்து புரட்சிகள் செய்தார்கள்.

கிழக்கிலிருந்து மக்கள் மேற்கு ஜேர்மனியை நோக்கி செல்வதைத் தடுக்க 1961ஆம் ஆண்டு கிட்டத்தட்ட 3m உயரமான மதில் 155km நீளத்தில் கட்டப்பட்டது. ஆனால் அப்போது மக்கள் தங்கள் வெறுப்பை வெளிப்படுத்தி , வீதிகளில் ஆர்ப்பாட்டங்கள் செய்ய ஆரம்பித்தார்கள். கிழக்கு ஜேர்மனியின் அரசு குடிமக்களின் அழுத்தத்தை தாங்க முடியாமல் இறுதியாக கார்த்திகை 9ஆம் திகதி 1989ஆம் ஆண்டு அன்று மேற்கு ஜேர்மனிக்கான எல்லையைத் திறந்தார்கள்.

பல நாடுகளின் தலைவர்கள் பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு ஐப்பசி 3ஆம் திகதி 1990ஆம் ஆண்டு மேற்கு மற்றும் கிழக்கு ஜேர்மனி மீண்டும் ஒன்றாக இணைந்து ஒரு நாடாக மாறியது. இன்று அச்சுவர் ஜேர்மனிய ஒற்றுமையின் அடையாளமாகவும், சுதந்திரத்தின் பிரகடனமாகவும் நினைவுகூறப்படுகிறது. ஆனால் எல்லைகள் ஒன்றிணைந்தாலும், இன்று வரை இரு பகுதிகளுக்கும் இடையே சில வேறுபாடுகள் இருந்த கொண்டே இருக்கின்றன. இருப்பினும் இத்தினம் வெற்றிகரமாக ஜேர்மனியில் வாழும் மக்களால் "Tag der deutschen Einheit " என்று ஆண்டுதோறும் கொண்டாடப்படுவதுடன் இது ஜேர்மனி முழுவதும் ஓர் பொது விடுமுறை நாளாகவும் அங்கீகரிக்கப்பட்டது.

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு..

ஆரம்ப இருப்பு 01-07-2024 + 812-23

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Viersen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
02. செல்வி. அனித்தா றஞ்சன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
03. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
04.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
05. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
06. திரு. Johannas Gruendler - Köln + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
07. திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen +100-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)------------

\+ 580-00 + 580-00

---------------

+1.392-23

அன்பளிப்புகள்...

08. திரு வை.சிவராசா (மண்) - Duisburg + 100-00
(தந்தையாரின் நினைவுதின அன்பளிப்பு)
09. திரு ப.பிரபாகரன் - Oberhausen + 107-50
(தாயாரின் நினைவுதின அன்பளிப்பு)
09. திருமதி மேரி விஜயகுமார் - Stuttgart + 200-00
(கல்வி மேம்பாட்டு உதவி (ஆடி + ஆவணி)
10. திருமதி மங்கை சிவராசன் - Stuttgart + 200-00
(கல்வி மேம்பாட்டு உதவி (ஆடி + ஆவணி)
11. செல்வி காத்மி வரதராசன் - Düsseldorf + 50-00
(பிறந்நாள் அன்பளிப்பு)

..............................................

657-50 + 657-50

----------------

\+ 2..049-73

முற்பக்கப்படி + 2.049-73

**அனுப்பியது...**

| | ரூபா | யூரோ |
|---|---|---|
| 1)"ஒளிரும் வாழ்வகம்" மல்லாவி துணுக்காய் | | |
| 24.07.2024 -(திரு வை.சிவராசா-மண்) | 30,201-25 | - 100-00 |
| 02.08.2024 -(திரு ப.பிரபாகரன்) | 32.442-00 | - 107-50 |
| 2)"செபமாலை" இரக்கத்தின் இல்லம் | | |
| தலைமன்னார்.06.09.2024 (அஜந்தி) | 1.55.650-95 | - 480-00 |
| 3)"நல்லாயன் சிறுவர் இல்லம்" மாங்குளம் | | |
| 06.09.2024 - மேரி + மங்கை | 1.29.364-07 | - 400-00 |
| 4) "அன்பகம்" - வவுனியா | | |
| 06.09.2024 - (மண்) | 2.27.629-22 | - 700-00 |

...............

-1.787-50 - 1.787-50

------------------

\+ 262-23

மண் சஞ்சிகை வக்கிக்கணக்கு வங்கிவரி

01.07.2024 - 31.07.2024 - 16-99

01.08.2024 - 31.08.2024 - 18-39 ................................................ - 35-38

-------------

31.08.2024 மீதி கையிருப்பு **+ 226-85**

-----------------









# இந்த இதழுடன்!...

- "மண்" சஞ்சிகையின் 35 வது ஆண்டு (1990 -2025) நிறைவுப் போட்டிகள் பற்றிய விபரங்கள் இந்த இதழுடன் வெளிவந்திருக்கின்றன.
- சிறியவர்கள், மாணவமணிகள், இளையோர்கள், எழுத்தாளர்கள் எனப் பல தரப்பினருக்குமான பல போட்டிகள் நடைபெறவுள்ளன.
- ஆவலுடையவர்கள் அனைவரும் பங்குகொள்ளலாம். அத்தனை போட்டிகளும் இலவசமானவை..

\- ஆசிரியர் -

ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
ඔළිරුම්වාළ්වු සංවිධානය - තුණුක්කායි
**Olirumvaalvu Organization - Thunukkai**

Re.No:- MU/DS/TNK/RVSS/22/2015 T.P:- 0212060610 [illegible] Fax:-0774868085 Farm No:-0213204790 Viber:-0774868085 Mobile:-0774868085

திகதி 07/05/[illegible]

வை.சிவராஜா
பிரதம ஆசிரியர்
மண் கலை இலக்கிய சமூக சஞ்சிகை
ஜேர்மனி

**நன்றி நவில்கிறோம்**

எமது ஒளிரும்வாழ்வு அமைப்பானது மாற்றுத்திறனாளிகள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், ஆதரவற்ற முதியோர், பெண்தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் நலிவுற்ற குடும்பங்கள் ஆகிய இலக்கு குழுவினர் மத்தியில் பணியாற்றி வருகிறது. அந்த வகையில் அமரர் திருமதி பரமானந்தம் பூமணி அவர்களின் 2ம் ஆண்டு நினைவாக எமது அமைப்பிற்கு வழங்கிய ரூபா 32442.00ஐ பயன்படுத்தி ஆதரவற்ற முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளிற்கு மதிய உணவு மற்றும் உலர் உணவுப்பொதியும் வழங்கியுள்ளோம் என்பதை தங்களிற்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

அமரர் பரமானந்தம் பூமணி அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம். தொடர்ந்து எமது அமைப்புடன் பயணித்து பல்வேறு திட்டங்களிற்கு எம்மையும் உள்வாங்கும் அடிப்படையில், இத் திட்டத்திற்கும் எமது அமைப்பை உள்வாங்கியமைக்கு "மண் கலை இலக்கிய சமூக சஞ்சிகை" குழுமத்தினருக்கு எமது ஒளிரும்வாழ்வு அமைப்பு சார்பாக அகம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

" நன்றி "

சி. சிவகன்

www.olirumvaalvu.com olirumvaalvuthunukkai2012@gmail.com olirumvaalvu thunukkai

ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
ඔලිරුම්වාල්වු සංවිධානය - තුණුක්කායි
Olirumvaalvu Organization - Thunukkai

T.P:- 0212060620 Fax:-0774868085
FarmNo:-0213204790 Viber:-0774868085
Mobile:-0774868085


Re.No:- MU/DS/TNK/RVSS/22/2015

திகதி [illegible]/02/2024

வைசியாஜா

பிரதம ஆசிரியர்

மண் கலை இலக்கிய சமூக சஞ்சிகை

ஜேர்மனி

## நன்றி நவில்கிறோம்

எமது ஒளிரும்வாழ்வு அமைப்பானது மாற்றுத்திறனாளிகள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், ஆதரவற்ற முதியோர், பெண்தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் நலிவுற்ற குடும்பங்களை ஆகிய இலக்கு குழுவினர் மத்தியில் பணியாற்றி வருகிறது. அந்த வகையில் அமரர் வைரமுத்து தங்கம்மா அவர்களின் நினைவாக எமது அமைப்பிற்கு வழங்கிய ரூபா 30201.25 ஐ பயன்படுத்தி ஆதரவற்ற முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளிற்கு மதிய உணவு மற்றும் உலர் உணவுப்பொதியும் வழங்கியுள்ளோம் என்பதை தங்களிற்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

அமரர் வைரமுத்து தங்கம்மா அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம். தொடர்ந்து எமது அமைப்புடன் பயணித்து பல்வேறு திட்டங்களிற்கு எம்மையும் உள்வாங்கும் அடிப்படையில், இத் திட்டத்திற்கும் எமது அமைப்பை உள்வாங்கியமைக்கு "மண் கலை இலக்கிய சமூக சஞ்சிகை" குழுமத்தினருக்கு எமது ஒளிரும்வாழ்வு அமைப்பு சார்பாக அகம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

" நன்றி "


www.olirumvaalvu.com Mshirumvaalvuthunukkai2012@gmail.com olirumvaalvu thunukkai







## தலைமுறை நோக்கிய பயணத்தில் சாதனை...

(கலைவாணி.ஏகானந்தராஜா)

எம்மில் பலர் குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டுபவர்களே. ஒருவர் எதை செய்கிறாரோ..அதையே தாமும் செய்வர். ஒரு புத்தகத்தை வெளியிடும்போதும் வேறு புத்தகங்களை தேடல் செய்து தேவைக் கேற்றதை தெரிந்து செய்ய வேண்டியதே சிறப்பாகும்.

யேர்மனியில் வாழும் திருமதி. இராஜேஸ்வரி. சிவராசா அவர்கள் தலைமுறை நோக்கிய பயணத்தில் சிறப்பான சாதனை படைத்துள்ளார். அண்மையில் அவர் வெளியீடு செய்த " சிறுவர் மலர்" புத்தகத்தை நான் பெற்றுக்கொண்டேன். வழமைபோல் அண்ணா, அக்கா, அம்மி, ஆட்டுக்கல் என்று எழுதாது இடம் பொருள் ஏவல் தெரிந்து நாம் வாழும் நாட்டில் மாணவர்கள் அறிந்த சொற்களை பயன்படுத்தி அடுத்த தலைமுறைக்கு பயன்படும்வகையில் எழுதியுள்ளார்.

இங்கு முக்கியமாக குறிப்பிடவேண்டியது என்னவெனில், இந்தப் புத்தகத்தின்மூலம் எமது பிள்ளைகள் தமது கற்றல் மொழியிலிருந்து தமிழை கற்றுக்கொள்வதுடன் ஆங்கிலத்திலும் அந்த சொற்களை கற்றுக்கொள்ள முடியும். அத்துடன் ஒரு ஜேர்மனிய குழந்தை கூட மிக இலகுவாக தமிழ், ஆங்கிலம், ஜேர்மன் மொழிகளில் பல விடயங்களை கற்றுக்கொள்ளக்கூடிய வகையில் படங்களுடன் கூடிய விளக்கங்களும், கண்ணைக் கவரும் படங்களும் குழந்தைகளுக்கு ஆர்வத்தை தூண்டும் வகையில் அமைந்துள்ளது.

திருமதி. இராஜேஸ்வரி. சிவராசா அவர்களின் இந்த முயற்சியை நிச்சயம் பாராட்ட வேண்டும். இவர் தொடர்ந்தும் அடுத்த வகுப்புகளுக்கான பாடப் புத்தகங்களை தமிழ் - டொச மொழிகளில் வெளியிட வேண்டும் என கேட்டு, எல்லாம் வல்ல இறைவன் இவருக்கு சகல சௌபாக்கியங்களையும் கொடுக்கவேண்டும் என வாழ்த்தி வணங்குகிறேன்.

"மண்"கல்வி,கலை,இலக்கிய,சமூக சஞ்சிகை-யேர்மனி
(ஆரம்பம் - 1990) - தொண்டு நிறுவனம்
"ERDE" e.V. Stiftung &Tamilisches Magazin - Deutschland
"MANN" (Earth) Foundation & Tamil Magazine - Germany
AmWindhövel-18a, 47249-Duisburg
Tel 49 203 8073898 , 49 15254799233 Emai v.sivarajah @ arcor.de

---

அன்புள்ளங்கள் அனைவருக்கும் வணக்கம்!...



# " சிறுவர் மலர் "



(தமிழ், டொச், ஆங்கிலம்)

புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ்ச்சிறுவர்களின் நலன்கருதி தமிழ்-டொச்-ஆங்கிலம் என மும்மொழிகளில் " சிறுவர் மலர் " ஒன்றை எழுதி, அச்சுப்பதிவு செய்து 01.09.2024 அன்று வெளியீடு செய்துள்ளேன் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றேன்.

எமது தாய்மொழியாம் தமிழோடு யேர்மன் மொழியான டொச் மற்றும் உலக மொழியான ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இந்தச் சிறுவர்மலர் அழகிய வர்ணப்படங்களுடன் வெளிவந்துள்ளது.

இந்த மலரானது சிறுவர்களுக்கு மட்டுமல்லாது பல வயதினருக்கும் பயன்படும் என்பது எனது எண்ணமாகும். எனவே இம்மலர் ஒன்றைப் பெற்றுக்கொண்டு உங்கள் அன்பளிப்புகளை வழங்குவீர்கள் என அன்போடு எதிர்பார்க்கின்றேன்.

இப்புத்தகத்தை உங்கள் செல்லக் குழந்தைகள், சிறுவர்களின் பிறந்தநாள் பரிசாகவும் கொடுத்து உதவலாம். எனவே தேவைப்படுவோர் எம்மோடு தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுங்கள். விரும்பியவர்கள் முகவரியை அனுப்பி வைத்தால் தபால்மூலம் அனுப்பி வைப்போம். உங்கள் பேராதரவிற்குப் பெரு நன்றிகள்!..

திருமதி இராஜேஸ்வரி சிவராசா

நூலாசிரியர் - யேர்மனி 01.09.2024

உங்கள் நிதிப்பங்களிப்பை கீழ்க்காணும் வங்கி விபரத்திற்கு அனுப்பி உதவலாம்... நன்றிகள்!...அன்புள்ளங்களே!..

Vyramuthu Sivarajah
Stadtsparkasse Duisburg
Kontonummer: 325 030 583
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr: DE 26 3505 0000 0325 0305 83
SWIFT-BIC: DUISDE33XXX




## யேர்மனியில் வெளியீடுகண்ட சிறுவர் மலர்...

ஜேர்மனி Duisbug நகரில் 35 வருட காலமாக வெளிவந்து கொண்டிருக்கும் "மண் சஞ்சிகை " யின் பிரதம ஆசிரியரின் மனைவியும் அந்த சஞ்சிகையின் உதவி ஆசிரியருமான இராஜேஸ்வரி சிவராசா அவர்களினால் மூன்று மொழிகளில் எழுதப்பட்ட "சிறுவர்மலர்" (தமிழ்-டொச்-ஆங்கிலம்) 29.08.24 அன்று மெய்நிகர் (zoom) வழியாக ஜேர்மனிய தமிழர் எழுத்தாளர் சங்கத்தினால் வெளியிடப்பட்டது. யேர்மனிய தமிழர் வரலாற்றில் மூன்று மொழிகளில் எழுதப்பட்ட முதலாவது வெளியீடு என்பது குறிப்பிடத்தக்க விடையமாகும்.

இந்த வெளியீட்டு நிகழ்வில் பல எழுத்தாளர்கள், கலைஞர்கள், கல்வியாளர்கள் பங்குகொண்டு நூலாசிரியரை வாழ்த்தி மகிழ்ந்தனர். யேர்மனியில் இளந்தலைமுறை மாணவி செல்வி நீதினி தவகுமார் மற்றும் தமிழாசிரியரும் இசை ஆசிரியருமான செல்வன் கஜன் சிவபாலன் ஆகிய இருவரும் நூலினை ஆய்வுசெய்து கருத்துக்களையும் வழங்கினார்கள். அவர்களை ஊக்கம்கொடுத்து அறிமுகம் செய்த தமிழாசிரியர், நடன ஆசிரியர் திருமதி சாந்தினி துரையரங்கன் அவர்களுக்கும் மிக்க நன்றிகள். இந்த நிகழ்வில் யேர்மனி, இலங்கை, சுவீஸ்லாந்து, நெதர்லாந்து நாடுகளிலிருந்தும் பல எழுத்தாளர்கள் கலந்துகொண்டு வாழ்த்தி மகிழ்ந்தனர். யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளர் திரு சிவவினோபன் அவர்களினால் வரிகள் எழுதப்பட்டு AI தொழில் நுட்ப உதவியுடன் பாடலாக்கப்பட்டு ஒலி, ஒளி வீடியோ வெளியீட்டுப் பாடல் (உரைச் சித்திரம்) மிகச் சிறப்பாக இருந்தது. இந்த சிறுவர்மலர் அனைத்துச் சிறுவர்கள் இளைய தலைமுறையினர் வீடுகளிலும் கட்டாயமாக இருக்க வேண்டிய ஒரு நூல் ஆகும். அவர்களிடம் தொடர்பு கொண்டு வாங்கி உங்களுடைய பிள்ளைகளுக்கும் தமிழ்மொழியை சொல்லிக்கொடுக்குமாறு அன்போடு வேண்டுகின்றேன்.

**லக்சிகா தவகுமார் (உயர்வகுப்பு மாணவி)**

மண் சஞ்சிகையின் வாசகர் (London) திரு வைரமுத்து சீனிவாசன் அவர்களின் நிதிப்பங்களிப்பில் அவரின் தாய் - தந்தையரான தங்கம்மாவைரமுத் து நினைவாக மட்டக்களப்பிலுள்ள ஒரு சிறிய கிராமத்தின் வறியகுடும்பம் ஒன்றிற்குப் புதியவீடு 09.08.202 கட்டிக் கொடுக்கப்பட்டது.









மண் சஞ்சிகையின் ஆசிரியர் (Duisburg) வைரமுத்து சிவராசா அவர்களின் நிதிப்பங்களிப்பில் அவரது பெற்றோரின் நினைவாக மல்லாவி - துணுக்காயிலுள்ள ''ஒளிரும் வாழ்வு'' இல்லத்தினரால் பராமரிக்கப்படும் ஆதரவற்றோர், மாற்றுத்திறனாளிகள், முதியோருக்கு 27.07.2024 அன்று உணவு வழங்கல்..









Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

MANN
Germany / Ausgabe 227



**Viraj Mendis**

**(1956 - 2024)**

**International Human Rights Association / Bremen - Germany**

அமரர் விராஜ் மெண்டிஸ்

தமிழர் நல மேம்பாட்டாளர், மனித உரிமைச் செயற்பாட்டாளர்
பிறீமன் - யேர்மனி



| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 20€ |
| | ஏனைய நாடுகள் | 25€ |